செங்காந்தள்

மலர் 5, இதழ் 2, வைகாசி 2057

செங்காந்தள்

அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்

முதன்மை ஆசிரியர்

முனைவர் ஜெ. கவிதா
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
பிஎஸ்ஜி ஆர் கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி,
கோயம்புத்தூர் - 641004, தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல்: jkavitha@psgrkcw.ac.in
பணியிட முகப்புப் பக்கம்: https://psgrkcw.irins.org/profile/135958

துணை ஆசிரியர்கள்

முனைவர் செ. சாந்தி
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அய்ய நாடார் ஜானகிஅம்மாள் கல்லூரி,
சிவகாசி - 626123, தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல்: shanthi_sf607@anjaconline.org
பணியிட முகப்புப் பக்கம்:
https://anjaconline.org/Departments/Page/BATamil

முனைவர் அ. பரணிராணி
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
நா. ம. ச. ச.வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி,
மதுரை- 625019, தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல்: mahesparani@gmail.com
பணியிட முகப்புப் பக்கம்: https://nmssvnc.edu.in/academics/departments/department-of-tamilaided/

ஆசிரியர் குழு

முனைவர் எஸ். கேசவன்
பேராசிரியர் (ஓய்வு), இந்து நாகரிகத் துறை,
கலை கலாசாரப் பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
மின்னஞ்சல்: kesavans@esn.ac.lk
பணியிட முகப்புப் பக்கம்:
https://www.fac.esn.ac.lk/hindu-civilization/academic-staff/s-kesavan

முனைவர் பொன்னையா விவேகானந்தன்
தமிழ் விரிவுரையாளர், மொழியியல் துறை,
டொராண்டோ ஸ்கார்பரோ பல்கலைக்கழகம்,
கினா வியா எனடாங் கட்டிடம், டொராண்டோ.
மின்னஞ்சல்: ponniah.vivekanandan@utoronto.ca
பணியிட முகப்புப் பக்கம்:
https://utsc.utoronto.ca/dls/ponniah-vivekanandan

கலாநிதி பே. சச்சிதானந்தம்
சிரேஷ்ட விரிவுரையாளர், ஒப்பீட்டுச் சமய சமூக நல்லுறவுத் துறை, கலை கலாசாரப் பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
மின்னஞ்சல்: sachithananthamp@esn.ac.lk
பணியிட முகப்புப் பக்கம்: ht
https://www.fac.esn.ac.lk/comparative-religion-social-harmony/academic-staff

முனைவர் த. ஆதித்தன்
இணைப் பேராசிரியர்,
அரிய கையெழுத்துச் சுவடித் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்,
தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல்: kumaritathithan@gmail.com
பணியிட முகப்புப் பக்கம்: https://tinyurl.com/bdd6pf5r

முனைவர் மம்தா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
டெல்லி பல்கலைக்கழகம்,
டெல்லி - 110007, இந்தியா.
மின்னஞ்சல்: jnu.mamta@gmail.com
பணியிட முகப்புப் பக்கம்:
http://www.du.ac.in/uploads/du/Faculty%20CV/Linguistics/Linguistics_Mamta.pdf

முனைவர் பா. ஜெய்கணேஷ்
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அறிவியல் மற்றும் கலையியல் புலம்,
எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், காட்டாங்குளத்தூர் - 603203,
தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல்: jaiganeb@srmist.edu.in
பணியிட முகப்புப் பக்கம்:
https://www.srmist.edu.in/faculty/b-jaiganesh/

முனைவர் த. மகேஸ்வரி
பாண்டியன் கல்வி அறக்கட்டளை,
விருதுநகர் - 626001, தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல்: president@pandianeducationaltrust.com
பணியிட முகப்புப் பக்கம்:
http://pandianeducationaltrust.com/trustees.html

பதிப்பாசிரியர் குழு பணி விவரம்/ Editorial Work Flow Details

இந்த இதழ் குழு, (எடிட்டோரியல்) நேர்மையான பதிப்பு நெறிமுறைகளின் படி அறிவார்ந்த கட்டுரைகளை நெறிமுறைக் கொள்கைகளுடன் தொகுத்துள்ளது. இது சமர்ப்பித்தல், கருத்துத் திருட்டு சரிபார்ப்பு, திருத்தங்கள், சக மதிப்பாய்வு செயல்முறை, (டபுள் பிளைண்ட்), பெரிய திருத்தங்கள் அல்லது சிறிய திருத்தங்கள், பரிந்துரைகள் மற்றும் திருத்தம், ஏற்பு, மூல கோப்பு தயாரித்தல் மற்றும் இணையதள தயாரிப்பு மற்றும் வெளியீடு ஆகியவற்றை உள்ளடக்கியது.

This issue committee curated the scholarly articles with ethical princples according to the norms of the Editorial work flow. It contains of submission, plagiarism check, correction, peer review process, (Double Blind), major corections or minor corrections, suggestions and rectifications, acceptance, copy editing and production and publication online.

பதிப்பகத்தார்:

பாண்டியன் கல்வி அறக்கட்டளை (TN32D0026797, UDYAM-TN-32-0003213)
மகேஸ்வரி பப்ளிசர்ஸ், (பாண்டியன் கல்வி அறக்கட்டளையின் வெளியீட்டுப் பிரிவு)
3-350, கால்நடை மருத்துவமனை பின்புறம்,
விருதுநகர் - 626001, தமிழ்நாடு, இந்தியா.
Mobile: +91 8526769556
E-mail id: chenkaantal@pandianeducationaltrust.com

காப்புரிமை © 2026 - கட்டுரையாளருக்கே

செங்காந்தள் சிசி பிஓய் கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0 இன்டர்நேசனல் உரிம http://Creativecommons.org//license/by/4.0/. பயன் கொண்டுள்ளது. இது உண்மையான படைப்புக்களை தகுந்த முறைகளுடன் பயன்படுத்த, விநியோகிக்க மற்றும் மீட்டு உருவாக்கம் செய்ய அனுமதிக்கிறது.

வெளியீட்டாளர் செய்தி

குறிக்கோள்

செங்காந்தள் **(E-ISSN: 2583-0481)** அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ் ஆகும். இவ்விதழ் வருடத்திற்கு இரண்டு முறை கார்த்திகை (நவம்பர்) மற்றும் வைகாசி (மே) மாதங்களில் மகேஸ்வரி பதிப்பகத்தால் (பாண்டியன் கல்வி அறக்கட்டளை) வெளியிடப்படுகிறது. மேலும், ஆராய்ச்சியை வளர்ப்பதற்காக ஆங்கில ஆய்வுகள் மற்றும் கோவில் ஆய்வுகளுக்கான இதழ்களை வெளியிடும் பணியைச் செய்து வருகிறது. இவ்விதழ் கல்வியாளர்கள் மற்றும் அறிஞர்கள் ஆராய்ச்சியை மின் வெளியீடு மூலம் ஊக்குவித்து வருகிறது. உலகமயமாக்கப்பட்ட ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வது, அறிஞர் சமூகத்திற்கு ஆய்வு வெளியீடுகளின் மூலம் ஆராய்ச்சியில் அறிவார்ந்த நிலையை வளர்க்க உதவுகிறது. இணையத்தில் கல்வி ஆராய்ச்சியில், திறந்த நிலை அணுகல், உலகின் மேம்பாட்டிற்கு சாதகமான விளைவுகளை உருவாக்கும் என ஊக்குவித்தும் வருகிறது.

பொறுப்புத்துறப்பு அறிக்கை

செங்காந்தள் ஆராய்ச்சி நெறிமுறைகளைப் பின்பற்றி ஆராய்ச்சி செய்வதில் உறுதியாக உள்ளது. கருத்துத் திருட்டை ஒரு குற்றமாகக் கருதுகிறது. ஆய்வாளர்கள் மற்ற படைப்புகளிலிருந்து மேற்கோள்களை எவ்வாறு பயன்படுத்துவது தொடர்பாக சிறந்த கல்வி நெறிமுறைகளைக் கடைபிடிக்க அறிவுறுத்தப்படுகிறார்கள். தங்கள் படைப்பில் கருத்துத் திருட்டு தொடர்பான எந்தவித பிழைகளுக்கும் வெளியீட்டாளர் மற்றும் பதிப்பாசிரியர்கள் பொறுப்பேற்க மாட்டார்கள். உங்கள் ஆய்வுக்கட்டுரையை ஆராய்ச்சி நெறிமுறைகளைப் பின்பற்றி முறையான படைப்பாகச் சமர்பிக்கும் பொழுது ஒப்புக்கொள்ளும் படிவம் இணைந்து இருக்க வேண்டும். மேலும், வேறு எந்த ஆராய்ச்சி நோக்கத்துக்காகவும் வெளியிடப்படவில்லை என்று உறுதி அளிக்க வேண்டும். எந்தவொரு சட்ட சிக்கல்கள் மற்றும் குறைபாடுகளுக்குக் கட்டுரையாளர் மட்டுமே பொறுப்பு. சமர்ப்பிப்பு மற்றும் பிற தகவல்களுக்கு chenkaantal@pandianeducationaltrust.com ஐ தொடர்பு கொள்ளவும். வழிகாட்டுதல்களுக்கு http://pandianeducationaltrust.com/journals.html ஐப் பார்க்கவும்.

பதிப்பகத்தார்

தலைமையாசிரியர் செய்தி

செங்காந்தள் என்பது தமிழ் சார்ந்த ஆராய்ச்சிகளை மேம்படுத்த உருவாக்கப்பட்ட மின்ஆய்விதழாகும். உலகெங்கிலும் உள்ள அறிஞர்கள் மற்றும் மாணவர்களிடம் இருந்து அவர்களின் அறிவார்ந்த கருத்துக்களால் கல்வி நிலை மற்றும் சமுதாயத்தின் நிலையை முன்னேற்ற நல்ல ஆய்வுப்படைப்புகள் வரவேற்கப்படுகின்றன. கல்வி உலகில் ஒரு பெரிய களத்தை உருவாக்க ஆராய்ச்சி தீவிரமாக இருக்க வேண்டும். ஆராய்ச்சி என்பது உண்மைகளை நிலைநிறுத்துவது, ஆதாரங்களை உறுதிப்படுத்துவது, முந்தைய படைப்புகளை மறுசீரமைப்பது மற்றும் சிக்கல்களைத் தீர்ப்பது ஆகும். கல்வி ஆராய்ச்சி மூலம் கல்விச் சீர்திருத்தங்களுக்கான நெறிமுறைகளை ஏற்படுத்தி வழங்குவதும் முறையான அணுகுமுறையை ஏற்படுத்துவதும் இவ்விதழின் மைய நோக்கமாக மாறியுள்ளது. இந்த இதழில் பதினொன்று படைப்புகளை ஆராய்ச்சி ஆய்வுலகிற்கு வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

முனைவர் ஜே. கவிதா

Title Verso

Journal title : Chenkaantal
Editor Name : Dr. J. Kavitha
Publication frequency : May and November
Volume/Issue : Volume 5 Issue 2
Place of Publication : Virudhunagar
Date of Publication : May 2026
Paper Size : Digital A4 Size
Medium of Publication: E-version
Access Type (URL or DOI): Diamond OA, Online, Indexed long time in Internet Archive
Subscription Type : Non-APC
Publisher : Pandian Educational Trust(Maheswari Publishers)
Publisher Website : https://pandianeducationaltrust.com/
Journal Site : http://pandianeducationaltrust.com/-chenkaantal.html
Indexing Status : MLA, DOAJ, ROAD, MIR@BEL, OPF, HAL, EBSCO, Internet Archive
MLA : https://miar.ub.edu/indizadaen/2583-0481/mla
DOAJ : https://doaj.org/toc/2583-0481
ISSN Portal/ROAD : https://portal.issn.org/resource/issn/2583-0481
Mir@bel : https://reseau-mirabel.info/revue/12396/Chenkaantal-cenkantal
OPF/Sherpa Romeo : https://openpolicyfinder.jisc.ac.uk/id/publication/42829
MIAR : https://miar.ub.edu/issn/2583-0481
HAL : https://hal.science/search/index/q/*/journalId_i/1076398
SUDOC : https://www.sudoc.abes.fr/cbs/DB=2.1//SRCH?IKT=12&TRM=260670820

Note: For other indexing status see webpage.

Pandian Educational Trust supports SDG Goals and is a member of UN SDG Publisher compact.

பொருளடக்கம் / Contents

வ.எண் S.No	தலைப்பு / பெயர் Title / Author Name	பக்க எண் Page No.
1	எழுத்தியல் சொல்லியல் நோக்கில் யாப்பியல் Grammar from the Perspective of Literary Rhetoric முனைவர் இரா. அன்சல்யா / Dr. R. Ansalya	1 - 12
2	ஞானக்கூத்தன் கவிதைகளில் அழகியல் Aesthetics in the Poems of Gananakoothan முனைவர் ர. ஆர்த்தி / Dr. R. Aarthi	13 - 22
3	ஆனைமலை புலிகள் காப்பக மலசர் பழங்குடிகளின் சமூகப் பண்பாட்டு இயங்கியல் Socio-Cultural Dialectics among the Malasar Tribal Communities of the Anamalai Tiger Reserve ச. கல்பனா / S. Kalpana முனைவர் ச. குருஞானாம்பிகா / Dr. S. Gurugnanambiga	23 - 36
4	கொங்கு வேளாளரின் பழக்கவழக்கங்களும் பண்பாடும் Customs and culture of Kongu Vellar த. திவ்யா / D. Divya முனைவர் த. நாகம்மாள் / Dr. T. Nagammal	37 - 50
5	சங்க இலக்கியங்களில் ஆடை மற்றும் ஆபரணங்களின் சமூகப் பின்புலம் Social Context of Clothing and Ornaments in Sangam Literature முனைவர் ரெ. ராதிகா / Dr. R. Radhika	51- 63
6.	தமிழகப் பழங்குடியின மக்களின் வாழிடச் சூழலும் பொருளாதார நிலையும் Habitat and Economic Conditions of the Tribal Communities of Tamil Nadu ஆ. தீபிகா / A. Deepika முனைவர் ச. பிரியதர்ஷினி / Dr. C. Priyadharshini	64 - 77
7.	தமிழ் இலக்கியங்களில் தாமிரபரணியின் தொன்மையும் சிறப்பும் Antiquity and Importance of Tamirabarani in Tamil Literature முனைவர் இரா. விஷ்ணுப்பிரியா / Dr. R. Vishnupriya	78 - 90

Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 5, Issue - 2, May 2026 E-ISSN: 2583-0481
MLA, DOAJ Indexed

Grammar from the Perspective of Literary Rhetoric

Dr. R. Ansalya, Assistant Professor of Tamil,
Queens College of Arts and Science for Women, Pudukkottai, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0000-8105-1827
DOI: 10.5281/zenodo.20473878
Received: 11 December 2025; **Revised:** 15 February 2026; **Accepted:** 27 March 2026; **Available Online:** 31 May 2026

Abstract

Tolkappiyam is not only the foremost grammar book of the Tamil language but also serves as the foundational theoretical work of Tamil literature. Tolkappiyar took the grammatical content prevalent in his times and analysed the three aspects of literature- form, content, and artistic beauty and formulated Tamil literary theory. It is only against this background of literary theory that the prosody (yāppiyal) of Sangam literature can be understood and comprehended. Yāppiyal is the field that explains the structural grammar of poems. Tolkappiyar has distributed the elements of prosody across all three sections: the Ezhuttadikaram (Orthography Section), the Solladikaram (Etymology Section), and the Poruladikaram (Content Section). Basic elements such as measure (māttirai) and letter (ezuttu) are included in the Ezhuttadikaram; elements such as tradition (marapu), ellipsis (eccam), and preface (munnam) are included in the Solladikaram; and elements such as syllable-unit (asai), metrical foot (cīr), line (adi), prosodic structure (yāppu), modulation (tūkku), alliteration/rhyme (toṭai), perspective (nōkku), verse type (pā), measure (aḷavu), beauty (vaṉappu), and mode (vaṇṇam) are included in the "Poetry Section" (Ceyyuḷiyal) of the Poruladikaram. The connections and differences between the prosodic grammar theories of Tolkappiyar's time and later treatises on prosodic grammar are being studied. Specifically, how the concepts such as measure (māttirai), letter (ezuttu), the short vowel 'u' after a consonant (kuṟṟiyalukaram), the shortening of 'ai' and 'au' (aikāra-aukāra-kuṟṟukam), and elongation (aḷapedai) mentioned in the Ezhuttadikaram are modified in poetic practice, as well as how the elements such as tradition (marapu), ellipsis (eccam), and preface (munnam) mentioned in the Solladikaram apply to prosody, are examined in detail. These theories are explained by taking Sangam literary poems as examples. Through this study, it becomes clear that Tolkappiyar has designed prosodic grammar as an integrated theory across the three levels of orthography, etymology, and semantics and those later prosodic grammarians have made certain alterations to them. The aim of this article is to analyze the elements of prosody in an integrated manner from the perspectives of orthography and etymology.

Keywords: Tolkappiyar, Orthography, Morphology, Parts of Speech, Prosody, Metrics.

References

[1] Ilampooranam. *Tholkappiyam, Sollathikaram*. Kazhakam Veliyeedu, Chennai, 1973.
[2] *Iraiyanar Kalaviyal Urai*. Kazhakam Veliyeedu, Chennai, 1976.
[3] Kanthasami, So. Na. *Thail Yaappiyalin Thotramum Valarchiyum*. Thamilppalkalaikazhakam, Thanjavoor, 1989.
[4] *Kurunthogai*. U. Ve. Saa Pathippu, Chennai, 1955.
[5] Tholkappiyar. *Tholkappiyam Ezhuthathikaram*. Nachchinaarkkiniyar Urai, Kazhakap Pathippu, Chennai, 1954.
[6] *Tholkappiyach Chooththira Viruththi*. Thiravavaduthurai Aatheena Veliyeedu, 1968.

[7] *Tholkappiyam, Sollathikaram*. Theyvachchilaiyar Urai, Kazhakam Veliyeedu, Chennai, 1963.
[8] Tholkappiyar. *Tholkappiyam Sollathikaram*. Senaavaraiyar Urai, Kazhakap Pathippu, Chennai, 1952.
[9] Tholkappiyar. *Tholkappiyam Porulathikaram*. Peraasiriyar Urai, Kazhakap Pathippu, Chennai, 1975.
[10] Vellai Vaaranan, Ka. Pa. *Tholkappiyam.* Annamalai Palkalaikazhakam, Annamalainagar, 1970.

Author Contribution Statement: NIL.
Author Acknowledgement: Nil
Author Declaration: Nil
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்

மலர் - 5, இதழ் - 2, வைகாசி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

எழுத்தியல் சொல்லியல் நோக்கில் யாப்பியல்

முனைவர் இரா. அன்சல்யா, உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை,
குயின்ஸ் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, புதுக்கோட்டை, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0000-8105-1827

ஆய்வுச் சுருக்கம்

தொல்காப்பியம் தமிழ்மொழியின் முதன்மையான இலக்கண நூலாக மட்டுமன்றித் தமிழிலக்கியத்தின் அடிப்படைக் கோட்பாட்டு நூலாகவும் விளங்குகின்றது. தொல்காப்பியர் தம் காலத்தில் நிலவிய இலக்கியங்களைத் தரவுகளாகக் கொண்டு இலக்கியத்தின் வடிவம், உள்ளடக்கம், கலைநயம் ஆகிய மூன்றினையும் ஆராய்ந்து இலக்கியக் கோட்பாட்டை வகுத்தளித்தார். இந்த இலக்கியக் கோட்பாட்டுப் பின்னணியிலேயே சங்க இலக்கிய யாப்பியலைப் புரிந்துகொள்ளவும் விளங்கிகொள்ளவும் முடிகின்றது. யாப்பியல் என்பது செய்யுளின் அமைப்பியல் இலக்கணத்தைக் கூறும் துறையாகும். தொல்காப்பியர் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்ற மூன்றதிகாரங்களிலும் யாப்பின் உறுப்புகளைப் பகிர்ந்து வழங்கியுள்ளார். மாத்திரை, எழுத்து போன்ற அடிப்படை உறுப்புகள் எழுத்ததிகாரத்திலும்; மரபு, எச்சம், முன்னம் போன்ற உறுப்புகள் சொல்லதிகாரத்திலும்; அசை, சீர், அடி, யாப்பு, தூக்கு, தொடை, நோக்கு, பா, அளவு, வனப்பு, வண்ணம் முதலியன பொருளதிகாரச் செய்யுளியலிலும் இடம்பெற்றுள்ளன. தொல்காப்பியர் காலத்து யாப்பிலக்கணக் கோட்பாடுகளுக்கும் பிற்கால யாப்பிலக்கண நூல்களுக்கும் இடையிலான தொடர்புகளும் வேறுபாடுகளும் ஆய்வு செய்யப்படுகின்றன. குறிப்பாக, எழுத்ததிகாரத்தில் கூறப்பட்ட மாத்திரை, எழுத்து, குற்றியலுகரம், ஐகார ஔகாரக் குறுக்கம், அளபெடை போன்றன செய்யுளியலில் எவ்வாறு மாற்றியமைக்கப்படுகின்றன என்பதும்; சொல்லதிகாரத்தில் கூறப்பட்ட மரபு, எச்சம், முன்னம் போன்ற உறுப்புக்கள் யாப்பியலில் எவ்வாறு பொருந்துகின்றன என்பதும் விரிவாக ஆராயப்படுகின்றன. சங்க இலக்கியப் பாடல்களை முன்னுதாரணமாகக் கொண்டு இக்கோட்பாடுகள் விளக்கப்படுகின்றன. இவ்வாய்வின் மூலம், தொல்காப்பியர் யாப்பிலக்கணத்தை எழுத்தியல், சொல்லியல், பொருளியல் ஆகிய மூன்று தளங்களிலும் ஒருங்கிணைந்த கோட்பாடாக வடிவமைத்துள்ளார் என்பதும், பிற்கால யாப்பிலக்கண அறிஞர்கள் அவற்றில் சில மாற்றங்களைச் செய்துள்ளனர் என்பதும் தெளிவாகும். யாப்பு உறுப்புகளை ஒருங்கிணைத்து, எழுத்தியல் மற்றும் சொல்லியல் நோக்கில் ஆராய்வதே இக்கட்டுரையின் முதன்மையான நோக்கமாகும்.

குறிப்புச்சொற்கள்: தொல்காப்பியர், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், உறுப்புகள், மாத்திரை, யாப்பியல்.

முன்னுரை

தொல்காப்பியர் தன் காலத்தில் நிலவிய இலக்கியங்களைத் தரவுகளாகக் கொண்டு இலக்கியத்தின் வடிவம், உள்ளடக்கம், கலைநயம் ஆகிய மூன்றினையும் ஆராய்ந்து கோட்பாட்டை வகுத்தளித்தார். இந்த இலக்கியக் கோட்பாட்டுப் பின்னணியிலேயே சங்க இலக்கிய யாப்பியலைப் புரிந்துக் கொள்ளவும் விளங்கிக் கொள்ளவும் முடிகிறது. தொல்காப்பியர் இலக்கியம் ஆகியவற்றின் அமைப்பியல்புகள் பற்றிய ஆய்வினைத் தமிழில் அடிப்படையில் தொடங்கி வைத்தவர். இக்கட்டுரை எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் ஆகிய தமிழ்மொழியின் அமைப்பியல்புகளையும், பொருளதிகாரப் பகுதியில் தமிழிலக்கியத்

மலர் - 5, இதழ் - 2, வைகாசி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

அமைப்பியல்புகளையும் பற்றிய ஆய்வின் தொகுப்பாகும் . எழுத்தியல் சொல்லியல் நோக்கில் யாப்பியலை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மாத்திரை முதல் வனப்பு வரையுள்ள செய்யுள் உறுப்புகளை ஒன்றன்பின் ஒன்றாகத் தொல்காப்பியர் வைத்துக்கூறிய முறையினைக் கொண்டு புரிந்து கொள்ளலாம். கவிதை செய்யுள் இயற்றுவோருக்கு மொழிமரபும், இலக்கிய மரபும் தெரித்திருக்க வேண்டும்.

மாத்திரை எழுத்தியல் அசை வகை எனாஅ
யாத்த சீரே அடியாப்பு என மரபே
... விருந்தே இயைபே புலனே இழைபு எனாஅப்
பொருந்தக் கூறிய எட்டொடும் தொகைஇ
நல்லிசைப் புலவர் செய்யுள் உறுப்பென
வல்லிதிற் கூறி வகுத்துரைத்தனரே (தொல். பொருள். செய்., நூ. 1259)

செய்யுள் உறுப்புகள் முப்பத்து நான்கனுள் மாத்திரையும், எழுத்தும் எழுத்ததிகாரத்திலும்; எச்சம், மரபு, முன்னம் என்பன சொல்லதிகாரத்திலும், பொருளதிகாரத்திலும்; அசை, சீர், அடி, யாப்பு, தூக்கு, தொடை, நோக்கு பா அளவு, வனப்பு, வண்ணம் முதலியவை பொருளதிகாரச் செய்யுளியலிலும் ஏனைய உறுப்புகள் மரபுடன் தொல்காப்பியரால் சுட்டப்பெற்றன. செய்யுள் இயற்றும்போது இவ்வுறுப்புகள் அனைத்தும் பொருளதிகாரத்தின் மற்ற இயல்களிலும் ஒன்றிணைந்து வடிவம் கொள்ளுதல் வேண்டும் என்பது தொல்காப்பியரின் கவிதையியல் கோட்பாடாகும்.

இலக்கியமும் மொழியும்

சங்க இலக்கியம் முதல் இக்கால இலக்கியம் வரையுள்ள அனைத்துப் படைப்புகளும் சமுதாயத்தில் நிலவும் பொதுமொழியை ஊடகமாகக் கொண்டமைகின்றன. ஒரு இலக்கியப் படைப்பாளி பொதுமொழியையே தன் படைப்புக்குப் பயன்படுத்துகிறான். எனினும் அந்த மொழியின் சாத்தியப்பாடுகளை உச்ச அளவில் பயன்படுத்தி, அந்த மொழியின் மூலம் பிறிதொரு மொழியை உருவாக்குகிறான். அவ்வகையில் ஒரு இலக்கியப் படைப்பு மொழியினால் ஆன மொழி எனலாம். இலக்கியம் மொழியினாலேயே ஆக்கப்படுகின்றது. ஒலியன், உருபன், சொல், தொடர். வாக்கியம் என்ற கூறுகளால் ஆனது மொழி. இவற்றை மொழியின் வடிவக் கூறுகள் என்போம். இந்த வடிவக் கூறுகள் மூலமே பொருண்மை வெளிப்படுத்தப்படுகின்றது. இலக்கியப் படைப்பாளி இந்த மொழிக் கூறுகளைப் பயன்படுத்தி இலக்கியப் படைப்பை உருவாக்குகின்றான். இவ்வாறு உருவாக்கப்பட்ட வடிவம் வாக்கியங்களின் பொருண்மையைத் தருவதோடு மட்டுமல்லாமல் இலக்கியப் பிரதியின் பொருண்மைசார் உள்ளடக்கத்துக்கு ஒரு புதிய பரிணாமத்தைச் சேர்க்கின்றது. இவ்வாறு இலக்கியப் படைப்புக்கு இருதள அமைப்பு கிடைக்கின்றது. ஒன்று எழுத்து, சொல், தொடர் வாக்கியங்களாலான அடிப்படை அமைப்பு; மற்றொன்று இவற்றின் ஒருங்கிணைப்பினால் கட்டப்பட்ட முழுமையான இலக்கிய அமைப்பு. இந்த அடிப்படை அமைப்பின் வழியே நாம் இலக்கிய அமைப்புக்குள் நுழைகின்றோம். இலக்கியம் என்பது உணர்ச்சிமொழி அல்லது அணிமொழி என்று பொதுவாகக் கூறலாம். பாப்பு, சந்தம், எதுகை, மோனை, உவமை, உருவகம், படிமம், குறியீடு ஆகியன இலக்கியமொழிக்குக் குறிப்பாகக் கவிதைக்கு உரியவை.

சங்கக் கவிதை

தலைவனுடன் சென்று மணந்து, பின் தன் தாய் வீட்டிற்கு வந்தாள் தோழி. அவளிடம் தலைவன் ஊர் தண்ணீர் சுவையாக இருக்காதே என தலைவி சொன்னதாகப் பின்வரும் பாடல் அமைகிறது.

அன்னாய் வாழிவேண் டன்னைநம் படப்பைத்
தேன்மயங்கு பாலினு மினிய வவர்நாட் டுவலைக் கூவற் கீழ
மானுண் டெஞ்சிய கலுழி நீரே(ஐங்குறு., பா. 203)

இப்பாடல் தலைவிகூற்றாக அமைகின்றது. இதை இலக்கியப் படைப்பு என்று சொல்கிறோம். யாப்பு அடிப்படையில் இதுவொரு அகப்பாவில் அமைந்துள்ள இருபது சொற்களும் பதினைந்து ஈரசைச் சீர்களாக அமைகின்ற மொத்தம் நான்கு அடிகள். ஈற்றயலடி மூன்று சீர்களும் ஏனைய அடிகள் நான்கு சீர்களும் கொண்டவை. இறுதிச்சீர் ஏகாரம் கொண்டு முடிகின்றது. இவ்வகையில் இதுவொரு நேர் ஆசிரியப்பா. இப்படைப்பில் இடம்பெற்றுள்ள மொழிக்கூறுகளே கவிதையின் அடிப்படை அமைப்பு. அந்த அடிப்படை அமைப்பில் கட்டப்படும் கவிதை தனக்கென்று சுதந்திரமான இலக்கிய அமைப்பைக் கொள்கின்றது. இந்த அமைப்பு பல்வேறு பொருள் விரிவுக்கு வழிவகுக்கக் கூடியது.

கவிதையின் அடிப்படை அமைப்பு

மாத்திரை முதலாக வண்ணம் ஈறாக இருபத்தாறு உறுப்புகள் கொண்டதாகச் செய்யுளைக் கவனமாக வரையறுக்கும் தொல்காப்பியர் இவ்வுறுப்புகளின் வரிசை முறையை வழங்கியுள்ளார். மாத்திரை, எழுத்து, அசை, சீர், அடி, யாப்பு ஆகிய ஆறு உறுப்புகள் ஒன்றனுள் ஒன்று பொருந்தி செய்யுள் வடிவமைப்பின் உறுப்புகளாகின்றன. அடுத்து அமையும் மரபு, தூக்கு, தொடை, நோக்கு, பா, அளவியல் என்ற ஆறு உறுப்புகளையும் செய்யுள் வடிவின் அடியாக எழும் கவிதையின் கூறுகாளகச் சுட்டலாம். மொழியைக் கையாளும் (மரபு), ஓசைநயம் பயத்தல் (தூக்கு, தொடை), பொருள்செறிவு (நோக்கு) என்ற உறுப்புகள் யாப்பில் வந்து பொருந்தும்போது உருவாகும் கவிதை நயம் பெற்ற வடிவமே என கொள்ளலாம். மாத்திரை, எழுத்து ஆகிய இரண்டு செய்யுள் உறுப்புகளுக்கும் இலக்கணம் எழுத்ததிகாரத்தில் இடம்பெற்றுள்ளது. இதனை,

மாத்திரை அளவும் எழுத்தியல் வகையும்
மேற்கிளந்தன்ன என்மனார் புலவர்(தொல்.பொருள். செய்., நூ. 2)

என்ற நூற்பா மூலம் அறியலாம். முதலெழுத்துகள், குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் ஆகிய சார்பெழுத்துகளும் ஐகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம். அளபெடை முதலியனவும் அவற்றுக்குக் கூறப்பெற்ற மாத்திரை அளவும் செய்யுள் இலக்கணத்திற்கும் பொருந்தும். செய்யுளுக்குக் கூறப்பெறும் அடிப்படை உறுப்புகள் யாவும் மூன்றதிகாரங்களிலும் பரவலாக இடம்பெற்றுள்ளன. எழுத்ததிகாரத்தில் மாத்திரையும் எழுத்தும் கூறப்பெற்றன. இதன்மூலம் செய்யுளியலுக்கும் எழுத்ததிகாரத்திற்கும் உள்ள தொடர்பினை அறிந்து கொள்ளலாம்.

மாத்திரை

மாத்திரை, எழுத்து என்ற இரண்டையும் தனித்தனி செய்யுள் உறுப்பாகத் தொல்காப்பியர் கொண்டார். மாத்திரை என்பது எழுத்தை ஒலிக்கும் காலஅளவு என்பதால் மாத்திரையையும் எழுத்தையும் பிரித்தல் இயலாது. மேலும், மாத்திரை எழுத்தின் குணம் (தொல். செய்யுள். 2, பேரா. உரை) பிற்காலத்து வந்த யாப்பியலார் எழுத்தைக் கூற, அதன் மாத்திரையையும் உடன்பெறுதலின் மாத்திரையைத் தனி உறுப்பாகக் கூறாமல் எழுத்தையே முதல் உறுப்பாகக் கூறினார். எழுத்தின் குணந்தான் மாத்திரை என்றாலும் அசை பிரிக்கும்போது எழுத்தை மட்டும் பார்க்காமல் மர்த்திரையையும் பார்க்கவேண்டியுள்ளது. இதனைப் பேராசிரியர் பின்வருமாறு தெளிவுபடுத்துகின்றார். வரகு + வரகு + வரகு + வரகு என்னும் அடியினைப் பனாஅட்டு + பனாட்டு + பனாஅட்டு+ பனாஅட்டு என்று எழுதினாலும் அசைவகையில் இரண்டும் ஒன்று. வரகு, பனாஅட்டு என்ற இரண்டும் மாத்திரை அளவில் வேறுபட்டிருப்பினும் இரண்டும் நிரைபு என்ற அசையாகக் கொள்ள வேண்டும். அம்ம வாழி கேளாய் தோழீ என்பதில் இறுதி இருசீரும் நெடிலாக உள்ளதால் இன்னா ஓசைத்தாம் தோழீ என்பது தோழி என்றிருப்பின் இன்னோசைத்தாம் என்றும் கூறுகின்றார். அசையின் இலக்கணப்படி தோழீ என்பதும் தோழி என்பதும் தேமா என்ற வாய்பாட்டுச் சீர்களே ஆகும். ஆகவே, இவர் மாத்திரையை அளவை பட நிறுத்தலின் மூலம் அதன் தேவையை விளக்குகின்றார் எனலாம். எனினும், பிற்காலத்தில் நேர்பு, நிரைபு அசைகள்

வழக்கொழிந்ததாலும் தளையும் பொருந்தினால் போதும் என்று கொள்ளப்பட்டதாலும் எழுத்தைக் கூறவே குணமான மாத்திரையும் அடங்குதலாலும் மாத்திரையை உறுப்பாக எண்ணுதலைப் பிற்காலத்த கைவிட்டனர் எனலாம்.

எழுத்தின் தேவை

தொல்காப்பியர் செய்யுள் உறுப்புகளுள் ஒன்றான எழுத்தினை அசைக்கு மட்டுமல்ல சீர், அடி, தொடை, வண்ணங்கள் ஒரு சில வனப்புகள் முதலியவற்றுக்கும் உறுப்பாக அமையும் என்கிறார். பண்டைக்கால யாப்பிலக்கணத்தில் எழுத்து மிக முக்கியமான இடத்தைப் பெற்ற உறுப்பாக இருந்தது என்கிறார் அ. சிதம்பரநாத செட்டியார் (19: 14). காக்கைபாடினியார் அப்பதின் மூன்றும் அசைக்குறுப்பாகும் (நூற்பா எண் 1) என்று கூறுவதால் அவர் காலத்தில் அசைக்குறுப்பாக எழுத்தைக் கொள்ளும் மரபு ஏற்பட்டது எனலாம். அவர் வகுத்தளிந்து இக்கொள்கை யாப்புநூல் வரையில் நிலைபெற்றது. காக்கைபாடினியாரும் எழுத்து அசைக்கு உறுப்பாக வரும் என்று கொண்டாலும் கட்டளைக்கலிப்பா, கட்டலைய கலித்துறை போன்றவற்றின் அடிகளையும் தொடையையும் சில வண்ணங்களையும் எழுத்திவைச் கொண்டே இலக்கண வரையறை செய்துள்ளனர் என்கிறார் இரா. இராசேந்திரன் (1992: 13).

எழுத்துகளின் பாகுபாடு

தொல்காப்பியம் எழுத்தை ஓர் உறுப்பாக எண்ணியது. எனவே, எழுத்து உறுப்பு பற்றிய விளக்கத்தை 'மேற்கிளந்தன்ன' என்று எழுத்ததிகாரத்தைத் தழுவுகின்றது. உயிர், உயிர்மெய், குறில், நெடில், வல்லினம், மெல்லினம், இடையினம், ஒற்றளபெடை, உயிரளபெடை ஆய்தம், குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக் குறுக்கம் என எழுத்துகளின் பாகுபாட்டைப் பதினைந்தாக இயற்றிக் கொள்ளுதல் தொல்காப்பிய மரபாகும் (அளபெடையினை உயிரளபெடை, ஒற்றளபெடை என இரண்டாகக் கொண்டு மகரக்குறுக்கத்தை எண்ணாது கைவிடுவது). எழுத்து உறுப்பு பற்றிய தொல்காப்பிய நூற்பாவிற்கு உரைவகுத்தப் பேராசிரியர் பதினைந்து எழுத்தில் மூன்று எழுத்துகள் அசைக்கு உறுப்பாகும் என்றும் பத்து எழுத்துகள் தொடைக்குறுப்பாகும் என்றும் ஏழு எழுத்துகள் வண்ணத்திற்கு உறுப்பாகும் என்றும் கூறினார். இக்கருத்து இவருக்கு முன்பே வழக்கத்தில் இருந்துள்ளமையை,

> **அசையாக்கும் தன்மையே அன்றித் தொடையோடு**
> **இசையாக்கும் ஏனையவும் சொற்றார் (தொல். பொருள்., நூ. 1261)**

என்று வரும் வெண்பாவாலும் அறியலாம். தொல்காப்பியர் தாம் இயற்றிய செய்யுள் இலக்கணத்தில் எழுத்தைச் செய்யுளின் உறுப்பாகக் கொண்டவர். எனவே, எழுத்தை அசை, தொடை, வண்ணம் ஆகிய மூன்றிற்கும் உறுப்பாகக் கொண்டார். பிற்கால யாப்பிலக்கண அறிஞர்கள் எழுத்து உறுப்பினை அசைக்கு மட்டும் கூறினர். எனினும் தேவையின்றி எழுத்தின் எல்லா வகையினையும் கூறிச் சென்றனர். இடைக்காலத்தில் எழுந்த கலம் முதலிய பிற யாப்பு நூலார் எழுத்தால் அசையும் அசையால் சீரும், சீரால் தளையும் அடியும், அடியால் தொடையும் அமையும் என இலக்கணம் வகுத்துக் கொண்டனர். ஆதலால் அசைக்குத் தேவையான எழுத்துகளையும் தொடை, வண்ணம் இப்போக்கு யாப்பொளி ஆகிய இரண்டிற்குமான எழுத்துகளையும் ஒரே இடத்தில் சொல்ல வேண்டிய தேவை ஏற்பட்டது. பின்வந்த யாப்பதிகாரம் இருநூற்று நாற்பத்தேழு (247) எழுத்தையும் சுட்டிப் பின் இவை யாப்பிலக்கணத்தில் குறில், நெடில், ஒற்று என மூவகையில் அடங்கும் என்று கூறுகின்றது. இங்கு அசைக்கு உறுப்பாகும் எழுத்துகள் மட்டுமே சொல்லப்பட்டுள்ளன. யாப்புநூல் உயிர், மெய், ஆய்தம், உயிர்மெய் என்ற நான்கையும் கூறுகின்றது. இவ்வெழுத்துகளை மட்டும் கொண்டு அசை பிரிக்க முடியாது.

யாப்பிலக்கணமும் எழுத்தும்

மலர் - 5, இதழ் - 2, வைகாசி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

தொல்காப்பியர் யாப்பிலக்கண உறுப்புகளுள் ஒன்றான எழுத்தினைப் பதினைந்து வகையாகப் பாகுபாடு செய்கின்றார். அப்பதினைந்து வகைகளுள் குற்றியலுகரம், முற்றியலுகரம் ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், அளபெடை என்ற நான்கும் செய்யுளிலக்கணத்தில் சிறப்பிலக்கணம் பெறுகின்றன.

குற்றியலுகரம்

தொல்காப்பியர் எழுத்ததிகாரத்துள் குற்றியலுகரம் செய்கின்றார். இதனை,

ஈரெழுத் தொருமொழி உயிர்த்தொடர் இடைத்தொடர்
ஆய்தத் தொடர்மொழி வன்தொடர் மென்தொடர்
ஆயிரு மூன்றே உகரம் குறுகிடன் (தொல். எழுத்து., நூ. 368)

கூறிய தொல்காப்பியர் செய்யுளியலுள் ஏழுவகையாகக் குறிப்பிடுகின்றார். எழுத்ததிகாரத்துள் குற்றியலுகரம் ஆறுவகைப்படும்.

குறிலே, நெடிலே, குறில்இணை. குறில்நெடில்
ஒற்றொடு வருதலொடு மெய்ப்பட நாடி
நேரும் நிரையும் என்றிசின் பெயரே (தொல். பொருள்., நூ. 1277)

தொல்காப்பிய இலக்கணப்படி பிண்ணாக்கு, சுண்ணாம்பு, பட்டாங்கு என்பன நேர் நேர்பு எனவும் விளையாட்டு, இறும்பூது என்பன நிரைநிகம் எனவும் படும். போவது, ஒன்பது என்பன நேர்நிரையாகவும் நிரைநிரையாகவும் பகுக்கப்படும். இதனைப் பேராசிரியர் உரையாலும் அறியலாம். (தொல். செய்., நூ. 4. பேரா. உ.)தொல்காப்பியரின் இக்கோட்பாட்டினை ஏற்றுதான் பின்வந்த பல்காயனார்,

எழுவகை இடத்தும் குற்றியலுகரம்
வழுவின்றி வருஉம் வல்லா றூர்ந்தே (தொல். பொருள்., நூ. 1262)

என்று குற்றியலுகரத்தை ஏழுவகையாகப் பாகுபாடு செய்கின்றனர். தொல்காப்பியர் நேர்பு, நிரைபு அசைகளை ஏற்றதால் அதற்குத்தக குற்றியலுகரத்தை ஏழுவகைகளாகப் பாகுபாடு செய்தார். பிற்கால யாப்பிலக்கண அறிஞர்கள் நேர், நிரை ஆகிய ஈரசைக் கோட்பாட்டினை ஏற்றுக் கொண்டனர். எனவே, குற்றியலுகரத்தை அறுவகையாகப் பாகுபாடு செய்தனர். தொல்காப்பியர் எழுத்திலக்கணத்தின் குற்றியலுகரத்தை ஆறாகவும் யாப்பிலக்கணத்தின் குற்றியலுகரத்தை ஏழாகவும் பாகுபாடு செய்துள்ளார். தொல்காப்பியருக்குப் பிறகு வந்த யாப்பிலக்கண அறிஞர்கள் இதனைக் கைவிட்டனர் என்பதை அறிய முடிகிறது. எழுத்திலக்கணத்துள் வல்லெழுத்தின் மீது ஊர்ந்த உகரங்களே குற்றியலுகரமாக கருதப்பட்டன. ஆனால், யாப்பிலக்கணத்துள் தொல்காப்பியர், இருவகை உகரமொடு இணைந்தவை வரினே நேர்பும் நிரைபும் ஆகும் என்று கூறுவதால் முற்றியலுகரங்களுள் சிலவும் நேர்பு, நிரையில் அடங்கும் என்பதை அறிய முடிகிறது.

மின்னு மின்னு மின்னு மின்னு பேராசிரியரும் வண்டு வண்டு, வண்டு வண்டு - என நிறைவழிப் பிறந்த அகவல் ஓசை என நின்ற வழியும் பெறப்படுமாதலின் அதுவும் அது பட்டதே பட்டு அவ்வோசையே பெறும் என்றான் என்பது அல்லாஉம் வெண்பா ஈற்றடி வண்டு எனக் குற்றுகரவீற்றான் இற்றவழிக் கொல்லு என முற்றுகர வீற்றான் இறுமாயினும் ஒத்த ஓசைத்தாம் (வெள்ளைவாரணன் 1989: 39) என்று கூறுவதால் இவ்விடங்களில் இருவகை உகரத்திற்கும் ஓசையில் வேறுபாடு இல்லாமல் போகிறது. இவற்றுக்குத் தொல்காப்பியர் தேர்பு, நிரைபு எனப் பெயர் கொடுத்தலின் இவ்விடங்களில் வரும் முற்றியலுகரங்களைத் தொல்காப்பியர் குற்றியலுகரமாகவே கருதினார் என்பதை அறியமுடிகிறது. ஆகவே, களவு. உகுமு, மின்னு. பிற ஒற்றுகள் மீதும் குற்றியலுகரம் வரும். கொல்லு என்பனவும் குற்றியலுகரங்களாகின்றன. எனவே, யாப்பிலக்கணத்தில் வல்லொற்றல்லாத, முற்றியலுகரம், எழுத்தியலில், செய்யுளியலில் முற்றியலுகரமாகக் கூறப்பட்டவற்றுள் சில குற்றியலுகரமாகக் கணக்கிடப்படுகின்றன. அதைப்போலவே எழுத்தியலில் குற்றியலுகரமாகக் கூறப்பட்டதைச் செய்யுளியலில்

முற்றியலுகரமாகக் கூறப்படுகிறது. ஞாயிறு, வலியது ஆகிய இரண்டும் எழுத்தியல் படி உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்கள்.

நேர்நிரை, நிரைநிரை குற்றியலுகரம் முற்றியலுகரமாகக் கணக்கிடப்படுகின்றது என அலகிட வேண்டும். இங்குக் காமம் செப்பாது கண்டது மொழிமோ (விருத்தியுரை) என்ற அடியைப் பத்தெழுத்தடி என்றார் இளம்பூரணர். இவ்வடியுள் கண்டது என்பது மூன்றெழுத்துச் சீராகக் கணக்கிடப்பட்டுள்ளது. எனவே, இளம்பூரணர் 'கண்டது' என்பதனை முற்றியலுகரமாகவே கொண்டுள்ளார் என்பதனை அறிய முடிகிறது. எழுத்தியலில் குற்றியலுகரமாகக் கூறப்பட்டவற்றுள் சில முற்றியலுகரமாகவும் முற்றியலுகரமாகக் கூறப்பட்டவற்றுள் சில குற்றியலுகரமாகவும் செய்யுளியலில் மாறுகின்றன. இப்போக்கு நாலசைக் கோட்பாடு ஈரசைக் கோட்பாடாக நிலைப்பெற்றவுடன் வழக்கொழிந்தது எனலாம்.

ஐகார ஔகாரக் குறுக்கம்

தமிழ் எழுத்தியலில் காணப்படும் ஐகாரமும் ஔகாரமும் தொல்காப்பியரால் நெடில்களாகக் கருதப்படுபலையாகும் (எழுத்து, இளம்., நூ. 4). இவற்றை இரண்டு மாத்திரை அளவுள்ள உயிர்நெடில்களாகக் கொண்டது. அவை முறையே அகரமும், இகரமும், உகரமும் மயங்கிய சந்திய உகரங்கள் என்று கருதியி விளைவாகும். இளம்பூரணர் மொழிமுதல் ஐகாரம் ஒரு மாத்திரை பெறும் என்றும் மொழிமுதற்கள் ஐகாரம் ஔகாரம் முதற்கண்ணும் குறுகும் என்றும் ஓரெழுத்து ஒருமொழியும் குறுகும் என்றும் இதனை நோக்க, ஐகாரக்குறுக்கம் மூவிடத்தும் குறுகும். இடையிலும் கடையிலும் குறுகும் என்ற இருவேறு கருத்தும் இருந்துள்ளன என்பதை அறிய முடிகிறது. எழுத்தியல் ஐகாரக்குறுக்கம் எத்தகைய இலக்கணம் பெற்றிருப்பினும் யாப்பில், யாப்பிலக்கணம் குற்றெழுத்தாக்கி முன்பின் உள்ள எழுத்துடன் கூட்டி நிரையசை ஆக்குவர். மேலும், இக்குறும். யாப்பில் சீர் முதலிடை கடை நிற்கும். எனவே, ஐகாரக் குறுக்கமும் எழுத்தியலில் ஒன்றாகவும் செய்யுளியலில் ஒன்றாகவும் உள்ளது. ஔகாரக்குறுக்கம் ஒரு மாத்திரை பெறும் என்றும் ஒன்றரை மாத்திரை பெறும் என்றும் இதற்கு மாத்திரை கூறுவதில் கருத்து வேறுபாடு உண்டு. இவ்வெழுத்து மொழி முதலில் மட்டுமே கூறிச் சான்று காட்டினார். குறுகும் என்று மற்றவர்கள் கூற விருத்தியுரையாசிரியர் மட்டும் சீரின் மூவிடத்தும் குறுகும் என்பார். உயிர்நெடில்களுக்கு இணையான உயிர்க்குறில்கள் இருப்பதுபோல ஐகார ஔகாரங்களுக்கு இல்லை. இந்தச் சந்திய உகரங்களில் அகரத்தையடுத்து நிகழ்வதாகச் கருதப்படும் இகர உகரங்கள் அசைத்தன்மை குன்றிய உயிர்களாகும். இதுபற்றியே ஒலிய ஆய்வில் இத்தகைய உயிர்களை யகர வகரங்களின் சார்ந்தொலிகளாக (Allophen) மொழியியலார் கொள்கின்றனர். ஐகார ஔகாரங்கள் முறையே அய் அவ் ஆகியவற்றுடன் முரனி வழக்கில் (Contrastive Distribution) அமையும் நிலை தமிழில் காணப்படவில்லை. ஐய ஐந்து/அய்ந்து, பௌவம்/பவ்வம் ஆகிய இணைச்சொற்கள் முரணவழக்கில் ஐகாரத்தை அய் என்றும், ஔகாரத்தை அவ் என்றும் கொள்வது தவிர்க்க முடியாது (இரா. கோதண்டராமன் 2004: 128) என்ற கருத்தையும் நாம் இங்கே எண்ணிப் பார்க்க வேண்டும்.

அளபெடை

அளபெடை இரண்டு வகைப்படும். ஒன்று உயிரளபெடை மற்றொன்று ஒற்றளபெடை உயிரளபெடை மூன்று மாத்திரை (2 +1 =3) பெறும். தொல்காப்பியர். *அளபெடை அசைநிலை ஆகலும் உரித்தே* அசையாகக் கணக்கிடுதல் என்று கூறுவதால், இவர் காலத்தில் உயிரளபெடையின் அறிகுறியாக வரும் குறில் பெரும்பாலும் இல்லை. பிற்கால யாப்பியல் அறிஞர் உயிரளபெடையை தனி அலகாகக் கணக்கிடப்படுதலே மிகுதி என்றும் யாப்பிலக்கணம் கெட்டால் அலக்கிடப்படாது என்றும் கூறினர் (காக்கைபாடினியம், நூற்பாஎண்: 4). இந்நிலையில் எழுத்தியலில் மூன்று மாத்திரை பெறும் என்று சொல்லப்பட்ட உயிரளபெடை யாப்பில் சிலவிடத்து இரண்டு மாத்திரை பெறும் எழுத்தாக மட்டுமே

கணக்கிடப்படுகிறது. எழுத்தியலில் இரண்டு மாத்திரை பெறும் ஒற்றளபெடை யாப்பிலக்கணத்தில் அலகாகக் கணக்கிடும்போது அறிகுறியாக வந்த ஒற்று ஒரு மாத்திரை பெறுகின்றது. கண்ணி தண்ணெனக் கண்டும் கேட்டும் என்னும் இவ்வகவல் அடியில் வரும் முதற்சீரினை அலகிடுங்கால் தனிக்குறில் முதலசை மொழிசிதைத்தல் ஆகாது. ஆதலால் கண் என்பது நேரசையாகக் கணக்கிடப்படும். 'ண்' என்பது எழுத்தியல்படி அரைமாத்திரையுடைய ஒற்றாகும். யாப்பில் இவ்விடத்து ஒரு மாத்திரை உடைய குற்றெழுத்துப் போலக் கணக்கிடப்படுகின்றது. பேராசிரியர் இயற்கை உயிரளபெடை, செயற்கை உயிரளபெடை, இயற்கை ஒற்றளபெடை, செயற்கை ஒற்றளபெடை எனப் பிரித்து இவற்றுள் இயற்கை அளபெடைகள் அலகிடப்படா என்றும் செயற்கை அளபெடைகள் கணக்கிடப்படும் என்றும் கூறி, மேலும், ஒற்றளபெடை வழக்கிற்கும் உரித்து என்றார் (தொல். செய்யுள்., நூ. 17, 18 பேரா. உரை). இதுவரை எழுத்தியலுக்கும் செய்யுளியலுக்கும் உள்ள தொடர்பினைக் கண்டோம். அடுத்து சொல்லியலுக்கும் செய்யுளியலுக்கும் உள்ள தொடர்பினைக் காணலாம். செய்யுள் உறுப்புக்கள் முப்பத்து நான்கனுள் எச்சம், மரபு, முன்னம் என்பன சொல்லியலில் சுட்டப்பட்டுள்ளன.

மரபு

மரபு என்பதனைத் தொல்காப்பியர் சொல்மரபு என்றே கொள்கிறார். இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்னும் நான்கு சொல்லின் இயற்கை, யாப்பின்வழி பொருந்துதல் மரபு, செய்யுளின் சந்த இயல்புக்கு ஏற்ப ஆளுமிடங்களிலும், உலக வழக்கிற்கேற்பவே தொடர்களை ஆளுதல் வேண்டும் என்றும் கூறப்படுகிறது. சமுதாய மரபு, செய்யுள் மரபு இரண்டும் மரபு எனப்பட்டது. "**மரபுநிலை திரிதல் செய்யுட் கில்லை" (தொல். பொருள். செய்., நூ. 590)** என்னும் கருத்தினை அடியொற்றியே சங்க இலக்கியம் அவ்வுத்திணைக்குரிய கருப்பொருள் சொல்லியிருக்கின்றது.

சொற்களின் வருகை

இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் ஆகிய நான்கும் செய்ப இயற்றுவதற்கு உரிய சொற்களாகும். இதனைத் தொல்காப்பியர்.

இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்று
அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே
சொற்கள் பொருள் கொள்ளும் முறை (சொல். எச்ச., நூ. 881)

என்ற நூற்பா மூலம் குறிப்பிடுகிறார். செய்யுளில் ஆளப்பெறும் சொல்லும் பொருளும் அந்தந்த காலத்தார் வழங்கும் வகையினால் அமைய வேண்டும். ஒரு காலத்தில் வழங்கப்பட்ட மற்றொரு காலத்தில் பொருள் மாற்றம் பெறலாம். அவ்வாறே மக்கள் பயன்படுத்திய அணிக உடைகள், உணவுப்பொருட்கள் ஆகியன காலந்தோறும் மாற்றம் அடைதலுண்டு, ஓரிடத்தில் வழங்கும் பொருள் மற்றோரிடத்தில் வழங்குவதில்லை. இவற்றைக் கருத்திற்கொண்டு பொருத்தாழம் இயைபும் தோன்றப்பாடுதல் வேண்டும் என்பர் பேராசிரியர். தொல்காப்பியர் சொல்லியலில் சொற்களின் வகைப்பாட்டினைக் கூறிய பின்பு அச்சொற்களின் பொருள்கொள்ளும் முறையினையும் குறிப்பிடுகின்றார். நிரல்நிறை, கண்ணம் அடிமறி, மொழிமாற்று என்று செய்யுளில் சொற்கள் பொருள் கொள்ளும் முறை தான்கு வகைப்படும் என்பதைத் தொல்காப்பியர்,

நிரல்நிறை சுண்ணம் அடிமறி மொழிமாற்று அவைநான்
கென்ப மொழிபுணர் இயல்பே (தொல் சொல்., நூ. 888)

என்ற நூற்பாவின் மூலம் குறிப்பிடுகின்றார். இதே கருத்தினைத் தொல்காப்பியர் செய்யுள் யாப்பின் உறுப்புகளில் ஒன்றாகக் கூறினார். அவ்வுறுப்பு மாட்டு என்பதாகும். செய்யுளில் அகன்றும் அணுகியும் அமைந்து கிடக்கும் பொருள்களை ஒருங்கிணைத்து ஒரு வாக்கியமாகக் கொண்டு பொருள் முடித்துக் காட்டும் முறையினைப் பாட்டியல்பு என்று கூறுவர் (தொல்.

பொருள். இளம்., நூ. 490) அகன்று கிடந்த சொற்களை நிலையிற் கொண்டு வந்து இயைத்தலின் மாட்டுதல் என்பது கொண்டுவந்து கொளுத்துதல் என்கிறார் பேராசிரியர். இதனைக் கொண்டு கூட்டுப் பொருள்கோள் அல்லது மொழிமாற்றுப் பொருள்கோள் என்று கருதாது, புலவர் வேறு செய்வதோர் செய்கையாகக் கொள்ள வேண்டும். தனிநிலைச் செய்யுளியலும் தொடர்நிலைச் செய்யுட் காப்பியத்திலும் வரும் என்பர் நச்சினார்க்கினியர். உரையாசிரியர்களின் கருத்தினை நோக்கும் பொழுது மாட்டு என்பது நீண்ட பாட்டாக வரும் தனிநிலைச் செய்யுளிலும் தொடர்நிலைச் செய்யுமாகிய காப்பியத்திலும் வேண்டும் என்பர் சோ.ந. கந்தசாமி (1989 : 263). வரும் என்றும் அறியலாம்.

சிறிய செய்யுளில் சொற்களை இயைத்துப் பொருள் கொள்ளுமாறு இருப்பின், அதனை மாட்டு என்று கூறாது மொழிமாற்றுப் பொருள்கோள் என்று கொள்ளுதல் எச்சம் தொல்காப்பியர் எச்சம் கூறியுள்ளார். எச்சச் சொற்களின் வகைப்பாட்டினைக் குறித்துச் சொல்லதிகாரத்தில் எச்சவியலில் விரிவாகக் குறிப்பிடுவார்.

பிரிநிலை வினையே பெயரே ஒழியிசை
எதிர்மறை உம்மை எனவே சொல்லே
குறிப்பே இசையே ஆயிர் ஐந்தும்
நெறிப்படத் தோன்றும் எஞ்சுப்பொருட் கிளவி. (தொல்காப்பியர் - 518)

என்ற நூற்பாவின் மூலம் குறிப்பிடுவார். தொல்காப்பியர் குறிப்பிட்ட பத்துவகை எச்சங்களுள் சொல்லெச்சம், குறிப்பெச்சம் ஆகிய இரண்டினையும் செய்யுளியலில் மீண்டும் எடுத்துக் கூறுகிறார். தொல்காப்பியர் செய்யுள் உறுப்புகளில் ஒன்றாக எச்சத்தினைக் குறிப்பிடுகிறார். படைப்பாளன் எல்லாவற்றையும் அப்படியே பாட்டில் கொட்டிவிடாது படிப்போர்கள் சிந்தனைக்கும் வேலை கொடுக்கும் வகையில் சிலவற்றை எச்சமாக விட்டுவிடுதல் வேண்டும். பிறிதொரு சொல்லோடும், பிறிதொரு குறிப்போடும் முடிவு கொள்ளும் இயற்கையைப் பொருந்திய செய்யுள் எச்சம் என்ற உறுப்பை உடையதாகும் என்கிறார் தொல்காப்பியர்.

சொல்லொடும் குறிப்பொடும் முடிவுகொள்
இயற்கை புல்லிய கிளவி எச்சமாகும் (தொல். பொருளதி., நூ. 507. இளம்பூரணர் உரை)

என்ற நூற்பா மூலம் விளக்குவார். சங்க காலப் புலவர்கள் சொல்லெச்சமும் குறிப்பெச்சமும் பயின்று வரும் பிறிதொரு சொல்கொண்டு பொருமுடி பெறுதலைச் சொல்லெச்சம் என்றும், பிறிதொரு குறிப்பினைக் கொண்டு பொருள் முற்றுப் பெறுதலைக் குறிப்பெச்சம் என்றும் எண்ணினர் சங்க கவிதையில் எச்சம் கூற்றினாலும் குறிப்பினாலும் எஞ்சிநின்று பிறகு முடிக்கப்படுதல் கூற்றெச்சம் குறிப்பெச்சமாகக் கூறப்படுகின்றன. சங்க இலக்கியத்தின் உள்ளுறையும் இறைச்சியும் இங்கு அமைத்தவை. புதுக்கவிதையின் அணிநலனாகிய குறியீடு இத்தகு எச்சப்பண்பு கொண்டதாக அமைகிறது.

திணை இலக்கியக் காலமாகிய சங்க காலத்தைக் குறியீட்டுக் காலம் என்றே கூறலாம். இயற்கைப் பொருட்களை மக்கள் வாழ்க்கையோடு இணைத்துக் காட்டும் குறியீட்டுப் பார்வை சங்ககாலக் கவிஞர்களிடம் இருந்துள்ளது. இயற்கைப் பொருள்கள் பின்னணி காட்சியாக மட்டும் அமையாமல் அகத்திணை மாந்தர்களின் உள்ளத்து உணர்வுகளைக் குறிப்பால் உணர்த்தும் குறியீடுகளாகவே அகப்பாடல்களில் இடம்பெற்றன. அகம், புறம் ஆகிய இரண்டிற்கும் மலர்களையே பழந்தமிழர்கள் குறியீடுகளாகப் பயன்படுத்தினார்கள். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகை நிலங்களும் மலர்களாலேயே பெயர் பெற்றன. மலர்கள் முதலில் நிலத்திற்கும் பிறகு உரிப்பொருளுக்கும் பின்னர் அந்தந்தத் திணைக்குமுரிய பாடலுக்கும் குறியீடாக நிற்பதை உணரலாம். புறத்திணையில் போர்முறைகளுக்கும் வெற்றிக்கும் மலர்கள் குறியீடாகக் கொள்ளப்பட்டன.

செங்களம் படக்கொன்று அவுணர்த் தேய்த்த
செங்கோல் அம்பின் செங்கோட்டு யானைக்

கழல்தொடிச் சேஎய் குன்றம் குருதிப் பூவின் குலைக்காந் தட்டே (குறுந்., பா. 1)

எனும் இப்பாடலை எச்சவகைப் பண்பிற்கு எடுத்துக்காட்டாக கூறலாம். முன்னம் சொல்லால் அன்றிச் சொல்லுவான் குறிப்பால் இப்பொருள் இத்தன்மைத்து என்று பொருள் உணரப்படும் சொற்களும் உள்ளதாகத் தொல்காப்பியர் சொல்லியலில் குறிப்பிடுவார். இதனை,

முன்னத்தின் உணரும் கிளவியும் உளவே
இன்ன வென்னும் சொல்முறையான (தொல். சொல்., நூ. 943)

என்ற நூற்பாவின் மூலம் குறிப்பிடுவார். குழைகொண்டு கோழி எறியும் வாழ்க்கையர் என்றும் தொடரில் பெருஞ்செல்வர், மேட்டுக்குடியினர் என்னும் பொருள் குறிப்பால் உணர்த்தப்படுவது. இதே கருத்தினைத் தொல்காப்பியர் செய்யுளியலில் யாப்பின் உறுப்புகளுள் ஒன்றாக அவ்வுறுப்பு முன்னம் என்பதாகும். செய்யுளைக் கேட்போன் அந்த செய்யுளில் உள்ள 'கூறியலர்' கேட்போரை' தானே வாகித்து அறிதல் முன்னம் ஆகும்.

இவ்விடத்து இம்மொழி இவர்இவர்க்கு உரிய என்று
அவ்விடத்து அவரவர்க்கு உரைப்பது முன்னம் (தொல். பொரு. நூ. 1465)

என்ற நூற்பாவின் மூலம் முன்னம் உறுப்பினைத் தொல்காப்பியர் குறிப்பிடுவர். படிப்போரின் மதிநுட்பம் ஊகத்திற்கு வேலை கொடுக்கும். இக்கூறு கவிதையில் இன்னதென்று புரியாமல் குழப்பத்தைச் சில போழ்தில் ஏற்படுத்தும். இது தோழி கூற்றா, தலைவி கூற்றா, இது எது குறித்த கூற்று என்ற குழப்பம் ஏற்படுத்தும். ஐங்குறுநூற்றின் சில பாடல்கள் இப்பண்பு கொண்டவை. இதுவே புதுக்கவிதையில் இருண்மை(Obscurity)யாகக் காணப்படுகிறது. தொல்காப்பியர் தன் காலத்தில் பயின்று வழங்கிய மொழிமரபுகள், இலக்கிய மரபுகள் ஆகியவற்றை நுட்பமாகக் கண்டறிந்து தொல்காப்பியத்தில் விளக்க முற்பட்டார். யாப்புக்கு அடிப்படை உறுப்புகளான மாத்திரை, எழுத்து ஆகிய இரண்டு எழுத்ததிகாரத்திலும் மரபு, எச்சம். முன்னம் ஆகிய உறுப்புகளைச் சொல்லியலும் எடுத்துக் கூறினார். இவ்வுறுப்புகளின் இலக்கணங்களை யாப்பியல் இசைவுக்கு ஏற்ப தொல்காப்பியர் மாற்றியமைத்துக் கொண்டார் என்பதனை இவ்வாய்வின் மூலம் அறிய முடிகிறது.

முடிவுரை

தொல்காப்பியர் யாப்பிலக்கண உறுப்புக்களை எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என மூன்றிலும் பகிர்ந்து வழங்கியுள்ள முறைமை, தமிழிலக்கியத்தின் பன்முகத் தன்மையை விளக்குவதாக உள்ளது. மாத்திரை, எழுத்து ஆகிய அடிப்படை உறுப்புக்கள் எழுத்ததிகாரத்திலும், மரபு, எச்சம், முன்னம் ஆகியன சொல்லதிகாரத்திலும், ஏனைய உறுப்புக்கள் பொருளதிகாரத்திலும் இடம்பெற்றுள்ளமை, யாப்பியல் வெறும் ஒலியமைப்பு மட்டுமன்றி மொழியியல் மற்றும் பொருளியல் கூறுகளுடன் இணைந்ததாகும் என்பதை உணர்த்துகின்றது. எழுத்ததிகாரத்தில் கூறப்பட்ட மாத்திரை, எழுத்து, குற்றியலுகரம், ஐகார ஔகாரக் குறுக்கம், அளபெடை போன்றவை யாப்பிலக்கணத்தில் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. தொல்காப்பியர் நேர்பு, நிரைபு என்ற ஈரசைக் கோட்பாட்டை முன்வைத்து குற்றியலுகரத்தை ஏழு வகையாகப் பகுத்துள்ளார். ஆனால் பிற்கால யாப்பிலக்கண அறிஞர்கள் இதனை ஆறு வகையாகக் குறைத்துக் கொண்டனர். ஐகார ஔகாரக் குறுக்கங்கள் எழுத்தியலில் ஒரு விதமாகவும், யாப்பியலில் வேறுவிதமாகவும் கையாளப்பட்டுள்ளன. அளபெடை எழுத்தியலில் மூன்று மாத்திரை பெறினும், யாப்பியலில் இரண்டு மாத்திரையாகவே கணக்கிடப்படுகின்றது. இம்மாற்றங்கள் யாப்பியல் ஒலி நயத்திற்காக எழுத்தியல் விதிகளை மீறியுள்ளமையைக் காட்டுகின்றன. சொல்லதிகாரத்தில் கூறப்பட்ட மரபு, எச்சம், முன்னம் ஆகிய உறுப்புகள் யாப்பியலில் சிறப்பிடம் பெறுகின்றன. எச்சம் என்பது படைப்பாளி வேண்டுமென்றே விட்டுவிடும் கூறாகும். இதுவே புதுக்கவிதையின் குறியீட்டுப் பண்புக்கு முன்னோடியாக அமைகின்றது. முன்னம் என்பது கேட்போரின் ஊகத் திறனைச் சார்ந்ததாகும். சங்க இலக்கியப் பாடல்கள் தொல்காப்பியரின்

மலர் - 5, இதழ் - 2, வைகாசி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

யாப்பிலக்கணக் கோட்பாடுகளுக்குச் சான்றுகளாக விளங்குகின்றன. குறுந்தொகை, ஐங்குறுநூறு போன்ற தொகுப்புகளில் உள்ள பாடல்கள் மாத்திரை, எழுத்து, அசை, சீர், அடி, தொடை முதலிய உறுப்புக்களைச் சரியாகப் பின்பற்றியுள்ளமை காணப்படுகின்றது. பிற்கால யாப்பிலக்கண நூல்கள் (காக்கைபாடினியம், யாப்பருங்கலம், யாப்பருங்கல விருத்தி முதலியன) தொல்காப்பியரின் சில கோட்பாடுகளைக் கைவிட்டும், சிலவற்றை மாற்றியமைத்தும், சிலவற்றை விரிவுபடுத்தியும் உள்ளன. குறிப்பாக, நேர், நிரை என்ற ஈரசைக் கோட்பாடு நிலைபெற்ற பின்னர், தொல்காப்பியர் காலத்து நேர்பு, நிரைபு அசைகள் வழக்கொழிந்தன. எழுத்து உறுப்பு அசைக்கு மட்டுமே உறுப்பாகக் கொள்ளப்பட்டது. தொடை, வண்ணங்களுக்கு உறுப்பாகக் கொள்ளும் மரபு கைவிடப்பட்டது. இருப்பினும், தொல்காப்பியரின் அடிப்படைக் கோட்பாடுகள் இன்றும் யாப்பிலக்கண ஆய்வுகளுக்கு அடித்தளமாக விளங்குகின்றன. மொத்தத்தில், எழுத்தியல், சொல்லியல் நோக்கிலான யாப்பியல் ஆய்வு, தொல்காப்பியர் தமிழிலக்கியத்திற்கு வகுத்தளித்த கோட்பாட்டுப் பின்னணியை முழுமையாகப் புரிந்துகொள்ள உதவுகின்றது. எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் யாப்பியலுக்கு அடிப்படை என்பதும், பொருளதிகாரச் செய்யுளியல் மட்டுமே யாப்பியல் அன்று என்பதும் இவ்வாய்வின் மூலம் தெளிவாகின்றது. இவ்வாய்வு, எதிர்காலத்தில் தொல்காப்பிய யாப்பியலைப் பல கோணங்களில் ஆய்வு செய்யும் ஆய்வாளர்களுக்கு ஒரு வழிகாட்டியாக அமையும் என்பதில் ஐயமில்லை.

குறிப்புகள்

[1] இளம்பூரணம். *தொல்காப்பியம், சொல்லதிகாரம்.* கழக வெளியீடு, சென்னை, 1973.
[2] *இறையனார் களவியல் உரை.* கழக வெளியீடு, சென்னை, 1976.
[3] கந்தசாமி, சோ. ந. *தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும்.* தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1989.
[4] *குறுந்தொகை.* உ. வே. சா பதிப்பு, சென்னை, 1955.
[5] தொல்காப்பியர். *தொல்காப்பியம் எழுத்ததிகாரம்.* நச்சினார்க்கினியர் உரை, கழகப் பதிப்பு, சென்னை, 1954.
[6] *தொல்காப்பியச் சூத்திர விருத்தி.* திருவாவடுதுறை ஆதீன வெளியீடு, 1968.
[7] *தொல்காப்பியம், சொல்லதிகாரம்.* தெய்வச்சிலையார் உரை, கழக வெளியீடு, சென்னை, 1963.
[8] தொல்காப்பியர். *தொல்காப்பியம் சொல்லதிகாரம்.* சேனாவரையர் உரை, கழகப் பதிப்பு, சென்னை, 1952.
[9] தொல்காப்பியர். *தொல்காப்பியம் பொருளதிகாரம்.* பேராசிரியர் உரை, கழகப் பதிப்பு, சென்னை, 1975.
[10] வெள்ளைவாரணன், க.ப. *தொல்காப்பியம்.* அண்ணாமலைப் பல்லைக்கழகம், அண்ணாமலைநகர், 1970.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை.
கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை.
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் [https://creativecommons. org/licenses/by/4. 0/](https://creativecommons.org/licenses/by/4.0/) *கீழ்* பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 5, Issue - 2, May 2026 E-ISSN: 2583-0481
MLA, DOAJ Indexed

Aesthetics in the Poems of Gananakoothan

Dr. R. Aarthi, Assistant Professor of Tamil, Karpagam Academy of Higher Education, Coimbatore, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0001-6639-2228
DOI: 10.5281/zenodo.20473885
Received: 22 December 2025; **Revised:** 25 February 2026; **Accepted:** 23 March 2026; **Available Online:** 31 May 2026

Abstract

Literature is the written expression of the various emotions and activities of people. The elements of the lives of people with a rich civilisation and culture are expressed through the language they speak as different forms of literature across different periods. It is natural that the emotions that help shape literature also change over time. As time changed, these underwent many transformations and innovations. From the Sangam literature to present-day Haiku poetry, human intelligence has advanced greatly. Among these, modern poetry made its own distinct mark at the end of the twentieth century. In poetry, aesthetic feeling is most evident. Among all emotions, aesthetic feeling may be considered the foremost emotion for human beings. Beauty gives pleasure to humans; therefore, people are attracted to beauty, which gives delight. It may be said that the world continues to function without weariness because of the stimulating feeling called beauty. This article explains the ideas on such 'aesthetics' expressed in the works of Gnanakoothan.

Keywords: Beauty, Description, Evening, Mountain, Imagination.

References

[1] Abdul Samath, Mu. "Islamic Tamil Novelgakil Varananaikal." *Puthiya Avaiyam*, Volume 7, Issue 1, March 2023.
[2] Aarthi, Ra. "Kulothungan Kavidhaigalil Azhagiyal." *International Journal of Tamil Language and Literary Studies*, Volume 5, Special Issue 2, June 2023.
[3] Arunachalam, Mu. *Tamil Ilakkiyathil Angatham*. Mullai Pathippagam, 1st ed., 2002.
[4] Inthiran. *Thamil Azhagiyal*. Meyyappan Pathippagam, 1st ed., 2002.
[5] Kathiraiverpillai, Na. *Tamil Peragarathi Thoguthi 1*. Sharada Pathippagam, 1st ed., 1999.
[6] Kamalabalan, Na., Dr. "Pa. Vijay Kavidhaigalil Thonmamum Padimamum." *Navina Thamil Aayvithal*, Volume 5, 16-17 March 2021.
[7] Sasikala, Ira. "Vairamuthu Kavidhaigalil Angatham Oru Aayvu." *International Research Journal of Tamil*, Volume 4, Issue 2, April 2022.
[8] Subramanian, A. Ve. *Azhagiyal Oru Puthiya Paarvai*. Sandhiya Pathippagam, 2005.
[9] Gyanasambandan, A. Sa. *Ilakkiya Kalai*. Meyyappan Pathippagam, 1st ed., 2002.
[10] Thivakar Ranganathan. *Gyanakkooththan Kavidhaigal Muzhuthoguppu*. Kalachuvadu Pathippagam, 1st ed., 2018.
[11] Balusamy. *Vazhviyar Kalanjiyam*. Tamil University, Thanjavur, 1st ed., 2008.
[12] Puliyurkkesigan. *Kalithogai Moolamum Uraiyum*. Sharada Pathippagam, 1st ed., 2010.
[13] Porkai Aathirai. "Azhagiyal Kotpadu Uruvakkathirkup Pazhanthamil Ilakkiyangalil Pangalippu." Thesis/Research Paper, 2009.
[14] Rama Krishnan, S. *Kriyavin Tharkalath Thamil Agarathi*. Kriya Pathippagam, 1st ed., 1992.

[15] Veeraletchumi, Thogen Sensi. "Kavidhaigalil Thonmamozhi Peyarppum Athan Meedana Aayvum." *IJCRDI*, Volume 10, Issue 12, 2022.
[16] Vaidegi, Ira. "Bharathidasan Nokkil Karpanai." *International Journal of Tamil Language and Literary Studies*, Volume 2, Issue 1, July 2009.

Author Contribution Statement: NIL.
Author Acknowledgement: Nil
Author Declaration: Nil
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.

மலர் - 5, இதழ் - 2, வைகாசி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

ஞானக்கூத்தன் கவிதைகளில் அழகியல்

முனைவர் ர. ஆர்த்தி, தமிழ் உதவிப்பேராசிரியர், கற்பகம் உயர்கல்விக் கழகம், கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0001-6639-2228

ஆய்வுச்சுருக்கம்

மக்களின் பல்வேறு உணர்வு நிலைகளும் செயல்களும் பெருகிய எழுத்துப் பதிப்பே இலக்கியம். உயர்ந்த நாகரித்தையும் பண்பாட்டையும் கொண்ட மக்களின் வாழ்க்கைக் கூறுகள், அவர்கள்பேசும் மொழியின் வாயிலாகக் காலந்தோறும் பல்வேறு இலக்கியங்களாக வெளிப்படுகின்றன. இலக்கியம் உருப்பெற உதவும் உணர்வுகளும் காலத்தோறும் மாறிவருதல் இயல்பே. இவை கால மாற்றத்திற்கேற்ப பல மாற்றங்களும் புதுமைகளும் கண்டுள்ளது. சங்க இலக்கியம் தொடங்கி இப்போது ஹைக்கூ கவிதை வரை மனிதனின் அறிவுத்திறன் பெரும் வளர்ச்சி பெற்றுள்ளது. இதில் இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் புதுக்கவிதை தனக்கென்று தனி முத்திரையைப் பதித்துள்ளது. கவிதைகளில் பெரும்பாலும் அழகியல் உணர்வு அதிகமாக காணப்படுகின்றது. எல்லா உணர்வுகளைக் காட்டிலும் மனிதனுக்கு அழகியல் உணர்வு தலைமையான உணர்வாக உள்ளது எனலாம். அழகு மனிதனுக்கு இன்பத்தைத் தருகிறது, எனவே இன்பம் தரும் அழகினை மனிதர்கள் விரும்புகின்றனர். அழகு எனும் உணர்வூட்டத்தினால் இவ்வுலகம் தொய்வில்லாது தொடர்ந்து இயங்கிக்கொண்டிருக்கிறது எனலாம். இத்தன்மையான 'அழகியல்' ஞானக்கூத்தன் படைப்புகளில் வெளிப்படுத்துக்கின்ற கருத்துகளை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

குறிப்புச்சொற்கள்: அழகு, வருணனை, மாலைபொழுது, மலை, கற்பனை.

முன்னுரை

அழகு என்பது உள்ளதால் உணரக் கூடிய உணர்வாகும். இந்த உணர்வதற்கு உயிர் கொடுப்பதே கலை ஆகும். கலை பல வளர்ச்சிக் கொண்டு இப்போது கவிதையாக வளர்ந்து நிற்கிறது. கவிதைக்கு சுவை கொடுப்பது உத்தியாக இருந்தாலும், அதை வருணிக்கும் முறைக் கொண்டே இந்த கவிதையின் சுவை அறிய முடியும். எந்தொரு இலக்கியமாக இருந்தாலும், உத்திக்கு எந்த அளவு முக்கியமோ அதே அளவு வருணனைக்கு முக்கியம் கொடுத்து உள்ளர்கள் கவிஞர்கள். அந்தவகையில் ஞானக்கூத்தன் அவர்கள், தனது கவிதைகளில் வாழ்க்கையின்; நடக்கின்ற ஒவ்வொரு நிகழ்வையும் சுவைப்பட கவிதையாக படைத்து மட்டும் அல்லாமல் வருணித்து உள்ளார். அதையே ஆராய்வதே இக்கட்டுரையில் நோக்கமாகும்.

அழகு

அழகு என்பது காணும்பொழுதும், கேட்கும் பொழுதும், உணரும் பொழுதும் தோன்றும் நல்லுணர்வாகும். அழகு என்பது காண்பவர் கண்ணோட்டத்தில் உள்ளது அல்லது காண்பவரின் கருத்தில் உள்ளது எனலாம். பொருள் ஒன்றே எனினும் ஒருவருக்கு அழகு என தோன்றும் விஷயம் மற்றொருவருக்கு அழகற்றதாகத் தோன்றலாம். ஆகையால் அழகு என்பது காண்பவரின் மனநிலையைச் சார்ந்ததாகும். அழகு மனிதனின் உணர்வுகளை பிரதிப்பலிக்கின்ற கண்ணாடியாக உள்ளது. அழகு என்ற சொல் மக்கள் எல்லோராலும் பயன்படுத்தப்படுகிறது. மனித உணர்வுகளில் அழகுணர்வு முதன்மையாக உள்ளது. இயல்பாக இருக்கும் அழகினை இயற்கை அழகு என்றும், மனிதனால் உருவாக்கப்படுவதை செயற்கை அழகு என்பர் அறிஞர். செயற்கை அழகு என்பது கலை எனப்படுகிறது. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, **"கண்ணாலோ காதாலோ, மனதாலோ, அனுபவிக்கும் இனிமை அல்லது**

மகிழ்ச்சி பொருத்தமான குணம், தகுதியான தன்மை, ஒழுங்கு முறை" (க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, ப. 52) என்று விளக்கம் தருகிறது. கழகத் தமிழ் அகராதி, **"அழகு – சிறப்பு, நூல் வனப்புள் ஒன்று, கண்ட சருக்கரை, மனத்திற்கு இனிமையாகத் தோன்றுவது, தக்க செயல்" (கழகத் தமிழ் அகராதி, ப.54)** என்று பொருள் தருகிறது. இரபீந்திரநாத் தாகூர், **"எனக்கு ரோஜாவைப் பற்றி என்ன தெரியும்? என்பதை என்னால் சொல்லிவிட முடியும். ஆனால், அந்த ரோஜாவினால் நான் அடைகின்ற இன்பத்தை நேரடியாக முழுவதும் சொல்லி விட முடியுமா?" (தமிழர் அழகியல், ப. 9)** என்று கூறுவதால் அழகு பற்றிய கருத்தியலை வரையறை செய்வது அரிது என்பதை உணரலாம். இத்தன்மையான அழகினை உள்ளத்தால் உணர தான் முடியுமே தவிர வார்த்தையாகவோ, மொழி மூலமாகவோ உணர்ந்ததை முழுவதுமாக வெளிப்படுத்த முடிவதில்லை. எனினும் அதை சொற்களால் வரையறுக்கின்ற முயற்சிகளை காலந்தோறும் அறிஞர்களும் திறனாய்வாளர்களும் மேற்கொண்டு வருகின்றனர்

அழகியல்

அழகியல் என்னும் தமிழ்ச்சொல் ஆங்கிலத்தில் ஈஸ்தடிக்ஸ் **(Aesthetics)** என்று வழங்கப்படுகிறது. இச்சொல் **Aesthetickos** என்னும் கிரேக்கச் சொல்லிலிருந்து உருவானது. **Aesthetickos** என்னும் கிரேக்கச் சொல்லிற்குப் **'புலன்களால் அறியும் உணர்வு'** என்று பொருள். அழகியல் என்பதனை **'முருகியல்'** என்று அ.ச.ஞானசம்பந்தன் கூறுகிறார். இலக்கியத் திறனாய்வாளர்கள் இதனை ஒரு தனிக்கலைத் துறையாக கருதி வளர்த்து வருகின்றனர். அ.வெ.சுப்பிரமணியன் அவர்கள்,

> **இன்பமூட்டும் கலைகள் அனைத்தையும் ஒரு துறையாக்கி அதற்கு அழகியல் என்று இக்காலத்தில் பெயர் வழங்குகிறது. இலக்கியம் ஒரு கலையே என்பதால் இலக்கியமும் அழகியல் துறையின் ஒரு பகுதியாகிறது. (அழகியல் - ஒரு புதிய பார்வை, ப. 10)**

என்று விளக்கமளிக்கிறார். வாழ்வியற் களஞ்சியம்,

> **அழகியல் என்பது அழகு வாய்ந்த ஒரு பொருளைக் காணும்போது அல்லது அழகான முறையில் ஒரு கருத்தினை வெளியிடும்போது ஏற்படும் உணர்ச்சியாகும். (வாழ்வியற் களஞ்சியம், தொகுதி -1, ப. 889)**

என்கிறது.

ஞானக்கூத்தனின் அழகியல் பார்வை

அழகியலுக்கு உயிர் கொடுப்பதே அதில் பயன்படுத்தும் உத்திகளும் வருணைகளும் ஆகும். ஞானக்கூத்தன் கவிதைகளில் இவ்விரண்டும் அதிகமாக காணப்படுகிறது. அதைப் பின்வருமாறுக் காணலாம்.

வருணனை

வருணனை அமையவேண்டிய விதம் குறித்து **எஸ்.வையாபுரிப்பிள்ளை** குறிப்பிடுகையில்,

> **'யாதேனும் ஒரு பொருளை, அதன் பலதிறப்பட்ட இயல்புகளையும் அறிவு எளிதிற்பற்றுமாறு, அழகும் சுவையும்பட விவரித்துக் கூறுவதுதான் வருணனை, வர்ணம் என்றால் நிறம் அல்லவா? இதிலிருந்த விவரிக்கப்படும் பொருள் அழகுற்றுச் சோபிக்கும்படி வருணணை அமைதல் வேண்டும் (ஆய்வேடு, அழகியல் கோட்பாடு உருவாக்கத்திற்குப் பழந்தமிழ் இலக்கியங்களில் பங்களிப்பு இயல்-1, ப. 77) என்கிறார்.**

அதாவது, பழந்தமிழ்ப் புலவர்கள் இயற்கை வருணனை, இறைவருணனை, மகளிர் உறுப்புநல வருணனை, யாழ் வருணனை, விலங்குகள் மற்றும் பறவைகள் வருணனைகளைத் தம்பாடல்களில் பாடியுள்ளனர். இவ்வருணனைகளில் காட்சி அழகும், வடிவ அழகும் சிறக்கின்றன எனலாம். இலக்கியத்தில் படைப்பாளன் தான் நினைக்கும் கருத்தினைச் சூழற் பின்னணியோடு அழகுடன் காட்சிப்படுத்தி சொல்ல வருணனை பயன்படுகிறது.

பத்துப்பாட்டில் இடம்பெறும் வருணனைகள் அத்தகையன. படைப்பாளனின் கற்பனைத்திறனை வெளிக்காட்டும் வாயில்களாக வருணனைகள் அமைகின்றன. எனவே இலக்கியகளில் வருணனை இன்றியமையாத இடத்தைப் பெறுகிறது.

இயற்கை வருணனை

இயற்கை தான் முதல் தோழனாக எண்ணிக்கிறார் மனிதன். இயற்கையின் மூலம் தான் தனது உள்ள உணர்வுகளை வெளிப்படுத்திகிறார். இயற்கை இன்றி மனிதனால் வாழவோ அல்லது அதை சிந்தனை செய்யமால் இருக்க முடியாது.

> **இயற்கை என்று குறிப்பிட்டவுடன் கவிஞனின் உள்ளத்தில் தோன்றுவது இயற்கைப் பொலிவுடன் காணப்படும் கடலும், வானும், கதிரும், நிலவும், வானவில்லும், வீண்மீனும், குன்றும், அருவியும், விடிவானும், அந்தியும் கவிஞனின் உள்ளத்தில் அழகுணர்ச்சியைத் தூண்டிவிட்டு இனிய கவிதையினை தோற்றுவிக்கின்றன. இதனையே இயற்கை வருணனை என்கிறோம்.(குலோத்துங்கன் கவிதைகளில் அழகியல், ப. 31)**

இக்கருத்தை மேலும் வலுசேர்க்கும் விதமாக,

> **மண்ணின் மகத்துவத்தையும் இயற்கையின் எழில் கொஞ்சும் அழகினையும் எடுத்துரைப்பதாய் இடம்பெறுவது இயற்கை பற்றி வருணனையாகும். (இஸ்லாமியத் தமிழ் நாவல்களில் வருணனைகள், ப. 56)**

என்கிறார் அப்துல் சமது.

வானம்

இரவின் கருமையான வானம் விடியும்பொழுது கதிரவனின் வருகையால் செங்காந்தள் வண்ணத்திற்கு மாறும். முழுமையாக நிறம் மாறுவதற்கு முன்னர் ஆங்காங்கே தெரியும் வேறு பல வண்ண மாற்றங்களை,

> **ஆடை மாற்றும் போது**
> **அங்கே இங்கே**
> **தெரியத்தானே செய்யும்**
> **என்றது காலை வானம் (ஞானக்கூத்தன் கவிதைகள், ப. 534)**

என்று அழகுபடக் கூறுகிறார். வானம் பகலுக்கும் இரவுக்குக்கும் பாலமாக செயல்படுகின்றது. அவ்விரண்டின் மாற்றத்திற்கேற்ப தன்னையும் மாற்றிக் கொள்கிறது. ஆடை மாற்றுவதைப் போல இரவும் பகலும் தனது வண்ணத்தை மாற்றிக் கொண்டிருக்கிறது. ஆடை மாற்றும் போது கொஞ்சம் தெரியத்தானே செய்யும் என்று காலையைப் பார்த்து வானம் பேசுவதைப் போல காட்சிப்படுத்தியுள்ளார்.

மாலை பொழுது

நெய்தல் நில திணையில் தலைவனின் நினைவால் அனுபவிக்கக் கூடிய துன்பத்தை வெளிப்படுத்தும் வகையில் தலைவி தனது இரங்கல் உணர்வை இயற்கை சார்ந்த சூழ்நிலைகளைக் கொண்டு வெளிப்படுத்திகிறாள். பெரும்பாலும் தன்னுடைய துன்பத்தை மற்றொரு பொருள் மீது சாற்றி அப்பொருளும் துன்பப்படுவதாகத் தலைவி தன்னுடைய துன்பத்தை வெளிப்படுத்தும் விதமாக பாடல்கள் அமைந்துள்ளது. அதற்குச் சான்றாக,

> **மாலை நீ – தூ அறத் துறந்தாரை நினைத்தலின், கயம்பூத்த**
> **போது போல் குவிந்த என் எழில் நலம் எள்ளுவாய்**
> **ஆய்சிறை வண்டு ஆர்ப்ப, சினைப்பூர் போல் தளை விட்ட**
> **காதலர்ப் புணர்ந்தவர் காரிகை கடிகல்லாய்,**
> **மாலை நீ – தகைமிக்க தாழ்சினைப் பதிசேர்ந்து புள்ஆர்ப்ப,**
> **பகைமிக்க நெஞ்சத்தேம் புன்மை பாராட்டுவாய்**

தகைமிக்க புணர்ச்சியார், தாழ்கொடி நறுமுல்லை
முகை முகம் திறந்தன்ன, முறுவலும் கடிகல்லாய் (கலித்தொகை, பா. 118: 9-20)

எனும் பாடலானது குறிப்பிடுகிறது. அதாவது, பிரிவிடை ஆற்றாத தலைவி மாலைப் பொழுதில் காதலர்கள் கூடி இன்பமாக இருப்பதை பழித்து கூறுகிறாள். மேற்காணும் சங்க இலக்கிய கலித்தொகைப் போல் கவிஞர் ஞானக்கூத்தன் தம் கவிதையில் வெளிப்படுத்தியுள்ளார்.

கடலை புதிய வண்ணத்தில் வரைய
மாலை முயன்று கொண்டிருந்தது
கடலில் ஒரு காற்று குறிஞ்சிப் பண்ணையும்
ஒரு காற்று பாலைப் பண்ணையும் பாடக்
காதலர்கள் கூடியிருக்கிறார்கள் (ஞானக்கூத்தன் கவிதைகள், ப. 546: 4-8)

அதாவது, மாலை நேரத்தில் கடற்கரையின் காதலர்கள் தங்கள் காதலை வெளிப்படுத்தலும்(புணர்தல்), காதலர் விட்டு பிரிந்து செல்லும் நிகழ்வையும்(பிரிதல்) எடுத்துரைப்பதாக இக்கவிதை உள்ளது.

கற்பனை

கற்பனை என்பது கவிஞர்களுக்கே உரிய குணமாகும். கவிஞர்களின் கற்பனைக்கு எல்லை விதிக்க முடியாது. அவரின் கற்பனை பரவிக் கிடப்பது. கற்பனையே கவிதைக்கு உயிர்க் கொடுக்கிறது.

கற்பனை மனித வாழ்வுக்கு இன்றியமையாதது. புரிந்து கொள்ள முடியாத பொருள்களை புரிந்து கொள்ளவும் உணர்ந்து கொள்ள முடியாதவற்றை உணர்ந்து கொள்ளவும் கற்பனை துணை செய்கிறது. நம்பிக்கையை வளர்ந்துக் கொண்டு, வாழ்க்கையில் முன்னேற கற்பனை சிறந்த படியாகிறது. (பாரதிதாசன் நோக்கில் கற்பனை, ப. 247)

என்று முருகேசன் குறிப்பிடுகிறார்.

மலை

கவிஞர்கள் தங்களது கற்பனையை, கருத்தை மனத்தில் காட்சியாகக் கண்டு இயற்கை வடிவத்தில் கவிதையாக வடித்திடும் முறையை இயற்கைப்படிமங்கள் எனலாம். படிமக்கவிதைகள் ஞானக்கூத்தன் கவிதைகளில் பல இடங்களில் பார்க்க முடியும். எடுத்துக்காட்டாக இக்கவிதையைச் சொல்லலாம்.

மலைகள் என்னும்
குறும்பற்கள்
முளைத்திராத
பூதலத்தின்
கொக்குப் போலக்
காலூன்றி
நிற்கும் மரங்கள்
அதற்கப்பால்
எழுந்து வீழ்ந்து
தடுமாறும்
நடக்கத் தெரியாக் கடலலைகள்
யார் சென்றாலும்
விரல் நீட்டும். (ஞானக்கூத்தன் கவிதைகள், ப. 37)

என கவிஞர் ஞானக்கூத்தன் **கனவு** என்னும் கவிதையில் பூதலத்தின் குறும்பற்களாக மலைகளையும், மரங்களைக் கொக்குகள் போலக் காலூன்றி நிற்பதாகவும், நடக்கத் தெரியாத

தடுமாறும் மனிதனாக கடல் அலைகளையும் படிமப்படுத்துகின்றார். இதில் மலைகளையும், மரங்களையும், கடல் அலைகளையும் படிமப்படுத்துகின்றார்.

பொம்மைக் குதிரை

கிராமத்து ஊர் எல்லையில் நீர்நிலைக் கரைகளில் வைத்து வழிபடப்படும் சிறுதெய்வங்களின் வாகனமான பொம்மைக் குதிரைகள் உண்மைக் குதிரைகளாக மாறுவதற்கு ஆசைப்பட்டுக் கனைக்கின்றன. இதனால் அதன் வர்ணங்கள் உதிர்ந்து உண்மையான குதிரையாக மாறிவருகிறது என்று பொம்மைக் குதிரைக்கு உயிர்க்கொடுப்பதாக கற்பனை செய்தைப் பற்றி காட்சி கவிதையில் சித்தரிக்கின்றார்.

பொம்மைக் குதிரை
ஆசைப்பட்டுக் கனைச்சு
வர்ணம் உதிர்ந்து போச்சு (ஞானக்கூத்தன் கவிதைகள், ப. 138)

அதாவது, பொம்மை குதிரைகள் உயிர்க் கொண்டதாகவும், பின்பு ஆசைப்பட்டுக் கனைவதாகவும் கவிஞர் கற்பனை செய்துள்ளார் மற்றும் பொம்மை குதிரைகளின் நிறமிழத்தலுக்குப் புதிய வடிவத்தையும் படிமத்தையும் உருவாக்கிக் காட்டுகின்றார் என்பதை அறியமுகிறது.

தொன்மம்

புராணம், பழங்கதைகள் இவற்றில் வரும் பாத்திரங்களோ, நிகழ்வுகளே கவிதையில் ஓரிரு வார்த்தைகளில் சுட்டிக் காட்டப்படும். இவ்வாறு சுட்டினால், பக்கம் பக்கமாக விவரிக்க வேண்டிய தேவையே இல்லாமல், சொல்ல வந்த கருத்தை அது உண்வோடு விளக்கிவிடும். இதனால் உலமெங்கும் சிறந்த கவிஞர் இந்தக் கலைத்திறனை விரும்பிக் கையாளுகின்றனர். இது தொன்மம் எனப்படுகிறது. தொன்மம் ஆங்கிலத்தில் மித் என்று அழைக்கப்படுகிறது. தொன்மம் என்பது புராணச் செய்திகளை குறிக்கும்.

தொன்மமானது உவமை, உருவகம் போன்ற ஒரு உத்தி முறையாக கையாளப்படுகிறது. புராணங்களை வரலாற்று நிகழ்வுடன் பதிய விளக்கும்விதமாக தொன்மம் அமைகிறது.(குலோத்துங்கன் கவிதைகளில் அழகியல், ப. 36)

பழங்காலந்தொட்டே பொதுமைத் தன்மையுடன் நிலத்திற்கேற்ப மனித குல உணர்வுகளை குறியீட்டு வடிவில், சடங்கியலாக, பண்பாட்டு எச்சங்களாக வெளிப்படுத்துவன தொன்மமாகும். (தோகென் சென்சி கவிதைகளில் தொன்மமொழி பெயர்ப்பும் அதன் மீதான ஆய்வும், ப. 22)

தொன்மங்கள் பொய்மைகளின் புகழிடங்கள் அல்ல. உண்மைகளின் இருப்பிடம் கருத்துக்களின் வாழ்விடம் எண்ணங்களின் வரலாற்றுப் பெட்டகம், நினைவுககளின் சுழிமுனை என மேலைநாட்டு அறிஞர் கம்பெல் விளக்கம் தருகிறார். (பா.விஜய் கவிதைகளில் தொன்மமும் படிமமும், ப. 1223)

ஞானக்கூத்தன் கவிதைகளில் தொன்மம் மிகுதியாக இடம் பெறுகிறது. கவிதைகளில் புராணம் செய்திகள் பெரும்பாலும் கதை வடிவில் சொல்வது தான் அவரின் தனிச்சிறப்பாக உள்ளது. பக்தனின் நம்பிக்கை வெளிப்படுத்தும் விதமாக மற்ற தூண்கள் கவிதை அமைந்துள்ளது.

அந்தத் தூண்களில் ஒன்றுக்குள்
எப்படி நுழைந்தான்
நா…ரா…ய…ணன்?
தூணைப் பிளந்து வெளிப்பட்ட
சிங்கத்தின் மடியில் தன் உடம்பு
கிழிபட சிந்திக்கிறான்
இராக்கத குல சிகாமணி இரணியன் (ஞானக்கூத்தன் கவிதைகள், ப. 261)

பிரகலாதனைக் கொல்லத் தான் எடுத்த முயற்சிகளில் எல்லாம் தோற்றுப் போன இரணியன் தானே நேராகப் பிரலாதனைக் கொல்ல போன போது, பிரலாகதன் அச்சமின்றி தான் வணங்கும் இறைவன் தன்னைக் காப்பார் என்றான். அதற்கு இரணியன் கடவுளைக் காட்டு என பிரகலாதனிடம் கேட்க, நாராயணர் எங்கும் இருப்பார் எதிலும் இருப்பார், ஏன் தூணிலும் இருப்பார் எந்தத் துரும்பிலும் இருப்பார் என்று கூறினான். உடனே இரணியன் அந்த தூணை உடைக்க, ஸ்ரீமன் நாரயணர், நரசிமம் அவதாரம் எடுத்து தூணில் இருந்து வெளிவந்து இரணியனை வதம் செய்து பிரகலாதனைக் காத்தருளினார் என்ற தொன்ம செய்தியை கதைப்பாடல் வடிவில் கவிதையில் வெளிப்படுத்தியுள்ளார் கவிஞர்.

குறியீடு

குறியீடு என்பது உருவகத்தோடு மிக நெருக்கமான தொடர்புடையது. குறியீடு என்பது தனக்குத் தொடர்பில்லாத வேறுபொருள்களைச் சுட்டி அதிலிருந்து இன்னொரு பொருளை உருவாக்கித் தருவதாகும். அதாவது, பொருள் வெளிப்படையாகச் சொல்லாமல், உருவகத்துடன் தொடர்புடையாக இருக்க வேண்டும். உதாரணமாக, சரிவு என்னும் கவிதையைக் காண்போம்.

சூளைச் செங்கல் குவியலிலே
தனிக்கல் ஒன்று சரிகிறது (ஞானக்கூத்தன் கவிதைகள், ப.93)

இதில்,

சூளை - சமூகக் கட்டமைப்பு
குவியல் - மக்கள் கூட்டம்
செங்கல் - தனிமனிதன்
சரிதல் - அந்த மனிதன் தனிமைப்படுதல், அல்லது சரிதல்

போன்றவை குறியீடாக அமைந்துள்ளது. இக்கவிதையில் மக்களிடேயே ஒற்றுமை இல்லைவிட்டால் தனிமனிதன் தனிமைப்படுத்தபடுகிறான் அல்லது சமூகத்தின் ஒவ்வாரு மனிதனும் சரிவு நோக்கி சொல்லுகிறான் என குறியீடாக பதவுச் செய்யுள்ளார் கவிஞர். அதாவது. மக்களிடையே ஒற்றுமை இல்லை யென்றால் சூளையில் சரிவும் செங்கல் போல் தனிமனிதன் சரிந்து விடுவார்கள்.

அங்கதம்

அங்கதம் என்பது எதிர்முரணான நகைச்சுவையாக கருத்துக்களை வெளிப்படையாகக் கூறாமல் மறைமுகமாகக் கூறும் பாடல் தன்மையே அங்கதம் ஆகும்.

> **அங்கதம் என்பது நகைச்சுவையும், புலமை நுட்பமும், திறனாய்வு நோக்கும் கொண்ட ஓர் இலக்கிய உத்தி. இது மக்கட் சமுதாய மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்டது (இலக்கியக்கலை, பக். 129)**

என்று ஆங்கில இலக்கியக் கையேடு ஒன்று வரையறுத்துக் கூறுகிறது.

> **அங்கதம் என்பது நகைச்சுவையும் புலமை நுட்பமும், திறனாய்வு நோக்கும் கொண்ட ஓர் இலக்கிய உத்தி. இது மக்கட் சமுதாய மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்டது.(வைரமுத்துக் கவிதைகளில் அங்கதம் ஓர் ஆய்வு, ப.93) தனிப்பட்ட மனிதனின் குறையையோ, ஒரு சமுதாயத்தின் குறையையோ, ஒரு இயக்கத்தின் குறையையோ, குறிப்பாகவோ வெளிப்படையாகவோ சுட்டிக்காட்டுவது அங்கதம் (தமிழ் இலக்கியத்தில் அங்கதம், ப. 21)**

என்று பிரிட்டானிகா கலைக்களஞ்சியம் காட்டுகிறது. அதனால் என்ன என்னும் கவிதையானது இளைஞர்கள், மாணவர்கள் போன்றவர்களிடம் காணப்படும் போலியான எழுத்து(கவிதை) மோகத்தையும் ஆர்வத்தை எடுத்துக்காட்கிறது.

நடிக்கச் சொன்னால் தயங்குகிறார்கள்

வரையச் சொன்னால் வராதென்கிறார்கள்
கவிதை வருமா என்றால் உடனே
எண்பது பக்க நோட்டுப் புத்தகம்
இரண்டை எடுத்து நீட்டுகிறார்கள் (ஞானக்கூத்தன் கவிதைகள், ப. 275)

நடிக்கச் சொன்னால் எனக்கு தெரியாது, வரையச் சொன்னால் வரையை தெரியாது கவிதைத் தெரியுமா என்றப்போது எண்பது பக்க நோட்டு புத்தகம் இரண்டை நீட்டுகிறார்கள், இந்த கவிதையில் இளைஞர்களிடம் காணப்படும் எழுத்தின் மீதுள்ள போலி ஆர்வத்தை கேலிச் செய்தாக அமைகிறது.

தொகுப்புரை

அழகு மனிதனுக்கு இன்பத்தைத் தருகிறது. எனவே இன்பம் தரும் அழகினை மனிதர்கள் விரும்புகின்றனர். அழகியலுக்கு வலுச்சேர்ப்பதாகவும் உறுதுணையாகவும் உத்திகள் உள்ளது. அதாவது புதுக்கவிதையின் சிறப்பே எளிமையானது, புரியும் வகை கொண்டது என்பது மட்டுமல்ல அதில் பயன்படுத்தும் உத்திகள் தான். அழகியல் உணர்வில் எழுத்தப்படும் எந்தவொரு படைப்பாக இருந்தாலும் உத்திகள் கண்டிப்பாக இடம்பெறும். படைப்பாளரின் தனித்தன்மையைத் தீர்மானிப்பது அவர்கள் கையாண்டுள்ள உத்திகளைப் பொறுத்தே. உத்திகள் கவிஞரின் ஆளுமை, அவரின் கருத்தை வாசகனிடம் கொண்டு செல்வதாகும். ஞானக்கூத்தன் கவிதைகளில் அழகியலுக்கும், உத்திக்கும் பஞ்சமில்லை. இவரின் கவிதைகளில் உத்திகள் பரந்து கிடக்கிறது. இவரின் கவிதைகளில் அழகியல் கையாண்டுள்ள விதத்தையும் அதன் சுவை காணமுடிகிறது.

குறிப்புகள்

[1] அப்துல் சமது, மு. "இஸ்லாமியத் தமிழ் நாவல்களில் வருணனைகள்." *புதிய அவையம்*, தொகுதி 7, இதழ் 1, மார்ச் 2023.
[2] ஆர்த்தி, ரா. "குலோத்துங்கன் கவிதைகளில் அழகியல்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 5, சிறப்பு இதழ் 2, ஜீன் 2023
[3] அருணாசலம், மு. *தமிழ் இலக்கியத்தில் அங்கதம்*. முல்லை பதிப்பகம், முதற்பதிப்பு 2002.
[4] இந்திரன். *தமிழ் அழகியல்*. மெய்யப்பன் பதிப்பகம், முதற்பதிப்பு 2002.
[5] கதிரைவேற்பிள்ளை, நா. *தமிழ் பேரகராதி தொகுதி 1*. சாரதா பதிப்பகம், முதற்பதிப்பு 1999.
[6] கமலஹாசன், ந., முனைவர். "பா.விஜய் கவிதைகளில் தொன்மமும் படிமமும்." *நவீன தமிழ் ஆய்விதழ்*, தொகுதி 5, 16-17 மார்ச் 2021
[7] சசிகலா, இரா. "வைரமுத்து கவிதைகளில் அங்கதம் ஒரு ஆய்வு." *சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்*, தொகுதி 4, இதழ் 2, ஏப்ரல் 2022.
[8] சுப்பிரமணியன், அ.வெ. *அழகியல் ஒரு புதிய பார்வை*. சந்தியா பதிப்பகம், 2005.
[9] ஞானசம்பந்தன், அ.ச. *இலக்கியக்கலை*. மெய்யப்பன் பதிப்பகம், முதற்பதிப்பு 2002.
[10] திவாகர் ரங்கநாதன். *ஞானக்கூத்தன் கவிதைகள் முழுத்தொகுப்பு*. காலச்சுவடு பதிப்பகம், முதற்பதிப்பு 2018.
[11] பாலுசாமி. *வாழ்வியற் களஞ்சியம்*. தமிழ்ப்பல்கலைக்கழகம், முதற்பதிப்பு 2008.
[12] புலியூர்க்கேசிகன். *கலித்தொகை மூலமும் உரையும்*. சாரதா பதிப்பகம், முதற்பதிப்பு 2010.
[13] பொற்கை ஆதிரை. "அழகியல் கோட்பாடு உருவாக்கத்திற்குப் பழந்தமிழ் இலக்கியங்களில் பங்களிப்பு." ஆய்வேடு, 2009.

[14] ராம கிருஷ்ணன், எஸ். *க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி*. க்ரியா பதிப்பகம், முதற்பதிப்பு 1992.

[15] வீராலெட்சுமி, தோகென் சென்சி. "கவிதைகளில் தொன்மமொழி பெயர்ப்பும் அதன் மீதான ஆய்வும்." *ஐ.ஜே.சி.ஆர்.டி*, தொகுதி 10, இதழ் 12, 2022.

[16] வைதேகி, இரா. "பாரதிதாசன் நோக்கில் கற்பனை." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 2, இதழ் 1, ஜீலை 2009.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை.
கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை.
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 5, Issue - 2, May 2026 **E-ISSN: 2583-0481**
MLA, DOAJ Indexed

Socio-Cultural Dialectics among the Malasar Tribal Communities of the Anamalai Tiger Reserve

S. Kalpana, (20PHTMF001), Research Scholar of Tamil, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0003-4915-7968
Dr. S. Gurugnanambiga, Assistant Professor of Tamil, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0009-0277-1697
DOI: 10.5281/zenodo.20473905
Received: 27 December 2025; **Revised:** 21 February 2026; **Accepted:** 17 March 2026; **Available Online:** 31 May 2026

Abstract

The Anamalai Tiger Reserve, located in the Western Ghats—one of the world's important biodiversity hotspots and a major regulator of India's climate—is also home to six indigenous tribal communities. Among them, the Malasar tribe living in the Kozhikamuthi hill settlement has a population of 204 people. The Malasar community has a unique indigenous culture that is closely connected with biodiversity conservation and ecological sustainability. Their traditional way of life reflects their long-standing role as protectors of the forest and hill ecosystems. However, despite their ecological knowledge and cultural importance, the Malasar tribe continues to face serious socio-economic marginalisation. Even after 78 years of India's independence, the community still lacks proper basic facilities and remains excluded from mainstream educational opportunities. These conditions create major challenges for their livelihood and also threaten the preservation of their unique cultural heritage. Therefore, improving the socio-economic conditions and educational inclusion of the Malasar community is necessary to protect their distinct indigenous identity and traditional ecological practices.

Keywords: Kozhikamuthi Settlement, Socio-Economic Conditions, Cultural Dynamics, Malasar Tribes.

References

[1] Rathinam, Ka. *Thennindhiyak Kulangalum Kudigalum - Thoguthi: 4* (Thamil Mozhipeyarbu). Thamil Palkalaikazhagam, Thanjavoor, Thamilnadu, India, 1993.
[2] Kavitha. Tha. *Malasar Pazhankudigal*. Arul Pathippagam, Chennai, 2011.
[3] Kunasekaran. Ke. A. *Thamizhaga Malaiyina Makkal*. Chennai: New Century Book House (P) Ltd, 1994.
[4] Somasundaranar. Po. Ve. (U. A.), *Kurunthogai (Moolamum Uraiyum).* Kazhaga Veliyeedu, Chennai, 1961.
[5] Somasundaranar. Po. Ve. (U. A.), *Narrinai (Moolamum Uraiyum).* Kazhaga Veliyeedu, Chennai, 1967.
[6] Thuraisamippillai, Oavai. Su. (U. A). *Purananooru (Moolamum Uraiyum).* Saivasithantha Noorpathippu Kazhagam Ltd, Thirunelveli, 1960.
[7] Bakthavatsala Bharathi. *Thamizhaga Pazhankudigal*. Thiruchi: Adaiyalam Pathippagam, 2007.
[8] Vengataraman. Es. Ar., *Bharatha Pazhankudigal*. Tamil Ezhuthalar Kootturavu Sangam, Chennai, 1983.

[9] Thagavalalar Viparam: Thirumigu. Mani, Kozhikamuthi Malasar Pazhankudi Inaththai Serntha Ivar Kaleem Yanaiyin Mavoothagap Panipurinthu Varukirar. Merkurippitta Thagavalanadhu 10.05.2023 Anru Nigazththappatta Nerkkanalil Perappattadhu.

[10] Charles Leo Prabu, J., Saravanan, S., Mahana Kumar, H. "Management of Captive Asian Elephants in Kozhikamuthi Elephant Camp, Topslip, Anamalai Tiger Reserve, Southern India." *Gajah*, Vol. 40, 2014, pp. 31–34.

[11] Chethan Kumar C. "Educational Exclusion of Tribal Communities in India." *International Journal of Humanities Social Science and Management (IJHSSM)*, Vol. 4, No. 4, Jul.–Aug. 2024, pp. 880–882.

[12] Edgar Thurston. *Castes and Tribes of Southern India*. Asian Educational Services, New Delhi - 110 016, India, 1909.

[13] *National Tiger Conservation Authority/Project Tiger.* Anamalai Tiger Reserve, Statuary Body under the Ministry of Environment, Forest and Climate Change (Government of India).

[14] P. Vasuki, C. Kannan. "Religious Customs of the Kadar Tribes in Anaimalai Region." *Library Progress International*, Vol. 44, No. 3, 2024, pp. 9005–9010.

[15] *Population Census 2011*, Table A-11 Appendix: District wise Scheduled Tribe Population, Tamil Nadu - 2011, ORGI (office of the Registrar General & Census Commissioner, India), Ministry of Home Affairs, Government of India.

[16] Ridhima Kapoor, Sabharwal, M., and Ghosh-Jerath, S. "Co-existence of Potentially Sustainable Indigenous Food Systems and Poor Nutritional Status in Ho Indigenous Community, India: An Exploratory Study." *Environmental Research Letters*, Vol. 19, No. 6, 2024, Article 064033. doi:10.1088/1748-9326/ad4b44.

[17] Satheesh Kumar, A., Sankaranarayanan, S., Bama, P., Baskar, R., and Kanagavalli, K. "An Ethnobotanical Study of Medicinal Plants Used by Local People and Tribals in Topslip (Annamalai Hills) and Ooty (Chinchona Village) of Coimbatore and Ooty District." *International Journal of Current Research*, Vol. 10, No. 05, 2018, pp. 69328–69340.

[18] Yogita Sharma, Manoranjan Ranjit, Parikipandla Sridevi, Bontha V. Babu. "Access to Healthcare Among Tribal Population in India: A Cross-Sectional Household Survey." *The International Journal of Health Planning and Management*, Vol. 40, 2025, pp. 1–8. https://doi.org/10.1002/hpm.392

Author Contribution Statement: NIL.
Author Acknowledgement: Nil
Author Declaration: Nil

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்

மலர் - 5, இதழ் - 2, வைகாசி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ, டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

ஆனைமலை புலிகள் காப்பக மலசர் பழங்குடிகளின் சமூகப் பண்பாட்டு இயங்கியல்

ச. கல்பனா, முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண்: 20PHTMF001, தமிழ்த்துறை,
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0003-4915-7968
முனைவர் ச. குருஞானாம்பிகா, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல்
மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0009-0277-1697

ஆய்வுச் சுருக்கம்

பல்லுயிர் பெருக்கத்தின் மையமாகவும் இந்தியாவின் பருவநிலையைத் தீர்மானிப்பவையாகவும் திகழுகின்ற மேற்குத்தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள ஆனைமலை புலிகள் காப்பகம் ஆறு பழங்குடி இனங்களின் பண்பாட்டுக் காப்பகமாவும் திகழ்கின்றது; பழங்குடிகள் மலைகளின் காப்பாளர்களாவும் திகழ்கின்றனர். ஆனைமலை புலிகள் காப்பகத்தின் கோழிகமுத்தி மலைகிராம பழங்குடி குடியிருப்பில் வசிக்கும் மலசர்களின் மொத்த மக்கள் தொகை 204-ஆக உள்ளது. மலசர் பழங்குடிகளின் பல்லுயிர் சூழல் பாதுகாப்பை உள்ளடக்கிய பண்பாடு தனித்துவமான பழங்குடிப் பண்பாடாக உயர்ந்து நிற்கிறது. ஆனால் சமூக-பொருளாதார நிலமைகளில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கினறனர். இந்தியா சுதந்திரமடைந்து 78 ஆண்டுகள் கடந்த பின்னும் அடிப்படை வசதிகளில் முழுமையடையாத தன்மையோடும் கல்விச் சூழலில் இருந்து அந்நியப்படுத்தப்பட்ட நிலையோடும் மலசர் பழங்குடிகள் வாழ்ந்து வருகின்றனர். மலசர் பழங்குடிகளின் தனித்த பண்பாடு பாதுகாக்கப்பட வேண்டுமாயின் அம்மக்களின் சமூக-பொருளாதார மேம்பாடு உறுதி செய்யப்பட வேண்டும்.

குறிப்புச்சொற்கள்: கோழிகமுத்தி குடியிருப்பு, சமூகப் பொருளாதாரம், பண்பாட்டு இயங்கியல், மலசர் பழங்குடியினர்.

முன்னுரை

தமிழ்நாட்டின் மேற்குத் தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள ஆனைமலை புலிகள் காப்பகம், உயிரியல் பன்முகத்திற்கும் மலைவாழ் பழங்குடிகளின் தொன்மையான வாழ்வியலுக்கும் முக்கிய இடமாகும். இக்காப்பகத்தின் ஆறு வனச்சரகங்களில் அமைந்துள்ள முப்பத்து மூன்று மலைக்கிராமங்களில் மலசர், காடர், புலையர், முதுவர், எரவாளர், மலை மலசர் என ஆறு பழங்குடியினங்கள் வாழ்ந்து வருகின்றனர். அவற்றுள், ‘மலைகளின் அரசர்கள்’ என்று பொருள்படும் வழங்குபெயருடன் மலசர் பழங்குடிகள் இயற்கையோடு இயைந்த பண்பாட்டு வாழ்வியலைக் கொண்டுள்ளனர். உலாந்தி வனச்சரகத்தில் அமைந்துள்ள கோழிகமுத்தி மலைக்கிராமம், டாப்சிலிப்பிலிருந்து 8 கி.மீ. தொலைவிலும் பொள்ளாச்சியிலிருந்து 43 கி.மீ. தொலைவிலும் யானைகள் முகாமை ஒட்டி அமைந்துள்ளது. காட்டோடையும் மா, பலா, வாழை, மூங்கில் போன்ற மரங்களும் சூழ்ந்த இம்மலையின் மடியில் 41 மலசர் குடும்பங்களைச் சேர்ந்த 118 மக்கள் வாழ்ந்து வருகின்றனர். கோழிகமுத்தியில் மலசருடன் காடர், புலையர் என மூன்று பழங்குடி இனங்கள் ஒருங்கிணைந்து வாழ்கின்றன. 2023-ஆம் ஆண்டு மே மற்றும் ஜூன் மாதங்களில் நேரடியாகச் சென்று நேர்காணல் மற்றும் உற்றுநோக்கல் முறையில் சேகரித்த தரவுகளை அடிப்படையாகக் கொண்டது இக்கட்டுரை. காலனியக் காலத்தில் கொத்தடிமைகளாக இருந்த மலசர்கள் தற்காலத்தில் வனத்துறைப் பணிகள், யானை முகாம் பணிகள், மலைபடு பொருட்கள் சேகரிப்பு என எவ்வாறு

பொருளாதாரத்தில் ஈடுபட்டுள்ளனர் என்பதையும், இயற்கை சார்ந்த பாரம்பரிய அறிவு இன்றும் எவ்வாறு நீடித்துள்ளது என்பதையும் விளக்குவது இக்கட்டுரையின் மையமாகும். கோழிகமுத்தி மலசர்களின் சமூகப் பொருளாதார நிலை, கல்வி, சுகாதாரம், பாரம்பரிய உணவு முறைகள், தொழில் நிலை, மரபுவழிச் சடங்குகள், மூலிகை மருத்துவம், திருமண முறை, இறப்பு சடங்குகள், மொழி நிலை ஆகிய பன்முகங்களையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஆனைமலை புலிகள் காப்பகம்

தமிழ்நாட்டின் ஐந்து புலிகள் காப்பகங்களில் ஒன்றான ஆனைமலை புலிகள் காப்பகம் கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களின் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் அமைந்துள்ளது. **958.59 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட ஆனைமலை புலிகள் காப்பகத்தின் அமைவிடம் 10° 13.2’ N முதல் 10° 33.3’ N வரை அட்ச ரேகையிலும் 76° 49.3’E முதல் 77° 21.4’E வரை தீர்க்க ரேகையிலும் உள்ளது. பொள்ளாச்சி (109.72 ச.கி.மீ), உலாந்தி (75.93 ச.கி.மீ), வால்பாறை (171.50 ச.கி.மீ), மானாம்பள்ளி (138.76 ச.கி.மீ), உடுமலைப்பேட்டை (290.18 ச.கி.மீ), அமராவதி (172.50 ச.கி.மீ) என ஆறு வனச்சரகங்களைக் காப்பகம் கொண்டுள்ளது** (ATR). பல்லுயிர் பெருக்கத்தின் முக்கிய இடமாகத் திகழும் இக்காப்பகத்தில், **மலசர், மலை மலசர், காடர், முதுவர், புலையர், எரவாளர் என ஆறு பழங்குடியினங்கள் தொன்று தொட்டு வசித்து வருகின்றனர்** (வாசுகி, ப.9005). காப்பகத்தின் முப்பத்தி மூன்று மலைகிராமங்களில் பழங்குடி குடியிருப்புகள் உள்ளன. 1. சர்கார்பதி, 2. நாகரூத்து, 3. சின்னார் ஆகிய மூன்று மலைகிராமங்கள் பொள்ளாச்சி வனச்சரகத்திலும் 4. எருமைப் பாறை, 5. கோழிகமுத்தி, 6. வரகளியாறு ஆகிய மூன்று மலைகிராமங்கள் உலாந்தி வனச்சரகத்திலும் 7. கூமாட்டி, 8. நெடுங்குன்று, 9. கவர்க்கல், 10. பூனாட்சி, 11. ஈத்தக்குழி, 12. மாவடப்பு, 13. காடம்பாறை, 14. கருமுட்டி ஆகிய எட்டு மலைகிராமங்கள் வால்பாறை வனச்சரகத்திலும் 15. பன்னிக்குழி, 16. பாலகானாறு, 17. கல்லார்குடி, 18. சுந்தரன்குடி, 19. சங்கரன்குடி ஆகிய ஐந்து மலைகிராமங்கள் மானாம்பள்ளி வனச்சரகத்திலும் 20. பரமன்கடவு, 21. புளியம்பட்டி, 22. குளிப்பட்டி, 23. மேல்குருமலை, 24. குருமலை, 25. ஜல்லிமுத்தன்பட்டி, 26. திருமூர்த்திமலை, 27. ஈசல்தட்டு, 28. ஆட்டுக்கல்மலை ஆகிய ஒன்பது மலைகிராமங்கள் உடுமலைப்பேட்டை வனச்சரகத்திலும் 29. கோடந்தூர், 30. கரட்டுப்பதி, 31. தளிஞ்சி, 32. மஞ்சம்பட்டி, 33. மூங்கில்பள்ளம் ஆகிய ஐந்து மலைகிராமங்கள் அமராவதி வனச்சரகத்திலும் உள்ளன. இவற்றுள் பொள்ளாச்சி வனச்சரகத்தைச் சேர்ந்த சர்கார்பதியிலும் உலாந்தி வனச்சரகத்தைச் சேர்ந்த கோழிகமுத்தியிலும் மலசர் பழங்குடிகள் வசித்து வருகின்றனர். சர்கார்பதி மலைகிராமம் மேற்கு தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ளதன் பொருட்டு மலைத்தொடரில் அமைந்துள்ள கோழிகமுத்தியை மட்டும் ஆய்வு எல்லையாகக் கொண்டு கட்டுரை அமைகின்றது. கோழிகமுத்தி மலைகிராமத்திற்கு 2023-மே மற்றும் ஜீன் மாதங்களில் நேரடியாகச் சென்று நேர்காணல் மற்றும் உற்றுநோக்கல் அணுகுமுறையில் சேகரித்த தரவுகளைப் பகுத்தாய்ந்து, இயற்கையோடு இயைந்த பண்பட்ட வாழ்வியலோடு வாழ்ந்துவரும் கோழிகமுத்தி மலசர் பழங்குடிகளின் சமூகப் பண்பாட்டு இயங்கியலை எடுத்துரைப்பது கட்டுரையின் நோக்கமாகும்.

மலசர் பழங்குடிகள்

தென்னிந்தியாவில் தமிழ்நாட்டிலும் கேரளாவிலும் மலசர் பழங்குடிகள் வசித்து வருகின்றனர். தமிழ்நாட்டில் கோவை மாவட்டத்தின் ஆனைமலை வட்டார மலைகிராமங்களிலும் பொள்ளாச்சி, கிணத்துக்கடவு, மதுக்கரை ஆகிய வட்டாரங்களின் கிராமப்புறங்களிலும் வசித்து வருகின்றனர். தமிழ்நாட்டில் மலசர் பழங்குடிகளின் மக்கள் தொகை 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மொத்தம் 6,431 -ஆகவும் (பெண்கள் -

3,172; ஆண்கள் - 3,259) கோவை மாவட்டத்தில் 5,793 -ஆகவும் (பெண்கள் - 2,876; ஆண்கள் - 2,917) உள்ளது. தொழில் நிமித்தம் போன்ற சில காரணங்களின் பொருட்டு மலசர் பழங்குடி மக்கள், தமிழகத்தின் பிற மாவட்டங்களில் தற்காலிகமாகக் குடியேறி வசித்தும் வருகின்றனர்.

கோழிகமுத்தி மலசர்களின் சமூக இயங்கியல்

மலைகளின் அரசர்கள் (மலசர் - மலை + அரசர்) என்று பொருள்படும் வழங்குபெயருடன் திகழும் மலசர் பழங்குடிகள் வசித்து வரும் ஆனைமலை புலிகள் காப்பகத்தின் கோழிகமுத்தி மலைகிராமம் பொள்ளாச்சியிலிருந்து 43 கி.மீ. தொலைவிலும் டாப்சிலிப்பில் இருந்து 8 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. கோழிகமுத்தி யானைகள் முகாமை ஒட்டி மா, பலா, வாழை, நாவல், கொய்யா, பப்பாளி, சீதா, கொடுக்காப்புளி, நுணா, புங்கை, புன்னை, புளிய மரம், மூங்கில் போன்ற மரங்களின் தண்மையோடு காட்டோடை சூழ்ந்து காணப்படும் மலையின் மடியில் பழங்குடிகளின் குடியிருப்புகள் அமைந்துள்ளன. வேட்டைகாரன் புதூர் ஊராட்சிக்கு உட்பட்ட கோழிகமுத்தியில் மலசர் உட்பட காடர், புலையர் என மூன்று பழங்குடி இனங்கள் வசித்து வருகின்றனர். கோழிகமுத்தியில் மொத்தம் நாற்பத்தியொறு மலசர் குடும்பங்கள் இருக்கின்றன. பெண்கள் - 46; ஆண்கள் - 48, குழந்தைகள் - 24 என மொத்தம் 118 மலசர்கள் வசிக்கின்றனர். கோழிகமுத்தியிலிருந்து பணிநிமித்தமாக (வனத்துறை மற்றும் வனத்துறை சார்ந்த பணிகள்) இருபத்தி மூன்று குடும்பங்கள் (பெண்கள் - 28, ஆண்கள் - 29, குழந்தைகள் - 29 என மொத்தம் 86 மலசர்கள்) உலாந்தி வனச்சரக அலுவலகம் அமைந்துள்ள டாப்சிலிப்பில் உள்ள அரசு குடியிருப்பில் வசிக்கின்றனர்.

படம் 1 & 2 (கோழிகமுத்தியில் மலசர் குடியிருப்பு)

கோழிகமுத்தியில் மலசர் குடியிருப்புகள்

கோழிகமுத்தியில் 32 வீடுகளில் 41 மலசர் குடும்பங்கள் வசித்து வருகின்றனர். பாதியளவு சுவருடனும் சுவருக்கு மேலே மூங்கில் படல்களைக் கொண்டும் மறைக்கப்பட்ட வீடுகளின் கூரை தகரச் ஷீட்டுகளால் வேயப்பட்டு தற்பொழுது பல வீடுகளில் தகரங்கள் துருப்பிடித்து இருப்பதால் மழைகாலங்களில் மழைநீர் ஒழுகும் நிலையில் உள்ளன. ஒழுகும் இடங்களில் தார்பாய்களைக் கொண்டு மூடியுள்ளனர். குடும்ப வாரிசுகளுக்கு திருமணம் நிகழ்ந்து குடும்பம் விரிவடைகையில் வீட்டுச்சுவர்களை ஒட்டி சிறு அறை போன்ற அளவில் லண்டன் செடி என்று மலசர்களால் வழங்கப்படுகின்ற உண்ணிச் செடிகளின் (*Lantana camara*) கோல்களை உள்ளீடாக வைத்து அதன் மீது மண்ணைக் கரைத்துப் பூசி சுற்றுச் சுவர் அமைத்து பயன்படுத்தி வருகின்றனர். வீடுகள் காட்டெருமைச் சாணம் கொண்டு மெழுகப்படுகின்றன. பண்டைய காலங்களில் மலசர்களின் வீடுகள், தேக்கு மற்றும் ஓடை (*Ochlandra travancorica*) இலைகளால் வேய்ந்து மூங்கில் படல்களால் சுற்றுச் சுவர் அமைத்து பயன்படுத்தியுள்ளனர்.

41 மலசர் குடும்பங்களில் 33 குடும்பங்கள் குடும்ப அட்டை பெற்றுள்ளனர். 8 குடும்பங்கள் குடும்ப அட்டை பெற முயற்சித்து வருகின்றனர். 18 குடும்பங்கள் வீட்டுப் பட்டா

பெற்றுள்ளனர். 14 குடும்பங்கள் வீட்டுப் பட்டா பெற முயற்சித்து வருகின்றனர். 11 வீடுகளில் (LPG) சமையல் எரிவாயு வசதி உள்ளது. கோழிகமுத்தியில் மின்சார வசதி இணைப்பு கிடையாது. மலசர் வீடுகளில் அரசு வழங்கிய சூரிய மின்சக்தி இணைப்பு மூலம் மூன்று மின் விளக்குகளும் ஒரு மின்னேற்ற செருகிமுனையும் (Plug Point) உள்ளன. பருவ மழைக் காலங்களில் தொடர்ந்து மழை பெய்தால் சூரிய மின்சக்தியின்றி கோழிகமுத்தி குடியிருப்புகள் இருள் சூழ்ந்து காணப்படும். கோழிகமுத்தியில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் 2022-இல் குடிநீர் குழாய் இணைப்பு வசதி ஏற்படுத்தப்பட்டது; வாரத்திற்கு மூன்று முதல் நான்கு நாட்கள் வீதம் குடிநீர் விநியோகம் வழங்கப்பட்டு வருகின்றது. குடிநீர் குழாய் வசதி இணைப்பு பெறுவதற்கு முன்பு கோழிகமுத்தி பழங்குடிகள் அருகில் உள்ள காட்டோடையை நம்பியிருந்தனர். கோடையில் காட்டோடை வற்றினால் ஓடையில் ஊற்று எடுத்து அன்றாட நீர்த்தேவையைப் பூர்த்தி செய்து வந்தனர். மூன்று தற்காலிக பொது கழிப்பறைகள் மட்டுமே கோழிகமுத்தியில் உள்ளன. கழிப்பறையில் குழாய் நீர் இணைப்பு இன்மையாலும் குடியிருப்புப் பகுதியிலிருந்து சற்று தள்ளி இருப்பதாலும் தற்பொழுது மக்கள் பயன்பாட்டில் இல்லாமல் இருக்கின்றன. ஒவ்வொரு வீடுகளிலும் வீட்டை ஒட்டி மூங்கில் படல்களையும் தகரச் சீட்டுகளையும் கொண்டு குளியலறைகளைக் கட்டி பயன்படுத்தி வருகின்றனர்.

கோழிகமுத்தியில் யானை முகாம் அமைந்திருப்பதால் இம்மலைகிராமத்திற்கு இணைப்பு சாலை வசதி உள்ளது. ஆனால் அரசுப் பேருந்தின் சேவை டாப்சிலிப்புடன் முடிவடைந்து விடுகின்றது. பொள்ளாச்சியிலிருந்து டாப்சிலிப்பிற்கு காலை, நண்பகல், மாலை என மூன்று முறை தமிழக போக்குவரத்துக் கழகத்தின் ஒரு பேருந்தும் பொள்ளாச்சியிலிருந்து பரம்பிக்குளத்திற்கு டாப்சிலிப் வழியாக முற்பகலில் ஒருமுறை கேரள போக்குவரத்துக் கழகத்தின் ஒரு பேருந்தும் இயங்கிவருகின்றன. கோழிகமுத்தியில் இருந்து மலசர்கள் வெளியூருக்கு செல்ல டாப்சிலிப்பிற்கு நடை பயணமாக வந்து பேருந்தில் சென்று வருகின்றனர். மலசர்கள், 2022-இல் சிறிது சேமிப்புத் தொகையோடு கடன் பெற்று ஐந்து நான்குசக்கர வாகனங்களை சொந்தமாக வாங்கி கோழிகமுத்தி மக்களின் அவசர காலப் போக்குவரத்து பயன்பாட்டை ஓரளவிற்கு எளிதாக்கியுள்ளனர்.

> **பெரும்பாலான இந்தியப் பழங்குடி மக்கள் பொது ஆரம்ப சுகாதார மையங்களையே சார்ந்துள்ளனர், ஆனால், போதிய சாலை மற்றும் போக்குவரத்து வசதியின்மை போன்ற அணுகல் தடைகள் தொடர்கின்றன. (யோகிதா சர்மா, ப. 2)**

ஆனைமலை புலிகள் காப்பகத்தில் இணைப்பு சாலை வசதியில்லாத மலைகிராமங்களில் வசிக்கும் பழங்குடிகளின் சுகாதாரக் கட்டமைப்பு பின்தங்கிய நிலையில் உள்ளது; விபத்து, பேருகாலம் போன்ற அவசர காலங்களில் நோயாளியைத் தொட்டில் கட்டி சுமந்து சென்று மருத்துவமனையில் சேர்க்கும் நிலை நிலவி வருகின்றது. ஆனால் இணைப்பு சாலை வசதி இருப்பதால் கோழிகமுத்தி மலசர் பழங்குடிகளின் சுகாதாரக் கட்டமைப்பு மேம்பட்டு வருகின்றது. மலசர் பழங்குடிகள் பாரம்பரிய மருத்துவ முறைகளுக்கும் முக்கியத்துவமளித்துப் பின்பற்றுவதோடு டாப்சிலிப்பில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார மையத்திலும் போதிய சிகிச்சைகளை எடுத்துக்கொள்கின்றனர். கடந்த ஐந்து ஆண்டுகளில் பேரு கால இறப்புகள் ஏற்படவில்லை. கர்ப்பிணி பெண்கள் ஆரம்ப சுகாதார மையத்தில் உரிய பரிசோதனைகளைத் தவறாமல் செய்து கொள்வதோடு குழந்தைகளுக்கும் உரிய காலத்தில் தடுப்பூசி செலுத்திக்கொள்வது என அனைத்து நலவாழ்வு வழிகளையும் முறையாகக் கடைபிடித்து வருகின்றனர். டாப்சிலிப் ஆரம்ப சுகாதார மையத்தில் 24×7 செயல்படக்கூடிய அவசர மருத்துவ ஊர்தியின் (Ambulance) சேவை இயக்கப்பட்டு வருகின்றது. மலைப்பாதை என்பதால் கோழிகமுத்தியிலிருந்து டாப்சிலிப் செல்ல ஒன்றரை மணி நேரத்திற்கு மேலாகும்; அவசர காலங்களில் டாப்சிலிப் அவசர ஊர்திக்குத் தகவல் தெரிவித்து ஊர்தி கோழிகமுத்தி

வருவதற்கே நேரமெடுக்கும் என்பதால் மலசர்களிடம் உள்ள சொந்த வாகனங்களைக் கொண்டு ஆரம்ப சுகாதார மையத்திற்கு வந்தடைகின்றனர். நோயாளியின் நிலையைப் பொறுத்து பொள்ளாச்சி அரசு தலைமை மருத்துவமனைக்கு அனுப்பி வைக்க மருத்துவர் பரிந்துரைக்க நேர்கையில் அவசர ஊர்தி பெரிதும் பலனளிக்கின்றது.

அங்கன்வாடியும் அரசு உண்டு உறைவிட நடுநிலைப் பள்ளியும் டாப்சிலிப்பில் அமைந்துள்ளன. உண்டு உறைவிடப் பள்ளியில் தங்கி பயின்று வந்த கோழிகமுத்தி பழங்குடி குழந்தைகளிடையே பல காலமாக நிலவி வந்த இடைநிற்றலை சரிசெய்யும் பொருட்டு தற்பொழுது வனத்துறையினரால் வனத்துறையின் வாகனம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு குழந்தைகளை காலையும் மாலையும் கோழிகமுத்தியிலிருந்து பள்ளிக்கு அழைத்து வந்து விடுகின்றனர்.

கோழிகமுத்தி பழங்குடி குழந்தைகள் உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிப் படிப்பைத் தொடர வேண்டுமாயின் ஆனைமலை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கும் வேட்டைகாரன் புதூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கும் செல்ல வேண்டி உள்ளது. உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பிரிவில் பயிலும் குழந்தைகளை டாப்சிலிப்பிலிருந்து ஆனைமலைக்கும் வேட்டைகாரன் புதூருக்கும் அழைத்து சென்று வர வனத்துறையின் வாகனம் இயக்கப்பட்டு வருகின்றது. கோழிகமுத்தி குழந்தைகள் உயர்நிலை, மேல்நிலைப் படிப்பைத் தொடர வேண்டுமெனில் தங்கள் பெற்றோர்கள் டாப்சிலிப் அரசு குடியிருப்பில் தங்கி வனத்துறையில் பணியாற்றும் நிலையில் இருந்தால் டாப்சிலிப்பிலிருந்து வனத்துறையின் வாகன உதவியுடன் பள்ளி சென்று கற்பது எளிமையாக இருக்கும். இல்லையென்றால் டாப்சிலிப்பில் அரசு குடியிருப்பில் தங்கியுள்ள உறவினர் வீடுகளிலோ அல்லது சேத்துமடையை அடுத்துள்ள அண்ணா நகர் மலசர் பதியில் (பதி - மலசர்கள் வசிக்கும் குடியிருப்புப் பகுதியை பதியென்று வழங்குவர்) உள்ள உறவினர் வீடுகளிலோ தங்கித்தான் தொடர வேண்டிய நிலை நிலவுகின்றது. 2023-2024 கல்வியாண்டில் கோழிகமுத்தி மலசர் பழங்குடி இனத்திலிருந்து மூவர் இளநிலை பட்டப் படிப்பையும் இருவர் தொழில்துறை பயிற்சி படிப்பையும் ஒருவர் மேல்நிலை பள்ளிப் படிப்பையும் ஒன்பது-பத்து வகுப்புகளில் நால்வரும் ஆறு முதல் எட்டாம் வகுப்பு வரை பதினோறு மாணவர்களும் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை ஏழு மாணவர்களும் அங்கன்வாடியில் ஐந்து குழந்தைகளும் படித்து வந்தனர். பெரும்பாலானவர்களுக்கு பட்டப் படிப்பு கனவுகள் இருந்தும் படிப்பைத் தொடர முடியாமல் போகும் நிலை ஏற்படுகின்றது. பொதுக்கல்வி வளாகங்களில் பாகுபாடு கடைபிடிக்கப்படுவது போன்ற நிலையை உணர்வதாகவும் அவை தாழ்வு மனப்பான்மையை அவர்களுக்குள் தோற்றுவிப்பதாகவும் உணருகின்றனர். இதுபோன்ற பல சிக்கல்களையும் குழப்பங்களையும் கடந்துதான் மலசர் பழங்குடிகள் கல்வி கற்க வேண்டிய சூழல் நிலவுகின்றது.

> **பாகுபாடுகளுக்கு எதிரான கொள்கைகளை செயல்படுத்துதல், பழங்குடியினர் பண்பாடுகளைப் பற்றிய விழிப்புணர்வை உயர்த்துதல், அனைவரையும் உள்ளடக்கிய பள்ளி சூழலை உருவாக்குதல் ஆகியவை, பழங்குடியினர் மாணவர்கள் எதிர்கொள்ளும் பாகுபாடுகளை குறைத்து, அவர்களுக்கு ஆதரவான மற்றும் பாதுகாப்பான கற்றல் சூழலை உருவாக்க உதவும். (சேதன் குமார், ப. 881)**

சமூகப் பொருளாதாரம்

காலனிய ஆட்சி நிலவிய காலத்தில் மலசர்களின் தொழில் நிலையைப் பதிவுசெய்துள்ள எட்கர் தர்ஸ்டன்,

> **வணிகர்களுக்காக மலசர்கள் மருந்துச் சரக்குகளைச் சேகரிக்கின்றனர். மலசர்களை நிலக்கிழார்கள் அந்த வணிகர்களுக்கு வாடகைக்கு விட்டுள்ளனர். வணிகர்களுக்கு ஏதேனும் மதிப்புடைய பொருள்களைச் சேகரித்துத் தந்து அதற்கு ஈடாக வாழ்க்கை**

நடத்தத் தேவையானவற்றை அவர்களிடமிருந்து பெறுவர் (தென்னிந்தியக் குலங்களும் குடிகளும், ப. 481)

என்று குறிப்பிட்டுள்ளதன் வாயிலாக பண்ணை அடிமைகள் போல மலசர்கள் கடந்த காலங்களில் நடத்தப்பட்டிருப்பதை அறியலாம். "**பெரிய நிலக்கிழார்கள் மலசரைத் தமது பண்ணையில் கொத்தடிமைகளாக (Bonded Labour) வேலைக்கு அமர்த்திக் கொள்கிறார்கள்." (பாரதப் பழங்குடிகள், ப. 6)** என்று எட்கர் தர்ஸ்டனைத் தொடர்ந்து மலசர்களின் சமூக நிலையை ஆய்வாளர்கள் பதிவு செய்துள்ளனர்.

தற்பொழுது கோழிகமுத்தி மலசர்கள், வனத்துறையில் வேட்டைத் தடுப்புக் காவலர் பணி பிரிவுகளிலும் (Anti-Poaching Watcher), வனத்துறையின் சுற்றுச் சூழல் அங்காடி, உணவகம், விடுதி அறைகள், மூலிகை வனம், அருங்காட்சியகம் போன்றவற்றில் பராமரிப்பாளர் போன்ற பணி நிலைகளிலும் பணியாற்றி வருகின்றனர். பூச்சைக்கொட்டை (Soap Nuts- *Sapindus emarginatus*), தேக்கு மற்றும் மலை வேம்பு (*Melia composita wild*), மூங்கிலரிசி போன்ற மலைபடு பொருட்களைச் சேகரித்து கூட்டுறவு அங்காடியின் விற்பனைக்குக் கொடுப்பது போன்ற பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். "**பாரம்பரியமாக யானை முகாமில் மலசர்கள் மாவூத்துகளாகவும் கவாடிகளாகவும் (மாவூத்து - முதன்மைப் பாகர்; கவாடி - உதவியாளர்) பணியாற்றி வருகின்றனர்." (சார்லஸ் லியோ பிரபு, ப. 33)** இப்பணி கோழிகமுத்தி மலசர்களின் சமூகப் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது. மலசர்களோடு கோழிகமுத்தியைச் சேர்ந்த புலையர்களும் காடர்களும் முகாமில் பணியாற்றி வருகின்றனர். தற்பொழுது முகாமில் 26 யானைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. 26 யானைகளுக்கு முறையே ஒரு மாவூத்து, கவாடி வீதம் மொத்தம் ஐம்பத்தி இரண்டு பழங்குடிகள் பணியாற்றுகின்றனர்.

புகழ்பெற்ற கும்கி யானையான கலீம் யானை உட்பட மொத்தம் 18 யானைகளை மலசர்கள் பராமரிக்கின்றனர். மாவூத்துகளாக பதினைந்து மலசர்கள்; கவாடிகளாக பத்து மலசர்கள் என மொத்தம் 25 மலசர்கள் யானை முகாமில் பணியாற்றி வருகின்றனர். யானைக்காரர்களாகப் பணியாற்றும் மலசர்கள் பராமரித்துவரும் யானையைத் தங்களது குடும்பத்தில் ஒருவராகக் கருதுகின்றனர். யானை வேலையில் இருக்கும் மலசர்கள், **"யானை வேலைதான் எங்க குடும்பத்தைக் காப்பாத்துது; புள்ளகுட்டிங்க படிக்கிறதுக்கும் நல்ல துணிமணி போட்டுக்கிறதுக்கும் யானைதாங் காரணம்; யானை இல்லாட்டி நாங்க இல்ல" (தகவலாளர் - திருமிகு. மணி)** என்று கருதி அர்ப்பணிப்புடன் யானைகளைப் பராமரிக்கின்றனர். பராமரிப்புப் பணிகளில் மாவூத்தும் கவாடியும் இணைந்து அடுக்களை வேலைகளைச் செய்வது (யானைக்கு உணவுக் கவளம் சமைப்பது), மேய்ச்சலுக்கு செல்வது, இரவுத் தீவனங்களைச் சேகரித்து வருவது, முகாமில் யானை இருக்கும் இடங்களைத் தூய்மை செய்வது, யானையை நீராட்டுவது போன்ற பணிகளை தினசரி செய்து வருகின்றனர்.

கோழிகமுத்தி மலசர்களின் பண்பாட்டு இயங்கியல்

சமவெளி மக்களின் புழங்குபொருட் பண்பாடு மண்ணிலிருந்து வளர்ந்ததைப் போல் மலைவாழ் மக்களின் பண்பாடு மூங்கிலில் இருந்து வளர்ந்தது எனலாம். அவ்வண்ணம் கோழிகமுத்தி மலசர்களின் புழங்குபொருட் பண்பாட்டில் மூங்கில் முக்கிய இடம் பெற்று வந்திருக்கின்றது. மூங்கிலால் செய்யப்பட்ட குடுவைகள், இருக்கைகள், கட்டில்கள், விளையாட்டுப் பொருட்கள்; ஓடை மற்றும் மூங்கில் கொண்டு பின்னப்பட்ட பாய், முறம், கூடை வகைகள்; அகப்பை போன்ற கரண்டி வகைகள் புழக்கத்தில் இருந்துள்ளன. வழுக்கப்பூட்டான் என்று வழங்கப்படுகின்ற அரிவாள் மூக்குப் பச்சிலைத் தாவரத்தின் (*Sida acuta*) காய்ந்த மார்களை வீடு பெருக்கப் பயன்படுத்துகின்றனர். மேலும் இத்தாவரத்தை

மூலிகையாகவும் இலைகளைப் பிழிந்து சாறெடுத்து தலை கழுவும் நீர்மமாகவும் (Shampoo) பயன்படுத்துகின்றனர்.

மண், இரும்பு போன்றவற்றாலான கலன்களின் வருகைக்கும் அவற்றின் பரவலான புழக்கத்திற்கு முன்பு கறி, காய், பழ வகைகளை மூங்கிலுக்குள் அடைத்துத் தீயில் வாட்டியும் சுட்டும் சமைத்துச் சாப்பிடும் வழக்கம் இருந்துள்ளது. இன்றைக்கு மூங்கில் பிரியாணி என்று பரவலாக விரும்பப்படுகின்ற உணவு வகையும் அதன் செய்முறையும் மூங்கிலோடு வளர்ந்த நாகரீகத்தைக் கொண்ட மலசர்கள் உட்பட பழங்குடிகளின் பண்பாட்டிலிருந்தே வந்துள்ளன என்று கருதலாம்.

ஆனைமலை புலிகள் காப்பகப் பழங்குடிகள் முந்தைய காலங்களில் வேட்டையாடிகளாகவும் உணவு சேகரிப்பவர்களாகவும் வாழ்க்கை நடத்தி வந்தனர். (சதீஸ் குமார், ப. 69329)

புரதம் - நார்ச்சத்து, மாவுச்சத்து என்று சரிவிகித உணவு முறையைப் பின்பற்றி வந்த மலசர்கள் இன்று சரிவிகித உணவு முறையில் புரதத்தை குறைந்த அளவு உட்கொள்ள நேர்வதால் ஊட்டச்சத்து பற்றாகுறையை எதிர்கொண்டு வருகின்றனர்.

பழங்குடி உணவு முறைகள் ஊட்டச்சத்து குறைபாட்டை தடுப்பவையாகவும் உயிரியல் பல்வகைமை மற்றும் இயற்கை வளங்களின் நிலையான பயன்பாட்டை ஒருங்கிணைத்து, சூழல் மண்டலங்களைப் பாதுகாக்கும் திறன் கொண்ட நிலையான உணவு முறையின் முக்கிய அடித்தளமாக விளங்குகின்றன. (ரித்திமா கபூர், ப. 1)

தாழிக்கிழங்கு, நூரக்கிழங்கு, வெள்ளைக் கிழங்கு என்று வழங்கப்படுகின்ற காட்டு வள்ளிக்கிழங்கு (*Dioscorea*) வகைகளை மலைகளில் தேடிக் கண்டடைந்து சேகரிப்பது என்பது மலசர்களிடையே பண்டைய உணவு சேகரிப்பு முறையில் இருந்து இன்று வரை வழக்கத்தில் நீடித்து வருகின்றது.

கொழுங்கொடி வள்ளிக் கிழங்கு (புறநானூறு, பா. 109)
***கிழங்கு கீழ் வீழ்ந்து* (நற்றிணை, பா. 328)**

என்று குறிஞ்சி நிலத்து மக்கள் கிழங்கு சேகரிப்பதை சிறப்புறப் பதிவு செய்திருக்கும் சங்கப் பாடல்களின் செல்நெறிகள் இன்றும் மலசரிடத்தில் விஞ்சி நிற்கின்றன. கிழங்குகளைத் தோண்டி எடுக்கின்ற பொழுது பேசினால் கிழங்குகள் சுருங்குவிடும் அல்லது ஆழம் சென்றுவிடும் என்ற நம்பிக்கையை மலசர்கள் மரபாகக் கொண்டிருக்கின்றனர். சுருளி மற்றும் வெள்ளத்தொவரை மரங்களில் செய்யப்பட்ட கொட்டாப்புளியைக் கொண்டு மூங்கிலால் செய்யப்பட்ட கூர்மையான ஆப்புகளை தேன்கூடுள்ள உயரமான மரங்களில் அடித்துத் தேனெடுக்கும் முறையில் தேர்ந்தவர்கள். கோழிகமுத்தி மலசர்கள் பொதுவாகவே காலையும் மாலையுமென இருவேளை மட்டுமே உணவெடுத்துக் கொள்கின்றனர். குளிர்ச்சியான தட்ப வெப்ப சூழ்நிலையை எதிர்கொள்ள இருவேளையும் புதிதாகச் சமைத்து சூடாக உண்கின்றனர். நியாயவிலைக் கடைகளில் வழங்கப்படுகின்ற அரிசி மற்றும் பிற பொருட்களோடு சுருளிக்கீரை, முருங்கை, மணத்தக்காளி, கண்ணன் சரட்டை, பொகிக்கீரை, முள்ளுக்கீரை, குப்பைக்கீரை, பாசாட்டிக்கீரை, வெள்ளை மற்றும் சிவப்புப் பண்ணைக்கீரை, வல்லாரை போன்ற கீரை வகைகளில் ஏதேனும் ஒன்றைச் சேர்த்துச் சமைக்கின்றனர்;.

பெரும்பாலான வீடுகளில் முருங்கை மரம் உள்ளது. சிலர் கத்திரி, தக்காளி போன்ற செடிகளை வீட்டருகே வளர்த்து வருகின்றனர். பப்பாளிக் காய் மற்றும் மூங்கில் குருத்துக்களை வேகவைத்து உண்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். ஈஞ்சி மரத்தின் (*Cycas circinalis*) காய்களைத் தோல் நீக்கி அரைத்து நஞ்சு நீங்க ஓடை நீரின் ஓட்டத்தில் வைத்தெடுத்த பின் நுரை அடங்கும் வரை நன்கு வேகவைத்துக் கிளறி கலி உணவாக்கி உண்பது மலசர்களின் பாரம்பரிய உணவுகளில் ஒன்றாக இருந்துள்ளது. நண்டு மற்றும் மீன் (அவரி, கல்ஜிலேபி,

காகமீன், கொம்பி, ஆறாமீன், கெண்டை, பாட்டி, வெலாங்கு, புளியங்கொட்டைமீன் போன்ற மீன் வகைகள்) வகைகளைப் பிடித்து வந்து அன்றாடம் உட்கொள்கின்றனர்.

காட்டோடையில் துணிகளைத் துவைக்கச் செல்லும் பொழுது நீளமான துணிகளை மீன் பிடி வலை போல பயன்படுத்தி மீன்களைப் பிடிக்கின்றனர். மேலும் கூட்டாகச் சென்று மீன் பிடி வலைகளைக் கொண்டும் போதுமான அளவு மீன்களைப் பிடித்து வருகின்றனர். மீன் பிடி வலைகளின் வருகைக்கு முன்பு மிளகு சப்பல் இலை அல்லது ஆனைநார் இலை அல்லது நாவல் பட்டையை மணலுடனோ அல்லது தனியாகவோ இடித்தும் கசக்கியும் நீரில் தூவுகையில் காரத்தன்மை காரணமாக மயங்கி மேலே மிதந்து வரும் மீன்களை அரித்துச் சேகரிக்கும் முறையைப் பாரம்பரியமாகப் பின்பற்றியுள்ளனர்.

> **மலசர் பழங்குடிகள் முன்னோர்களையும் இயற்கையையும் முன்னிறுத்தி வழிபட்டு வரும் மரபினர்கள்; மலசர்கள், திருமணம் உள்ளிட்ட ஒவ்வொரு முக்கிய நிகழ்ச்சியின் போதும் முன்பும் ஏழு இலைகளில் சோறு படைத்து மூதாதையர்களுக்கு வழிபாடு நடத்துகிறார்கள். (தமிழகப் பழங்குடிகள், ப. 81)**

ஈஞ்சி மரத்தின் ஓலைகளால் அழகுற வேயப்பட்ட சதுரக் கூரையின் கீழ் காட்சி தருகின்ற ஆத்தஞ்சேரியம்மனுக்கு கோடை மழை தொடங்குவதற்கு முன்பு கோழிகமுத்தி வாழ் பழங்குடிகள் ஒருங்கிணைந்து விழா எடுக்கின்றனர். குண்டத்தில் இறங்குபவர்கள் காப்புக் கட்டி பதினெட்டு நாட்களுக்கு முன்பிருந்து விரதம் கடைபிடிக்கின்றனர். 61 அடி அளவு கொண்ட மூங்கிலைக் கொடிமரமாக அமைப்பது வழக்காக உள்ளது. விழா நாளில் முந்தைய நாள் எடுத்து வந்த தீர்த்தங்களைக் கொண்டு அம்மனுக்கு வழிபாடு நிகழ்த்தி 65 அடிக்கு குண்டம் வளர்த்து இறங்கி வணங்குகின்றனர்.

கோழிகமுத்தியின் நுழைவில் காட்டோடையை ஒட்டி அமைந்துள்ள பச்சைக்கரை அம்மனுக்கு பூவோடு எடுத்து வழிபடுகின்றனர். தடுப்பணையை ஒட்டி அமைந்துள்ள கோழிகமுத்தி அம்மன், ஆத்தஞ்சேரி அம்மனுக்கு அருகில் கோவில் கொண்டுள்ள தேவனூர் அம்மன் மற்றும் டாப்சிலிப் மலைகளின் ஆரம்ப நுழைவில் சோதனைச் சாவடியை அடுத்து அமைந்துள்ள மணக்கடவு அம்மன் (மணக்கடவாத்தா) போன்ற தெய்வங்களுக்குச் சிறப்பு வழிபாடு செய்விக்கின்றனர். மலசர்கள் குழந்தை பிறந்தால் விரும்பிய தெய்வத்திற்கு வேண்டுதல் வைத்து ஆறு மாதத்திலிருந்து மூன்று வயதுக்கு மேலும் கூட வசதி வாய்க்கிகின்ற பொழுது குழந்தைக்கு மொட்டை அடித்து வழிபடுகின்றனர். அம்மனுக்குப் பொங்கல் வைப்பது, மொட்டையடித்து நீராட்டி குழந்தையை தாய்மாமன் மடியில் அமரச்செய்து காது குத்துவது என்று அவரவர் வசதிக்கு ஏற்றாற்போல் வேண்டுதல் நிறைவேற்றுகின்றனர்.

பருவமடைந்த பெண்களை, வீட்டின் வாயிலில் முட்டுச்சாலை என்று வழங்கப்படுகின்ற முக்கோண வடிவக் கூரையை அமைத்து ஏழு நாட்களுக்கு அதில் தங்க வைப்பது பாரம்பரிய நம்பிக்கையாக இருந்து வருகின்றது. பிரசவித்த தாய்மார்களுக்கு வேம்பின் பட்டைகளை நன்கு வேகவைத்து அந்நீரினை அருந்தக் கொடுக்கின்றனர். பிரசவித்த தாய்மார்களின் வயிற்றுப் புண்கள் ஆறுவதற்கு முடக்கத்தான் கீரையை *(Cardiospermum halicacabum)* சமைத்துக் கொடுக்கின்றனர்.

மலசர்களின் பாரம்பரிய மூலிகை மருத்துவம் சிறப்பு மிக்கதாகத் திகழ்கின்றது. **“மலசர்களுக்கு நோய்கள் வருவதற்கான அறிகுறிகள் தென்படுமானால், காடுகளில் கிடைக்கக் கூடிய இயற்கை மூலிகைப் பொருட்களாலேயே அதனைக் குணப்படுத்திக்கொள்கின்றனர்.” (மலசர் பழங்குடிகள், ப. 152)** உடலில் வலியால் உண்டாகும் வீக்கம் மற்றும் விசக்கடியால் உண்டாகும் வீக்கம் ஆகியவற்றிற்கு குன்றிச்செடியின் (குன்றிமணி) *(Abrusprecat orius)* இலைச்சாறை வெளிப்புறமாக வீக்கத்தின் மீது பயன்படுத்துகின்றனர். நாயுருவியின் *(Achyranthes aspera)* வேரை இடித்துத் தேனுடன் கலந்து இருமலுக்கு மருந்தாகப்

பயன்படுத்துகின்றனர். தோல் ஒவ்வாமைகளுக்கு மலை வல்லாரை *(Centella asiatica)* இலைகளை அரைத்துப் பயன்படுத்துகின்றனர். மூர்க்கந்தலை *(Chromolaena odorata)* இலைகளை சுண்ணாம்பு சேர்த்து அரைத்து உடற் காயங்களுக்கு மருந்தாகப் பயன்படுத்துகின்றனர். விசப் பூச்சிகளால் உண்டாகும் தோல் அரிப்பை சரி செய்ய விடத்தலை *(Dichrostachys cinerea)* இலைகளை அரைத்துப் பூசிக் குளிக்கின்றனர். பாத வெடிப்புக்கு லண்டன் செடி இலையுடன் *(Lantana camara)* வெங்காயம் சேர்த்தரைத்து வெளிப்புறமாக வெடிப்புகளின் மீது பூசிப் பயன்படுத்துகின்றனர்.

மலசர்களின் திருமணமுறை என்பது சங்க இலக்கியம் காட்டுகின்ற மணமுறையை ஒத்திருக்கின்றது.

யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல் நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே. (குறுந்தொகை, பா. 40)

என்ற செய்யுளில் இடம்பெற்றுள்ள சங்க கால மக்களின் இயற்கை மணமுறையை ஒத்த காதல் மணத்தையே மலசர்கள் பெரும்பாலும் மேற்கொண்டு வருகின்றனர். கோழிகமுத்தியில் மலசர் குடும்பம் எது? புலையர் குடும்பம் வது? காடர் குடும்பம் எது? என்று கண்டறிய முடியாதபடி காதல் திருமணங்கள் பழங்குடி இனங்களைப் பிணைத்து வருகின்றன. மலசர்களின் திருமணத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் கே.ஏ. குணசேகரன், **“உடன் போக்குத் திருமணங்கள் அதிகம் நடைபெறுவது இயல்பாக உள்ளது. பின்னர் ஊரார் கூடி அத்திருமணத்தை அங்கீகரிக்கின்றனர்” (தமிழக மலையின மக்கள், ப. 107)** என்று பதிவு செய்துள்ளார்.

முந்தைய காலங்களில் காதல் வயப்பட்டவர்கள் தங்கள் காதலை வெளிப்படுத்தி நிற்கின்ற பொழுதும் அல்லது வெளிப்படுகின்ற பெழுதும் சுற்றத்துப் பெரியவர்கள் முன்னிலையில் காதலர்கள் இருவருக்கும் அன்றைய தினம் செய்த உணவை ஒரே தட்டில் இட்டுக் கொடுப்பர்; இருவரும் உணவைப் பகிர்ந்து உண்ட பின் இருவரையும் இல்வாழ்க்கை மேற்கொள்ள அனுமதித்துள்ளனர். மலசர்கள் இறந்தவர்களைப் புதைக்கின்ற மரபுடையவர்கள். பதினாறாம் நாள் இறந்தவர்களுக்கு ஏழு எருக்கன் *(Calotropis)* இலைகளில் உணவு படைத்து வழிபடுகின்றனர். இறந்தவரைத் தெய்வமாகக் கருதி குடும்பத்தாரைப் பேணிக்காக்குமாறு வணங்குகின்றனர். இச்சடங்கை அடப்பாடுதல் என்று வழங்குகின்றனர். அரிசியை வறுத்துப் பொடி செய்து அப்பொடியைக் கொண்டு வட்டம் வரைந்து அவ்வட்டத்திற்குள் எறும்பை விட்டு, குடும்பத்தினர் வட்டத்தைச் சுற்றி, அணிந்துள்ள ஆடையை விரித்தோ அல்லது சிறு துணியை விரித்தோ அமர்ந்து கொள்கின்றனர்; அரிசியை எடுக்கும் எறும்பு யாருடைய துணியில் முதலில் ஏறுகின்றதோ அவரின் மீது இறந்தவர் மிகுந்த அன்புடன் இருக்கிறார்/இருந்துள்ளார் என்று நம்புகின்றனர்.

மலசர்களின் வாழ்வியலின் ஒவ்வொறு முக்கிய நிகழ்வுகளிலும் இசைப்பாடல்கள் இடம்பெறுகின்றன. இருமுக முழவுக்கருவியான திமிலையும் (தோற்கருவி) ஊதுகுழலும் (துளைக்கருவி) மலசர்களின் பாடலுக்கு இசை சேர்க்கின்றன. இறந்தவர் சடலத்தின் முன்பு பாடும் பாட்டை இழவுப்பாட்டு என்று வழங்குகின்றனர். மலசர் பழங்குடிகளின் மொழியை மலச மொழி என்று வழங்குகின்றனர். திராவிட மொழிகளின் வேர்ச்சொற்கள் நிறைந்த மலச மொழி வரிவடிவமின்றி வழக்கொழிந்து வருகின்றது. பண்பாட்டுக் கருவூலமாகத் திகழும் மலச மொழி அழிந்தால் மலசர் பழங்குடிகளின் தனித்துவமான வாழ்வியலுக்கும் இடமில்லாமல் போகும்.

தாவர வளமையையும் அவற்றின் மலர்களின் வண்ணச் செழுமையையும் விலங்கினங்களின் வகைமையையும் மட்டும் கொண்டவையல்ல காடுகளும் மலைகளும்; அங்கு பன்னெடுங்காலமாகப் பல்லுயிர் பெருக்கச் சூழலோடு இயைந்து வாழ்ந்துவரும்

பழங்குடிகளின் வாழ்வியலையும் உள்ளடக்கியதுதான் காடுகளும் மலைகளும்; உலகில் எஞ்சியிருக்கும் பல்லுயிர் பெருக்கத்தைப் பேணி வரும் பழங்குடிகளாலேயே காடுகள் இன்னும் காடுகளாகவே எஞ்சியிருக்கின்றன. கோழிகமுத்தி மலைகிராமத்தில் வாழ்ந்து வரும் மலசர் பழங்குடிகளின் அடிப்படை வசதிகளும் உரிமைகளும் முழுமையாகப் பூர்த்தியடையாத நிலையில் உள்ளன. பழங்குடிகள் மேம்பாட்டுக்கென ஒதுக்கப்படும் நிதியையும் திட்டத் தொகுப்புகளையும் பழங்குடிகளைச் சென்றடைவதில் நிலவுகின்ற இடைவெளிகளை அரசு ஆராய்ந்து சரி செய்து பழங்குடிகளின் சமூக மேம்பாட்டை உறுதிசெய்ய வேண்டும். கோழிகமுத்தி மலசர் பழங்குடிகளின் பண்பாடு அங்குள்ள பல்லுயிர்ச் சூழலைத் தொந்தரவு செய்யாத உயரிய பண்பாடகத் திகழ்கின்றது. கோழிகமுத்தியின் உயர்ந்த மலைகளுக்கிடையில் உயரிய பொதுமைப் பண்பாட்டை பறைசாற்றும் வாழ்க்கை முறையைத் தலைமுறைகள் கடந்தும் கடைபிடித்து வருகின்றனர். பண்பாட்டிலிருந்துதான் தொழில் முறைகளையும் வகுத்துள்ளனர். மலசர் பழங்குடிகளின் மூதாதையர்கள் காடுகளின் மீதும் கானுயிர்கள் மீதும் கொண்டிருந்த அன்பையும் பிணைப்பையும் நிலைநாட்டும் நெறியில் யானைக்காரர்களாகப் பணியாற்றும் மலசர்கள் யானைகளின் பாகனாக மட்டும் இல்லாமல் யானைகளின் ஒரு பாகமாகவே ஒன்றியுள்ளனர். மலசர்களின் பண்பாடு பிடிபட்ட காட்டு யானைகளையும் பண்படுத்தியுள்ளது. மலசர் பழங்குடிகளின் தனித்த பண்பாடும் பண்பாட்டின் செறிவு முழுமையையும் உள்ளடக்கிய மலச மொழியும் குன்றாமல் நிலைக்க வேண்டுமெனில் மலசர்களின் சமூக மேம்பாடு உறுதிபெற வேண்டும்.

தொகுப்புரை

கோழிகமுத்தி மலசர் பழங்குடிகளின் சமூகப் பண்பாட்டு இயங்கியலை ஆய்வு செய்த இக்கட்டுரை பின்வரும் முடிவுகளை முன்வைக்கின்றது. முதலாவதாக, மலசர்களின் பொருளாதாரம் வனத்துறையை மையமாகக் கொண்டுள்ளது. வேட்டைத் தடுப்புக் காவலர், சுற்றுச்சூழல் அங்காடி, உணவகம், விடுதி பராமரிப்பாளர், மூலிகை வனப் பணியாளர் எனப் பல பணிகளில் ஈடுபட்டுள்ளனர். கும்கி யானைகள் முகாமில் 25 மலசர்கள் மாவூத்துகளாகவும் கவாடிகளாகவும் பணியாற்றி, யானைகளைத் தங்கள் குடும்ப உறுப்பினராகக் கருதிப் பாதுகாக்கின்றனர். இணைப்புச் சாலை வசதியால் சுகாதாரக் கட்டமைப்பு மேம்பட்டுள்ளது. டாப்சிலிப் ஆரம்ப சுகாதார மையம், 24×7 அவசர ஊர்தி, கர்ப்பிணிப் பராமரிப்பு, குழந்தைத் தடுப்பூசிகள் என நலவாழ்வு வழிகள் முறையாகக் கடைப்பிடிக்கப்படுகின்றன. எனினும், நிரந்தர மின்சாரம், முறையான கழிப்பறை வசதிகள், வீட்டுப் பட்டா, குடும்ப அட்டை போன்றவற்றில் இன்னும் சவால்கள் உள்ளன. கல்வியில் வனத்துறை உதவி இருந்தாலும், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் படிப்பைத் தொடர்வதில் பாகுபாடு உணர்வும் தாழ்வு மனப்பான்மையும் தடையாக உள்ளன. பட்டப்படிப்பு கனவுகள் இருந்தும் பலரால் தொடர முடியாத நிலை நிலவுகிறது. மலசர்களின் பண்பாடு இயற்கையோடு பின்னிப்பிணைந்துள்ளது. மூங்கில் சார்ந்த புழங்குபொருட்கள், காட்டுக் கீரைகள், கிழங்குகள் சேகரிப்பு, பாரம்பரிய மீன்பிடி முறை, தேன் எடுத்தல் போன்றவை இன்றும் நீடித்துள்ளன. மூதாதையர் வழிபாடு, ஆத்தஞ்சேரியம்மன், பச்சைக்கரை அம்மன் போன்ற குலதெய்வ வழிபாடுகள், உடன்போக்குத் திருமண முறை, புதைப்புச் சடங்குகள், இழவுப்பாட்டு எனப் பல சடங்கு முறைகளைப் பின்பற்றுகின்றனர். மலச மொழி வரிவடிவமின்றி வழக்கொழிந்து வருகிறது; இது அவர்களின் பண்பாட்டுக் கருவூலத்திற்குப் பெரும் இழப்பாகும். இறுதியாக, மலசர்களின் வாழ்வியலைப் பாதுகாக்க மலச மொழியை ஆவணப்படுத்துதல், நிரந்தர மின்சாரம், குடியிருப்பு உரிமைகளை வழங்குதல், கல்வியில் சமத்துவமான வாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியவை அவசியமாகும்.

குறிப்புகள்

[1] இரத்தினம்,க. தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் - தொகுதி:4 (தமிழ் மொழிபெயர்ப்பு). தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், தமிழ்நாடு, இந்தியா, 1993.

[2] கவிதா.த. மலசர் பழங்குடிகள். அருள் பதிப்பகம், சென்னை, 2011.

[3] குணசேகரன்.கே.ஏ. தமிழக மலையின மக்கள். சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், 1994.

[4] சோமசுந்தரனார்.போ.வே. (உ.ஆ.), குறுந்தொகை (மூலமும் உரையும்). கழக வெளியீடு, சென்னை, 1961.

[5] சோமசுந்தரனார்.போ.வே. (உ.ஆ.), நற்றிணை (மூலமும் உரையும்). கழக வெளியீடு, சென்னை, 1967.

[6] துரைசாமிப்பிள்ளை, ஔவை.சு. (உ.ஆ). புறநானூறு (மூலமும் உரையும்). சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட், திருநெல்வேலி, 1960.

[7] பக்தவத்சல பாரதி, தமிழகப் பழங்குடிகள். திருச்சி: அடையாளம் பதிப்பகம், 2007.

[8] வேங்கடராமன்.எஸ்.ஆர்., பாரதப் பழங்குடிகள். தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம், சென்னை, 1983.

[9] தகவலாளர் விபரம்: திருமிகு.மணி, கோழிகமுத்தி மலசர் பழங்குடி இனத்தைச் சேர்ந்த இவர் கலீம் யானையின் மாவூத்தாகப் பணிபுரிந்து வருகிறார். மேற்குறிப்பிட்ட தகவலானது 10.05.2023 அன்று நிகழ்த்தப்பட்ட நேர்காணலில் பெறப்பட்டது.

[10] சார்லஸ் லியோ பிரபு, ஜெ., சரவணன், எஸ்., மகன குமார், எச். "மேனேஜ்மெண்ட் ஆஃப் கேப்டிவ் ஏசியன் எலிபென்ட்ஸ் இன் கொழிகாமுத்தி எலிபென்ட் கேம்ப், டாப்ஸ்லிப், அனமலை டைகர் ரிசர்வ், சதர்ன் இந்தியா." கஜா, தொகுதி. 40, 2014, பக். 31–34.

[11] சேதன் குமார் சி. "எஜுகேஷனல் எக்ஸ்க்ளூஷன் ஆஃப் டிரைபல் கம்யூனிடிஸ் இன் இந்தியா." இன்டர்நேஷனல் ஜர்னல் ஆஃப் ஹ்யூமனிட்டிஸ் சோஷல் சயின்ஸ் மேனேஜ்மெண்ட் (IJHSSM), தொகுதி. 4, எண். 4, ஜூலை–ஆகஸ்ட் 2024, பக். 880–882.

[12] எட்கர் தர்ஸ்டன். காஸ்ட்ஸ் அண்ட் ட்ரைப்ஸ் ஆஃப் சதர்ன் இந்தியா. ஏசியன் எஜுகேஷனல் சர்வீசஸ், நியூ டெல்லி - 110 016, இந்தியா, 1909.

[13] நேஷனல் டைகர் கன்சர்வேஷன் அத்தாரிட்டி/புராஜெக்ட் டைகர். அனமலை டைகர் ரிசர்வ், ஸ்டேச்சுவரி பாடி அண்டர் தி மினிஸ்ட்ரி ஆஃப் என்விரான்மெண்ட், ஃபாரஸ்ட் அண்ட் க்ளைமேட் சேஞ்ச் (கவர்ன்மென்ட் ஆஃப் இந்தியா).

[14] பி. வசுகி, சி. கண்ணன். "ரிலிஜியஸ் கஸ்டம்ஸ் ஆஃப் தி காடர் ட்ரைப்ஸ் இன் அனைமலை ரீஜியன்." லைப்ரரி புரோகிரஸ் இன்டர்நேஷனல், தொகுதி. 44, எண். 3, 2024, பக். 9005–9010.

[15] பாபுலேஷன் சென்சஸ் 2011, டேபிள் ஏ-11 அப்பென்டிக்ஸ்: டிஸ்ட்ரிக்ட் வைஸ் ஷெட்யூல்ட் ட்ரைப் பாபுலேஷன், தமிழ்நாடு - 2011, ORGI (ஆபிஸ் ஆஃப் தி ரிஜிஸ்ட்ரார் ஜெனரல் & சென்சஸ் கமிஷனர், இந்தியா), மினிஸ்ட்ரி ஆஃப் ஹோம் அஃபைர்ஸ், கவர்ன்மென்ட் ஆஃப் இந்தியா.

[16] ரிதிமா கபூர், சபர்வால், எம்., & கோஷ்-ஜெரத், எஸ். "கோ-எக்சிஸ்டன்ஸ் ஆஃப் பொட்டென்ஷியல்லி சஸ்டைனபிள் இன்டிஜினஸ் ஃபுட் சிஸ்டம்ஸ் அண்ட் பூர் நியூட்ரிஷனல் ஸ்டேட்டஸ் இன் ஹோ இன்டிஜினஸ் கம்யூனிட்டி, இந்தியா: ஆன் எக்ஸ்ப்ளோரேட்டரி ஸ்டடி." என்விரான்மென்டல் ரிசர்ச் லெட்டர்ஸ், தொகுதி. 19, எண். 6, 2024, ஆர்ட்டிக்கிள் 064033. doi:10.1088/1748-9326/ad4b44.

[17] சதீஷ் குமார், ஏ., சங்கரநாராயணன், எஸ்., பாமா, பி., பாஸ்கர், ஆர்., & கனகவல்லி, கே. "ஆன் எத்னோபோட்டானிக்கல் ஸ்டடி ஆஃப் மெடிசினல் பிளான்ட்ஸ் யூஸ்டு பை

லோக்கல் பீபிள் அண்ட் ட்ரைபல்ஸ் இன் டாப்ஸ்லிப் (அன்னமலை ஹில்ஸ்) அண்ட் ஊட்டி (சிஞ்சோனா வில்லேஜ்) ஆஃப் கோயம்புத்தூர் அண்ட் ஊட்டி டிஸ்ட்ரிக்ட்." இன்டர்நேஷனல் ஜர்னல் ஆஃப் கரண்ட் ரிசர்ச், தொகுதி. 10, எண். 05, 2018, பக். 69328–69340.

[18] யோகிதா சர்மா, மனோரஞ்சன் ரஞ்சித், பரிகிபண்ட்லா ஸ்ரீதேவி, போந்தா வி. பாபு. "ஆக்செஸ் டு ஹெல்த்கேர் அமாங் ட்ரைபல் பாபுலேஷன் இன் இந்தியா: எ கிராஸ்-செக்ஷனல் ஹவுஸ்ஹோல்ட் சர்வே." தி இன்டர்நேஷனல் ஜர்னல் ஆஃப் ஹெல்த் பிளானிங் அண்ட் மேனேஜ்மெண்ட், தொகுதி. 40, 2025, பக். 1–8. https://doi.org/10.1002/hpm.392

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை.
கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை.
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 5, Issue - 2, May 2026 E-ISSN: 2583-0481
MLA, DOAJ Indexed

Customs and culture of Kongu Vellar

D. Divya, Research Scholar of Tamil, Reg.No: 20PHTMP002, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-2648-6710
Dr. T. Nagammal, Assistant Professor of Tamil, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0001-5677-2267
DOI: 10.5281/zenodo.20473739
Received: 18 December 2025; **Revised:** 28 February 2026; **Accepted:** 17 March 2026; **Available Online:** 31 May 2026

Abstract

Ancient Tamil literature dating back over 2,000 years praises the Kongu Vellalars, referring to them as "Vel" and "Velir." The Kongu Vellalars take pride in associating themselves with the term "Velanmai," which denotes benevolence and service to others, and in naming their region "Kongu Nadu" by combining this concept with the name of their land. Traditionally, the Vellalars possessed the right to crown kings and to grant endowments or gifts. They were known for their protective nature, safeguarding people, land, and cattle. Because of this quality, they were referred to as "Kamiṇḍar" by other communities. Over time, this term evolved into "Gounder," a title that continues to be in use today. Compared to other communities, the Kongu Vellalars maintain distinct customs, rituals, and social practices, many of which are still followed today, as evidenced by field studies. They are known for their strong sense of kinship and for leading lives rooted in love and virtue. They preserve and honor their lineage and clan deities, passing these traditions on to the younger generation. Despite significant advancements in medicine, science, and technology, field research indicates that a primary focus of the Kongu Vellalars remains the preservation and transmission of their ancestral customs, culture, and beliefs to future generations.

Keywords: Kongu Vellalar, Lifestyle, Customs, Beliefs.

References

[1] Arumbu, Ma. "Pachchai Malai Malayaali Makkalil Vaazhviyal Sadangugal." *Puthiya Avaiyam*, Thoguthi 07, Jeen 2023, pa. 1043.
[2] Rajeshwari, K.P. "Tholkappiyam Koorum Thozhilgal." *Annaattu Aayvkku Karutharangam*, Thoguthi 1, 2019, pa. 560.
[3] Rajeshwari, Se. "Nattuppura Oppaari Paadalkal Kaattum Penngalin Avala Nilai." *Puthiya Avaiyam*, Thoguthi 07, Jeen 2023, pa. 1001.
[4] Thuraisamippillai, Oavai Su. Purananooru - Paguthi 1. Saiva Siddhantha Noorpathippu Kazhagam, 1947.
[5] Shanmugasundaranar, Su. *Nattuppura Iyal*. Kavya Pathippagam, 1975.
[6] Chinnasami Kaundar, Kaviaruvi, The.Pa *Kongu Velala Kaundargalin Varalrum Panpaadum*. Sree Saraswathi Devi Pathippagam, 2000.
[7] Subramanian, Sa.Ve. *Tholkappiyam Muzhudhum*. Meyyappan Pathippagam, 2008.
[8] Thevaneyap Paavanar, Gna. *Thirukkural Muzhudhum*. Sree Hindu Publications, 2000.
[9] Nallathanar. *Thrigadum*. Suraatha Pathippagam, 2005.
[10] Pavithra, Si. "Sool Pudhitham Eduthiyambum Nattaar Nambikkaigal." *Desiya Karutharangam Aayvkkovai*, Thoguthi 4, April 2023, p. 189.

[11] Vengadasamy, Mayilai Seeni. *Konga Nattu Varalaru*. New Century Book House, 2014.
[12] Yasotha, Se. "Kongu Velala Pannaikula Makkalin Nambikkaigal." *Navina Thamizhaayvu*, Paguthi-4, March 2021, pa. 1095.
[13] Velusamy, Su. Nerkanal. 20 March 2025.

Author Contribution Statement: NIL.
Author Acknowledgement: Nil
Author Declaration: Nil

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்

மலர் - 5, இதழ் - 2, வைகாசி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ, டி.ஓ.ஏ.ஜே குறியிடப்பட்டது

கொங்கு வேளாளரின் பழக்கவழக்கங்களும் பண்பாடும்

த. திவ்யா, தமிழ் முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண்: 20PHTMP002, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-2648-6710
முனைவர் த. நாகம்மாள், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்,தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0001-5677-2267

ஆய்வு சுருக்கம்

வேள் என்றும் வேளீர் என்றும் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட இலக்கியங்கள் கொங்கு வேளாளர்களை சிறப்பித்துப் பாடுகிறது. கொங்கு வேளாளர்கள் உபகாரம் மற்றும் பிறருக்கு உதவுதல் என்று பொருள்படும் வேளாண்மை என்னும் சொல்லினை தங்களது நாட்டின் ஒரு பகுதியான கொங்கு என்னும் பெயருக்கு பின் வேளாளர் என்னும் பெயரை இணைத்துக் கொண்டு கொங்கு வேளாளர் என அழைக்கப்படுவதில் இன்றுவரை பெருமிதம் கொள்கின்றனர். அரசர்களுக்கு முடிசூட்டுவதற்கும் மற்றும் மகற்க்கொடை அளிப்பதற்கும் உரிமை படைத்தவர்கள் வேளாண்மை ஆவர். இவ்வினத்தார் மக்கள், நாடு, கால்நடை என அனைத்தையும் பாதுகாக்கும் தன்மை உடையவராய் விளங்குவதால் இவர்களை காமிண்டார் என்று பிற இனத்தவர்கள் அழைத்தனர். நாளடைவில் காமிண்டர் என்ற பெயர் மருவி கவுண்டர் என்றானது இப்பெயர் இன்றுவரை வழக்கத்தில் இருந்து வருகிறது. கொங்கு வேளாளர் பிற இனத்தாவர்களை விட சற்று வேறுபட்டு பழக்கவழக்கங்கள் சடங்குமுறைகள் வாழ்வில் நடைமுறைகளை இன்று வரை கடைபிடித்து வருகின்றனர் என்று கள ஆய்வின் மூலம் அறிய முடிகிறது. சுற்றம் தழுவியவர்கள். அன்பையும் அரணையும் வாழ்வாக கொண்டு வாழ்பவர்கள் குலத்தையும் குலதெய்வத்தையும் பேணி காத்து அடுத்து வரும் இளைய தலைமுறை தங்களது மரபு கொண்டு செல்கின்றனர். இன்றளவில் மருத்துவம், அறிவியல், தொழில் நுட்பங்கள் ஆகிய முன்னேற்றங்கள் வளர்ந்திருப்பினும் தம் முன்னோர்கள் வகுத்தளித்த பழக்கவழக்கங்கள், பண்பாடு, நம்பிக்கை ஆகியவற்றை இன்றைய இளைய தலைமுறையிருக்கு கொண்டு செல்வதே முதன்மை காரணமாகும் என்பதை களஆய்வின் மூலம் அறிய முடிகிறது.

குறிப்புச்சொற்கள்:கொங்குவேளாளர் வாழ்வியல், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள்.

முன்னுரை

பிறப்பு முதல் இறப்பு வரை ஒரு மனிதன் தன்னுடைய வாழ்நாளில் கொண்ட அனுபவத்திற்கும் மற்றும் அறிவிற்கும் ஒரு உதாரணமாக இவ்வினத்தார் திகழ்கின்றனர் எனலாம் பெரும்பான்மையான சடங்கு முறைகளை அறிமுகப்படுத்தியவர்கள் இவ்வினத்தார் ஆவர். சடங்கு முறைகள் மனிதனின் வாழ்வினை ஒழுங்குப்படுத்தி பாதுகாத்து வாழ்வை செம்மைப்படுத்துவதாக இவ்வினத்தார் இன்று வரை நம்பிக்கை கொண்டிருக்கின்றனர். நல்லநாள் பார்த்தல், குறி கேட்டல், தீய சகுனத்திற்கும், இறப்பு

மலர் - 5, இதழ் - 2, வைகாசி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ, டி.ஓ.ஏ.ஜே குறியிடப்பட்டது

நிகழ்விற்கும் பரிகாரங்கள் செய்தல் உறவினர்களிடம் உரிமை மற்றும் மரியாதையை பேணிக்காத்தல் போன்ற பண்புகளை முதன்மை பண்பாக கொண்டுள்ளனர். அந்தணர் அல்லாத சடங்கு முறைகளையே கொங்கு வேளாளர்கள் ஏற்றனர். கொங்கு வேளாளர் தங்கள் இனத்திற்குள் பண்டமாற்று முறையில் பொருளீட்டி உதவி செய்து கொள்வதோடு ஏழை எளிய மக்களுக்கும், நாடி வந்தவர்களுக்கும் இல்லை என்று கூறாமல் உதவும் மனப்பாங்கு உடையவர்கள் ஆவர். கொங்கு வேளாளர்கள் பிறப்பு தொடங்கி இறப்பு வரை தங்களது ஒழுக்க பண்பாட்டில் சிறந்து விளங்கி இருந்தனர் என்பதை கள ஆய்வு மற்றும் சில நாட்டுப்புறவியல் அறிஞர்கள் மற்றும் கள ஆய்வு அறிஞர்களாலும் அறிய முடிகிறது.

கொங்கு வேளாளர் வரலாறு

கொங்கு வேளாளர் கவுண்டர் இன மக்களை பற்றி பலரும் கட்டுக்கதைகளையும் கதாபாத்திரங்களையும் உருவாக்கி இவர்கள்தான் கொங்கு வேளாளர்கள் என உருவாக்கி விட்டனர். சிலரது நேர்காணல் மற்றும் கள ஆய்வுகளாலும், வரலாற்று செய்திகளாலும் உண்மையான வரலாற்றினை இன்றைய காலகட்டத்தை சேர்ந்த கொங்கு வேளாளர்கள் அறிந்து வைத்துள்ளனர். தேவர் உலகத்தில் இருந்து கங்கையில் மைந்தனாகப் பிறந்து காஞ்சிபுரத்தில் குடியேறி தஞ்சாவூர் சென்று பூந்துறை நாட்டில் புகுந்தவர்கள் கொங்கு வேளாளர்கள் என வரலாறு கூறுகிறது. கொங்கு நாட்டின் முதல் குடிமக்களாக பிறந்தவர்கள் கொங்கு வேளாளர்கள் தாம். கொங்கு வேளாளர்களின் குடிஇயல், வாழ்வியல், வரலாற்று உண்மைகள், உழைப்பு, அறிவியல், பண்பாடு மருத்துவம் போன்ற அனைத்திலும் இவ்வின மக்கள் சிறந்து விளங்குகின்றனர். இலக்கணம் மற்றும் இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு ஆய்வுகள் மேற்கொண்டு இவ்வினத்தார் தங்களது வரலாற்றினை பதிவு செய்து வைத்துள்ளனர். வட ஆற்காட்டில் தோன்றி தஞ்சாவூரில் வாழ்ந்த கொங்கு வேளாளர்கள் சோழன் சேரனுக்குப் பெண் கொடுத்தன். அந்தப் பெண்ணிற்கு சீதனமாக நாற்பதாயிரம் வேளாளர்களை கொங்கு நாட்டில் குடியேற்றினான். சீதனமாக வந்து குடியேறிய மக்களே கொங்கு வேளாளர் கவுண்டர்கள் என்று எழுதியுள்ளனர் செய்தியானது செவிவழி செய்தியாகவே காணப்படுகிறது.

கொங்கு வேளாளக் கவுண்டர்களின் சிறப்புகள்

தொல்காப்பிய முதல் வேளாளர் புராணம் வரை கொங்கு வேளாளர் சிறப்புகள் கூறப்பட்டுள்ளன.

பெருமைக்கும் ஏனை சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல் (குறள் - 505)

என்ற வள்ளுவரின் வாக்கிற்கு ஏற்ப கொங்கு வேளாளர்களின் செயல்கள், சடங்குகள், வழிபாடுகள், பழக்கவழக்கங்கள், பண்பாடுகள், உணவு, உடை, இருப்பிடம், திருமணம், இறப்பு என்று பலதரப்பட்ட பெருமைகளை எடுத்து கூறும் அளவிற்கு சிறந்த பண்புகளை கொண்டவர்களாக விளங்குகின்றனர். **"வேளாண் என்பான் விருந்திருக்க உண்ணாதான் என" (திரிகடுகம், ப. 12)** கூறுகிறது. **"உழுவார் உலகத்தார்க்கு ஆணி என்றார் வள்ளுவர்" (குறள் - 1032)** இதுபோன்றே சங்க நூல்கள் மட்டுமின்றி திருக்கோவலூர் கல்வெட்டும் வேளாளர் சிறப்பினை கூறுகிறது.

> **உழவுத் தொழில் உயிர் காக்கும் தொழிலாக போற்றப்பட்டது. அத்தொழிலுக்கு அடித்தளமாய் விளங்குவது நிலமும் நீரும். இவற்றின் இயைபே உணவுப் பொருட்களின் ஆக்கமாகும். (கை. ப. இராஜேஸ்வரி, ப. 560)**

கொங்கு வேளாளர் கவுண்டர்களின் மக்கள் தொகை திருப்பூர் மாவட்டத்தில் மட்டுமே பல்லடம், தாராபுரம், அவிநாசி, பழங்கரை, 15 வேலம்பாளையம், அங்கேரிபாளையம் போன்ற பகுதிகளில் கொங்கு வேளாளர்கள் வாழ்ந்து வருகின்றனர் கொங்கு வேளாளர்கள். 24 நாட்டின் கொங்கு நாட்டார் பிரிவுகளின் கீழ் காணியர்கள் உள்ளது ஒவ்வொரு காணியர்ளும் தங்களுக்குள்ளே 36 தலைவர்கள் கொண்ட குழவின் கீழ் 56 என்ற எண்ணிக்கையின் அடிப்படையில் குடும்பங்கள் வாழுகின்றன.

> **திருப்பூர் மாவட்டத்தின் ஒவ்வொரு பகுதியிலும் மூன்று சதவீத மக்கள் கொங்கு வேளாளர்கள் இனத்தைச் சார்ந்தவராகவே காணப்படுகின்றனர் திருப்பூர் மாவட்டத்தில் நெசவு மட்டும் இன்றி வேளாண்மையையும் காணப்படுவதால் கொங்கு வேளாளர்கள் அதிகப்படியாக நிலங்கள் சார்ந்த பகுதியில் வாழுகின்றனர் என மக்கள் தொகை கணக்கெடுப்பின் மூலம் அறிய முடிகிறது அரசின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மொத்தம் கொங்கு வேளாளர்கள் 3.2சதவீதம் உள்ளதாக பதிவுகள் கிடைத்துள்ளன. திருப்பூர் மாவட்டம் மட்டுமின்றி பிற மாவட்டங்களிலும் கொங்கு வேளாளர்கள் வசித்து வருகின்றனர். (கள ஆய்வு - திருப்பூர் மாநகராட்சி)**

கொங்கு வேளாளக் கவுண்டர் இன மக்களின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான பழக்கவழக்கங்கள் கள ஆய்வின் மூலம் ஆராயப்பட்டுள்ளது. பிறப்பு, பூப்பு, திருமணம், பேறு காலம், இறப்பு என பிறப்பு முதல் இறப்பு வரையிலான பழக்கவழக்கங்கள் என வாழ்வியல் சார்ந்த பழக்கவழக்கங்களையும் காணலாம்.

பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள பழக்கவழக்கங்கள்

கொங்கு வேளாளர் மக்கள் தங்கள் வாழ்நாளின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான அனைத்து பழக்க வழக்கங்களிலும் தங்களின் தனித்துவத்தினை சமுதாயத்திற்கு தெரியப்படுத்துகின்றனர்.

> **நாடு, இனம், மதம் இவைகளின் தோன்றுவதற்கு முன்னதாகவே பழக்கவழக்கங்கள் தோன்றி வளர்ச்சிக்கு பெற்றதை வாழ்ந்து வந்த மக்கள் வகைவகையாக வகுத்து வழக்கங்களும் நம்பிக்கைகளும் ஒவ்வொரு நாட்டிலும் வேரூன்றி கிடைப்பதாகும். என்று சண்முகசுந்தரத்தின் இக்கூற்றானது பழக்கவழக்கங்களின் தொன்மையின் சிறப்பை எடுத்துக் கூறுகிறது. (நாட்டுப்புறவியல், ப. 21)**

மற்ற இன மக்களை விட கொங்கு வேளாளர்களின் பழக்கவழக்கமானது சற்று வேறுபாடாகவே காணப்படுகிறது. சங்க காலம் இடைக்காலம் தற்காலம் என அனைத்து காலம் மாறுபாட்டிலும் பல்வேறு வளர்ச்சிகள் ஏற்படினும் இவ்வினத்தார் பழக்கவழக்கங்களில் எவ்வித மாறுபாடும் ஏற்படவில்லை. இவ்வினத்தார் பழக்கவழக்கங்கள் மற்ற இனத்தை விட வேறுபாடு உடையதாக இருப்பினும் மனித வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் பொதுவான முறையாகவே முன்னோர்களால் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

பழக்கவழக்கங்களின் வகைகள்

கொங்கு வேளாளர் இன மக்கள் தங்களது பழக்கவழக்கங்களுக்கு கீழ் சமூக வாழ்வினையும் தனிமனித வாழ்வினையும் செம்மையாக நடத்தி வந்தனர். பழக்கவழக்கங்களின் ஆரம்பமாக திகழ்வது பிறப்பாகும். ஒரு மனிதனின் வாழ்வில் பிறப்பும் இறப்பும் பொதுவானதாக இருப்பினும் அவன் வாழ்வதற்கும் வாழ்ந்த அடையாளங்களுக்கும் ஒரு உயர்பினை தருவது அவரவர் இனம் சார்ந்த பழக்கவழக்கங்களை ஆகும் என இவ்வினத்தார் நம்புகின்றனர்.

- **பிறப்பு சார்ந்த பழக்கவழக்கங்கள்**
- **பூப்பு சார்ந்த பழக்கவழக்கங்கள்**
- **எழுதிங்கு சீர்**
- **திருமணம் சார்ந்த பழக்கவழக்கங்கள்**
- **குழந்தை வளர்ப்பு**
- **இறப்பு சார்ந்த பழக்கவழக்கங்கள் பிறப்பு சார்ந்த பழக்கவழக்கம்**

திருப்பூர் மாவட்ட கொங்கு வேளாளர் இன மக்களின் பிறப்பு சார்ந்த சில பழக்கவழக்கங்களை பின்பற்றுவதன் மூலம் தங்களது தலைமுறையானது சிறந்த தலைமுறையாக தொடங்குகிறது என்று பழக்கவழக்கங்களின் மீது நம்பிக்கை கொண்டிருக்கின்றனர். நாகரீக வளர்ச்சியினால் சில பழக்கவழக்கங்கள் அழிந்து வந்தாலும் கூட குழந்தை பிறப்பதற்கு முன் குழந்தை பெறுவதற்கு பின் என இரு வகையாக பிரித்துள்ளனர்.

பிறப்பு

- **குழந்தை பிறப்பதற்கு முன்**
- **குழந்தை பிறப்பதற்கு பின் குழந்தை பிறப்பதற்கு முன்**

ஒரு பெண் திருமணமாகி மூன்று மாதத்திற்கு பின் ஒரு ஆண்டிற்குள் கருத்தரித்தல் வேண்டும். கருத்தரிக்காது விட்டால் தங்களது குல தெய்வத்திற்கு பரிகாரங்கள் செய்து வேண்டிக் கொள்கின்றனர்.

> **வேண்டுதல் நிறைவேறி குழந்தைப் பேறு கிடைத்தால் தொட்டில் கட்டிப் போடுவதாக வேண்டிக் கொள்கின்றனர். குழந்தை பேறு வேண்டுவோர் முதலில் கோயிலிலுள்ள மரத்தில் ஒரு சிறு வெள்ளைத் துணியில் தொட்டில் கட்டி தொங்க விடுகின்றனர். தொங்குகின்ற தொட்டிலில் ஒரு சிறு கல்லைக் குழந்தையாக எண்ணிப் போட்டு ஆட்டுகின்றனர். (செ.யசோதா, ப. 1095)**

என்ற கட்டுரை சான்றின் வழி கொங்கு வேளாளர்கள் குழந்தை பிறக்க சில நம்பிக்கைகளை பின்பற்றியுள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

வளைகாப்பு

கருவுற்ற பெண்ணை தாய் வீட்டார் மூன்று ஏழு ஒன்பது போன்ற ஒற்றைப்படை எண் கொண்ட மாதத்தில் புகுந்த வீட்டில் வைத்து வளைகாப்பு செய்கின்றனர். வளைகாப்பு முடிந்த பின் தமிழர்களின் வழக்கப்படி அனைத்து இனத்தினர் போலவே கொங்கு வேளாளர்களும் கருவுற்ற பெண்ணை தாய் வீட்டிற்கு அனுப்பி வைக்கின்றனர். வளைகாப்பு முடிந்து குழந்தை பிறக்கும் வரை தாய் அல்லது வீட்டிலேயே இருக்கிறாள் கருவுற்ற பெண்ணிற்கு தன் தாயிடம் கிடைக்கும் அரவணைப்பானது வந்து சேரும் என்கின்ற நம்பிக்கையின் அடிப்படையில் தாய் வீட்டிற்கு அனுப்பும் வழக்கத்தினை முன்னோர்கள் பின்பற்றுகின்றனர்.

தாய் சேய் சார்ந்த பழக்கவழக்கங்கள்

கருவுற்ற பெண்ணின் வீட்டில் கொடி சார்ந்த தாவரங்கள் அதாவது வெற்றிலை கொடி முல்லைக்கொடி என கொடி சார்ந்த செடிகள் நன்கு வளர்ந்தது என்றால் பெண் குழந்தை தான் பிறக்கும் என்ற நம்பிக்கையான நம்பிக்கையினை கொண்டு இருக்கின்றனர். பிறக்கப் போவது எந்த குழந்தை என அறிவதற்காக கருவுற்ற பெண் இருக்கும் வீடுகளில் விண்ணத்தார் கொடி வகை சார்ந்த செடிகளை வளர்க்கும் பழக்கத்தினை வளர்த்துக் கொண்டனர் பெண் குழந்தைகள் பிறந்தால் பெரும் பாவம் என நினைக்கும் இச்சமுதாயத்தில் பெண் பிள்ளைகளை இவ்வினத்தார் பெரும் வரமாக எண்ணுவதாகக் கூறுகின்றனர்.

> **குழந்தைகள் நள்ளிரவு அல்லது நடுப்பகுளில் பிறக்க கூடாது என்றும் அவ்வாறு பிறந்தால் உடன் பிறந்தவர்களின் ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையை கொண்டிருந்தனர். நள்ளிரவில் குழந்தை பிறந்தவுடன் சூடேற்றிய விளக்கினை இணைத்து குழந்தையை குளிக்க வைக்கும் பழக்கத்தினை கொண்டுள்ளனர் அவ்வாறு செய்வதால் குழந்தையின் ஆயுள் கூடுவதாகவும் குழந்தைகள் சார்ந்தவர்களுக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படாது என்றும் இது இவ்வினத்தார் நம்பிக்கை சார்ந்த பழக்க வழக்கங்களை பின்பற்றுகின்றனர். (தகவலாளர் - சு. வேலுசாமி, பல்லடம், வயது-63)**

கருவுற்ற பெண் இடது பக்கம் படுத்து உறங்கினால் ஆண் குழந்தை பிறக்கும் என்றும் வலது பக்கம் படுத்து உறங்கினால் பெண் குழந்தை பிறக்கும் என்று ஒரு நம்பிக்கை நிலவுவதால் தங்களுக்கு எந்த குழந்தை வேண்டுமோ அந்த திசை நோக்கி படுத்து உறங்கும் பழக்கத்தினை நம்பிக்கையோடு பின்பற்றுகின்றனர்.

வளையல் அணியும் வழக்கம்

வளைகாப்பு என்ற சடங்கு முறையிலும் இவ்விணத்தார் சில பழக்கவழக்கங்களை பின்பற்றுகின்றனர் கருவுற்ற பெண்களுக்கு மூன்று மாதத்தின் தொடக்கத்திலிருந்து கண்ணாடி வளையல்கள் அணியும் வழக்கம் பொதுவாக பழக்கமாகவே காணப்படுகிறது. பிற இன மக்கள் மட்டும் இன்றி கொங்கு வேளாளர் இனத்தவர்களும் கருவுற்ற பெண்ணிற்கு வளையல்களை அணிவித்தனர் கொங்கு நாட்டு பகுதியை சேர்ந்த மக்கள் அன்றைய காலகட்டத்தில் பெரும்பாலும் சங்கு வளையல்களை மட்டுமே அணிவிக்கும் வழக்கத்தினை கொண்டிருந்தனர். கொங்கு வேளாளர் இனமக்களும் பண்டமாற்று முறையாக கிடைக்கப் பெற்ற சங்குகளை வைத்து கைவினைப் பொருட்களாக உருவாக்கி அதனை வளையலாக அணியும் வழக்கத்தினை கொண்டிருந்ந்தனர். கடற்கரை நாடுகளிலிருந்து கொங்கு நாட்டிற்கு சங்கு வலையல்கள் கொண்டு வரப்பட்டன. வடநாட்டு மக்களின் வாணிகத்தின் உள்ளீடுகளும் அதிகம் கொங்கு நாட்டு மக்களிடையே காணப்பட்டது. **“கொங்கு நாட்டு மகளிரும் அந்தக் காலத்தில் சங்கு வளையல்களை அணிந்திருந்தனர்.” (கொங்கு நாட்டு வரலாறு, ப. 116)** என்ற சான்றுகளின் படி கொங்கு நாட்டின் கொங்கு வேளாளர்களும் சங்கு வளையல்களை அணிந்திருந்தனர். கால வளர்ச்சியாலும் அறிவியல் காரணத்தினாலும் நாளடைவில் கொங்கு வேளாளர்கள் மட்டுமின்றி கொங்கு நாட்டு மக்கள் அனைவரும் கண்ணாடி வளையல் அணியும் வழக்கத்தினை பின்பற்றினர். **“கொங்கு நாட்டில் பிற்காலத்தில் கண்ணாடி வளையல்கள் அணியும் வழக்கம் ஏற்பட்டு விட்டது.” (கொங்கு நாட்டு வரலாறு,.ப. 116)** இந்நூலின்

ஆசிரியர் கருத்தினை ஒப்பிட்டு பார்ப்பதன் மூலம் கால வளர்ச்சிக்கேற்ப பழக்க வழக்கற்களில் மாற்றங்கள் நடை பெறுகின்றன என்பதை உணர முடிகிறது. கண்ணாடி வளையலுக்கு அணிவதால் தாயின் செயல்களை சத்தத்தால் கருவில் உள்ள குழந்தை அறிய முடிகிறது என்பதை இவ்வினத்தாரின் நம்பிக்கை சார்ந்த பழக்க வழக்கமாகும்.

காது குத்தும் வழக்கம்

பிறந்த குழந்தை ஆணாக இருப்பினும் பெண்ணாக இருப்பினும் காது குத்தும் வழக்கமானது அனைத்து இனத்தவர்களும் கடைபிடிக்கப்படும் ஒன்றாகும் மரபு வழியாக கருவில் குழந்தைக்கு ஏதேனும் பாதிப்போ அல்லது குறையவோ ஏற்பட்டால் அதனை போக்குவதற்காக அறிவியல் ரீதியாக முன்னோர்கள் பின்பற்றப்படும் பழக்கவழக்கங்களில் இவ்வழக்கமும் ஒன்றாகும். வழி வழியாக தாய் மாமன் மடியில் அமர வைத்து குழந்தைக்கு மொட்டை இடுவது வழக்கமாகும். பச்சை குத்துவது, தீமிதிப்பது, உடல் உறுப்பை சிதைத்து கொள்வது போன்ற வழக்கங்கள் போலவே காது குத்தலும் அறிவியல் மற்றும் அடிப்படை காரணங்களால் இயற்றப்பட்டவை ஆகும். குழந்தையின் தாய் மாமனுக்கு திருமணம் நடைபெற்றிருந்தால் தாய் மாமனின் மனைவியான அத்தை குழந்தைக்கு காதுகுத்தி அடுத்த நிமிடமே கருப்பட்டி ஒரு துண்டினை குழந்தைக்கு தருவது வழக்கமாகும். முதன் முதலில் குழந்தையின் அத்தை இனிப்புகளை வழங்கிய பின்பு வாழைப்பழம் மிட்டாய் போன்ற பண்டங்களை உண்பதற்கு தருவது வேண்டும் என்பதை வழக்கமாகும். திருப்பூர் மாவட்டத்தின் கொங்கு வேளாளர் இறந்தார் ஆண் பிள்ளைக்கு ஏழு முட்டையும் பெண் பிள்ளைக்கு மூன்று முட்டை என்ற ஒற்றைப்படையின் அளவில் மொட்டை அடிப்பது வழக்கமாகும்.

குழந்தை பிறந்த பின்

குழந்தை பிறந்த பின் கொங்கு வேளாளர் அவர் கைநிறைய நெல்லினை கொண்டு பிறந்த குழந்தையின் கையினை முதன் முதலில் நெற்குவியலால் பதிய செய்வது வழக்கமாகும் மண் தொடாத பாதமும் கைகளும் முதன் முதலில் தாங்கள் தெய்வமாக வணங்கும் தங்களின் தொழிலின் முதன்மை பொருளான நெல்லின் மீது படுவதால் நாடும் வீடும் வளம்பெறும் என்பதால் இவ்வினத்தார் இவ்வழக்கத்தினை கடைபிடிக்கின்றனர். குழந்தை பிறந்த பிறகு முதன் முதலில் வினாத்தாள் என்னை தேய்த்து நாவிதர் இனத்தை சேர்ந்த பெண்களால் குளிக்க வைக்கின்றனர் மருத்துவ முறைகள் அறிந்த நாவிதர் இனத்தவர் இக்குழந்தையை முதன் முதலில் குளிக்க வைப்பதால் குழந்தைக்கு உடல் ரீதியாக எவ்வித பாதிப்புகளும் ஏற்படாது என்பதை கொங்கு வேளாளர் இதன் மக்களின் நம்பிக்கை சார்ந்த பழக்க வழக்கமாகும்.

பூப்பு சார்ந்த பழக்கவழக்கங்கள்

பெண் குழந்தைகளுக்கு பூப்படைதல் என்பது வாழ்வின் முக்கியமான தருணம் ஆகும் ஒரு தலைமுறை தலை துவங்க வேண்டுமானால் ஒரு பெண் குழந்தை கட்டாயமாக பூப்படைந்திருத்தல் வேண்டும் என்பது சமுதாயத்தின் கருத்தாக கருதப்படுகிறது. **“பெண்ணின் கருப்பைச் சளிப் படலத்திலிருந்து சளியும் திட்டுறு நிரமங்கலம் கொண்ட உறைய இயலாத குருதி வெளியேறுவதையே பூப்பு என்பர்.” (முனைவர் ம. அரும்பு, ப. 1043)** கொங்கு வேளாளர் இனத்தவரும் பிற இனத்தாரை போல பூப்படைந்த பெண்ணிற்கு தாய்மாமன் சீர் முதன்மை சீராக செய்யப்படுவது வழக்கமாகும். கொங்கு வேளாளர் இத்தினத்தில் பூப்படைந்த பெண்ணை தங்களது இனத்தின்

பங்காளிகள் அனைவரிடமும் ஒரு படி நெல்லினை அப்பெண் தனது முந்தானையில் மடியேந்தி பெற வேண்டும் என்பது வழக்கமாகும் பூப்படைந்த பெண்ணின் வாழ்வு நெற்கதிர்களைப் போல செழித்து வளர வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலேயே இவ்வழக்கமானது இன்றும் திருப்பூர் மாவட்ட கொங்கு வேளாளர் இன மக்களிடையே காணமுடிகிறது.

திருமணம் சார்ந்த பழக்கவழக்கங்கள்

வேளாண்மை நிலத்தில் பூட்டிய எருதுகள் போல ஆணும் பெண்ணும் இணைபிரியாமல் இல்லற வாழ்வினை இல்லறமாக நடத்திட வேண்டும்

அன்பும் அறனும் அருளால் குடிபிறப்பும்
நின்று விருந்தோம்பி நீணிலத்தில் - மன்னுந்தன்
இச்செல்வம் பெற்ற இணைவாழ்க்கை வாழ்ந்தபுகழ்
பல்செல்வம் இல்லறம்போற்று (பண்பாட்டியல் வெண்பா, ப. 94)

கொங்கு வேளாளர் இன மக்களின் திருமணம் சார்ந்த கொள்கையாகும்.

முகூர்த்தங்கால் நடுதல்

மரத்தினை கொண்டு திருமணம் நடைபெறுவதற்கு முதல் நிகழ்வாக இதனை நடுகின்றனர் கல்லான உருவ வடிவ வழிபாடானது இம்மரத்தின் நிழலில் நடைபெறுகிறது பால்வடியும் வாழமரம் என்று அழைக்கப்படும் இம்மரமானது வெப்பத்தால் வரும் துர்நாற்றம் மற்றும் உடலில் ஏற்படும் நுன்கிருமிகளை அண்ட விடாது திருமணத்திற்கு வருவோர்களால் மணமக்களுக்கு ஏதேனும் தொற்றுகள் ஏற்படக் கூடாது என்ற அறிவியல் அடிப்படை காரணத்தால் இவ்வினத்தை சார்ந்த முன்னோர்கள் வழக்கத்தினை இன்று வரை பின்பற்றுகின்றனர். பார்த்து திருமணம் ஆனது நடைபெறும், கொங்கு வேளாளர் திருமணமானது,

பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோடு
உருவு நிறத்தகாம வாயில் நிறைய அருளே,
உணர்வோடு திருவென முறையறக் கிளந்த
ஒப்பினதுவகையே (தொல். மெய்., நூ. 25)

தொல்காப்பியரின் கூற்றுப்படி பத்து வகை பொருத்தமும் பார்த்து மனம் முடிகின்றனர். இவர்களது அறுபது குளத்தின் ஒரே குலத்திற்கு எடுக்காமல் வேறு வேறு குலம் மாற்றி ஆண் பெண் எடுத்து திருமணம் முடிப்பதை இவ்வினத்தாரின் வழக்கமாகும்.

திருமணத்திற்காக அணிகலன்களான செம்பும் தங்கமும் கலந்து அணிகலன்கள் செய்யப்படுகின்றன. தங்க நகைகள் அழகுதான் என்றாலும் கூட அது உடலோடு ஒட்டி அணிவதால் உடலில் ஏற்படும் வலிப்பு சூலை போன்ற நோய்கள் வராமல் தடுக்கின்றன நகைகள் அணிவதால் நோய்கள் வரும் வாய்ப்புகள் குறைவாகவே காணப்படுகின்றன. இரும்பு செம்பு வெள்ளி உலோகங்களால் காப்புகள் செய்து குழந்தைகளுக்கு அணிவிப்பதால் குழந்தைகளுக்கும் நோய்கள் ஏற்படும் வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன செம்பு வெள்ளி கலந்த அணிகலன்கள் எண்களின் உடல் நலத்தையும் மனவளத்தையும் தருகின்றனர் மங்களத்தின் சூத்திரம் என்று அழைக்கப்படும் மாங்கல்யமும் பெண்களின் அணிகலன்களில் முதன்மை வாய்ந்தது ஒன்றாகும் சுமங்கலிய வாழ சக்தியும் சிவமும் இணைந்த பெரும் காப்பாக உள்ளதால் இவினத்தார் அன்றைய காலகட்டத்தில் கொங்கு வேளாளர் இனத்தைச் சேர்ந்த பெண்கள் காது பொன் கொப்பு என்ற அணிகலனை அணியும் வழக்கத்தினை கொண்டிருந்தனர்.

மூளையின் முக்கிய நரம்புகளின் தூண்டல் காதில் உள்ள நரம்பின் கிளையாக தொடர்பு கொண்டிருப்பதால் காதில் அணிகலன்களை பெண்கள் அணிந்திருந்தனர் சிலம்பு கொலுசு என்று அழைக்கப்படும் அணிகலனை உடலின் திசுக்கள் தூண்டப்படுவதற்காக இவ்வினத்தார் கொலுசு அணியும் வழக்கத்தினை கொண்டிருந்தனர.; கொலுசினை போலவே திருமணத்தின் போது கால் விரல்களின் மெட்டி அணியும் வழக்கத்தினை இவ்வினத்தார் கொண்டிருந்தனர். அறிவியல் சார்ந்த கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு மெட்டி அணிவதால் கால் விரலில் உள்ள நரம்புகள் மெட்டியின் அழுத்தத்தால் உள்ளத்தை சனலம் இல்லாமல் வைக்கிறது என்பதை இவ்வினத்தார் நம்பிக்கை கொள்கின்றனர்.

திருமணத்திற்கு முன் விரத நாள்

கொங்கு வேளாளர் இனத்தாரின் ஒவ்வொரு விழாக்களின் துவக்கம்; விருந்தில்தான் துவங்குகிறது. மணமக்களின் உறவினர்கள் திருவார்க்கும் ஊராருக்கும் நண்பர்களுக்கும் இவ் விருந்தினை அளிக்கின்றனர் மணமக்களின் பெற்றோர்கள் தவிர பங்காளி முறை சேர்ந்தவர்கள் தான் இவ்வினத்து விருந்தினை அளிக்க வேண்டும் என்ற வழக்கம் தினத்தாரிடம் காணப்படுகிறது இவ்விதிற்கு தேவையான அரிசி பருப்பு, புலி எண்ணெய் காய்கறிகள் தேங்காய் பழம் நிலை வெற்றிலை என அனைத்து பொருட்களையும் அனைத்து உறவினர்களும் அவரவர் வீட்டில் இருந்து கொண்டு வருவர். விருந்தின் நாளன்று காலை மணமக்களை எண்ணெய் தேய்த்து குளிப்பாட்டி புதிய ஆடைகளை அணிவிப்பர் உறவினர்களில் மாமன் வீட்டார் விருந்து மிகவும் சிறப்பு வாய்ந்த விருந்தாக கருதப்படுகிறது இவ் விருந்தில் முதலில் காரவடையும் உளுந்து வடையும் தவறாது இடம் பெற்றிருக்கும் பண்டமாகும். திருமண மணமக்கள் நீராடி புத்தாடை அணிந்து விருந்து உண்ட பின்னே எல்லோருக்கும் விருந்திடுவார்கள் கொங்கு வேளாளர் இனத்தார் நாவிதன் தொட்டி வண்ணான் ஆகிய இன தாருக்கு விருந்திடுவது மட்டுமின்றி அவர்களது வீட்டிற்க்கே விருந்து உணவினை அனுப்பி வைக்கும் வழக்கத்தினை பின்பற்றி இருக்கின்றனர் இதனை சோறாக்கி போடுதல் என்று அழைக்கின்றனர். மொய் செய்யும் உறவினர்களுக்கு மணவீட்டார் திருப்பி அவரவர் வீட்டு திருமணத்தின் போது கடனாக திருப்பி செய்து விடுவார், குறிய எதிர்ப்பை மீறாது என்ற வள்ளுவரின் வாக்கிற்கு ஏற்ப நன்றி செய்தவருக்கு மீண்டும் நன்றி செய்ததால் சிறப்பாகும் நன்றி அறிதல் என்ற வழக்கு திணை இவ்வினத்தால் கடைபிடிக்கின்றனர் என அறிய முடிகிறது. அன்று முதல் இன்று வரை வினாத்தார் திருமணத்திற்கு முதல் நாள் விருந்து போடும் பழக்கத்தினை கடைபிடித்து வருகின்றனர்.

நிறை நாழியும் கரக பானையும்

நூல் சுற்றிய இரட்டைக் கதிர் பதித்த இரும்பு வட்ட படியில் நெல்லினை நிறைத்து மனவறையில் வைப்பார்கள் இவ்வழக்கத்தினை நிறை நாழி சுற்றும் வழக்கம் என்பர். கொங்கு வேளாளர் இன தவறு செய்கின்ற ஒவ்வொரு செயல்களிலும் அருமைகார முறையை சேர்ந்த பெண்ணும் எழுதுங்கள் சீர் செய்த பெண்ணும் இம்முறையை செய்வதற்கு தகுதியானவர்களாக இவ்வழக்கத்தில் பயன்படுத்தப்படும் நெல்லும் நாளும் இனத்தாரின் முதன்மை பொருளாக கருதப்படுகிறது.

> **ஏறுதொழிலான நெல்லும் நெசவு தொழிலாளர் நூலும் அதற்கு துணையான இரும்பும் கொங்கு வேளாளர் குலத்தின் குடி பாட்டு சின்னங்கள் ஆகும். (கொங்கு வேளாளக் கவுண்டர்களின் வரலாறும் பண்பாடும், ப. 137)**

என்ற களஆய்வாளரின் வரிகளின் மூலம் கொங்கு வேளாளர் இனமக்களுக்கு குடி சின்னம் ஒன்று இருந்தது என்பதை ஒப்பிட்டு கூறுகையில் கள ஆய்வில் சேகரித்த தகவல்கள் உண்மை என அறிய முடிகிறது. நிறை நாழிகையில் மஞ்சளும் நெல்லும் மங்களகரமாக நிறைந்திருப்பது போல மணமக்களின் வாழ்வும் முழுமையாக செல்வ வளத்தால் நிறைந்திருத்தல் வேண்டும் என்பதற்காக இவ்வளக்கமானது கடைபிடிக்கப்படுகிறது இரும்பில் நூல் சுற்றும் வழக்கமானது இரும்பு போன்ற மணமக்களை நூலிடையால் கொண்ட மணமகள் என்றும் நெருக்கமாக சுற்றி பிணைந்து இருக்க வேண்டும் என்பதை கருத்தாகும். இந்த நிறை நாழியோடு சுண்ணாம்பும் காவியும் கொண்டு அலங்கரிக்கப்பட்ட பூரண கும்பம் என்று அழைக்கப்படும் கரகப் பானையில் நவதானிய முளைப்பாரி போட்டு செழுமையாக வளர்த்திருப்பார் நவதானிய அடகிய கரகப் பானையினை வைத்திருப்பதால் குடும்பம் தலை தூங்கி கிரக தோஷங்கள் அகன்று விடும் நம் என்ற நம்பிக்கை சார்ந்த வழக்கமே இவ்வினத்தாரின் பின்பற்றுகின்றனர் கொங்கு வேளாளர்கள் பிற இனத்தவர்களை போல திருமணம் மேற்கொண்டாலும் அதில் சில மாறுபட்ட தங்களது இனத்தின் அடையாளமாக திகழும் பழக்க வழக்கங்களை இன்றளவும் பின்பற்றி வருகின்றனர் என்பதை இதன் மூலம் அறிய முடிகிறது.

இறப்பு சார்ந்த பழக்கவழக்கங்கள்

இறந்தவர் பிறத்தலும் பிறந்தவர் இறந்தலும் உலக இயற்கையாக இருப்பினும் கொங்கு வேளாளர் இனத்தவர்கள் எண்ணில இறப்பிற்கும் பெரிதும் வருந்துபவர்களாக கொங்கு வேளாளர் மட்டுமின்றி இறப்பு என்பது பிற இனமாக இருப்பினும் மிகுந்த துயரத்தை ஏற்படுத்துவதான ஒரு நிலையாகும் இறப்பிலும் ஒவ்வொரு இனத்தாரும் தான் வாழ்ந்து முடித்த வாழ்வின் பதிவுகளை தன் இனத்தின் வழியில் பழக்கவழக்கங்களின் வழியாக பதிவு செய்கின்றனர்.

> **மனிதன் பிறக்கும்போது இறப்பு நிச்சயிக்கப்பட்டுவிடும் என்பது இயற்கை மனிதன் மூப்பு காரணமாகவும், நோய் காரணமாகவும் விபத்து போன்ற பல்வேறு காரணங்களால் மரணம் நிகழ்கின்றது மரணம் நிகழப்போவதை சில சமிஞ்சைகள் மூலம் அறிய இயலும் என்பதில் மக்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர். (சி. பவித்ரா, ப. 189)**

இவ்வினத்தார் இன்றைய காலகட்டத்தின் செய்தியை பரிமாறும் தொழில்நுட்ப வளர்ச்சி இல்லாத காரணத்தால் வீடு வீடாக சென்று செய்தியினை அறிவிக்கும் முறை கடைபிடிக்கப்பட்டது. இறப்பு செய்தியினை தெரிவிக்கவும் இவ்வினத்தார் அன்றைய காலகட்டத்தில் இம்முறையினையே கடைபிடித்தனர் ஒரு வீட்டில் இறப்பு ஏற்பட்டு விட்டார் ஆட்கள் மூலம் அறிவிப்பர் தோட்டி முதலானவர்களை அழைத்து ஊர் ஊராக செய்தியை அறிவித்து வர அனுப்புவார்கள் தோட்டி என்று அழைக்கப்படும் இவர்களுக்கு செய்திகளை கூறும் ஒவ்வொரு வீடுகளிலும் ஒரு படி அரிசி அல்லது பணம் கொடுப்பார்கள் இறப்பு நடந்த வீட்டாரும் இழவு செய்திகளை கூறியவர்களுக்கு பணம் கொடுப்பது வழக்கமாகும். **செத்துக் கொடுத்தான் சீதக்காதி** என்ற பழமொழிக்கு ஏற்ப பிறரது இறப்பிலும் ஏழையர் சிலர் வாழ வேண்டும் என்ற பொருளும் பணமும் தருவதற்காக இன்றும் கிராமப்புறத்தில் வழக்கமானது பின்பற்றப்பட்டு வருகிறது.

சாப்பறை கொட்டும் வழக்கம்

கொங்கு வேளாளர்கள் இறந்தோருக்கு சாப்பறை கொட்டுவது வழக்கமாகும். கொங்கு வேளாளர் இனத்தை சேர்ந்தவர் இறந்தால் ஊர் கொங்கு பறையனுக்கு தான் முதலில் செய்தி சொல்லி அனுப்புதல் வேண்டும் பறை கொட்டுவதற்கு அந்த ஊர் பறையனுக்கு தான் உரிமையுண்டு என்ற கொள்கையினை வினாத்தாள் கொண்டுள்ளனர் இருப்பதால் பண்டிகை திருவிழா நாட்களில் வீடுகளில் கோரும் பலகாரங்களும் பெற்று செல்கின்றனர். இறந்த வீட்டில் தேங்காய் உடைத்து சாமி கும்பிட்டவுடன் பறையன் வந்து சாப்பரி கொட்டுவான் இறந்தவர் வீட்டில் வாழ்த்துப்பாடும் வழக்கத்தினை வினதால் பின்பற்றுகின்றனர். ஊரின் நடுவே நின்று பறையடித்த பின் இறந்தவரின் பெருமை கூடி ஆடிப்பாடி பறையடிப்பது வழக்கமாகும் இறப்பு வீட்டாரை சேர்ந்த உறவினர்களிடம் வாழ்த்து பணமும் பெற்று கொள்வது வழக்கமாகும் இறப்பு வீட்டாரிடம் வேட்டி அல்லது துண்டினை வாங்கி பந்தலில் விரிப்பு போட்டுக் கொள்வான். நிலவிற்கு வந்து போகும் உற்றார் உறவினர்களும் அந்த விரிப்பில் பணம் போடுவார்கள், பணம் போடுபவர்களின் பெயர் கூறியும் வாழ்த்து கூறுவர். முறையை சேர்ந்தவர்களும் கோடி கொண்டு வரும்போது இந்தந்த உறவுகள் கோடி கொண்டு வருகின்றனர் என கூவி சாப்பிடட்டுவது பறையரின் வழக்கமாகும் கொங்கு வேளாளர் இனத்தவரின் இறப்பின் செய்தியை அது மட்டுமின்றி ஊரு பறையேன் என்ற உரிமையை விட்டுக் கொடுக்காமல் தனது கடமைகளை நிறைவேற்றுவதில் கொங்கு பற எண் பெரும் பங்கு வகுக்கின்றார்.

செலவு கொடுத்தல்

இறந்தபின் எரிக்கும் வழக்கத்தை உடைய இவ்வினத்தார் எரித்த பின் செலவு கொடுத்தல் எனும் வழக்கத்தினை பின்பற்றுகின்றனர் சுடுகாட்டின் மரத்தடி மேடையில் வண்ணான் துணி விரிப்பில் ஊர் அருமை காரர்கள் அல்லது பெரியவர்கள் அமர்வார்கள் இறப்பு வீட்டாரும் முற்றார உறவினரும் சூழ்ந்து இருப்பார்கள் செலவு கொடுத்தால் ஊரார் முன் நடைபெறும் பறை கொட்டியவன் மாலை கொண்டவன் சங்கு ஊதியவன் சுடுகாட்டு உரிமை தொட்டி வண்ணா நாவிதன் தெரு சுத்தம் செய்பவர்கள் என அனைவரும் பணம் பெறுவார்கள் சிலருக்கு தங்கள் வசதிக்கேற்ப அதிகப்படியாகவும் கொடுப்பார்கள் அழைப்பு செய்ய செல்வதற்காக சென்ற அனைவரும் பணம் பெறுவார்கள். இறப்பாக இருப்பினும் அனைத்து இன தவறும் தங்களை நிகழ்வில் பங்கு கொள்ளல் வேண்டும் எனவும் ஊரார் முன்பே உழைப்பிற்கு இவர்களுக்கு ஊதியம் தருதலும் வினத்தாரின் இன்று தொட்டை வழக்கமாகும். இறந்த வீட்டாரிடம் பணம் வேண்டும் என கேட்டு பெற மாட்டார் எனவே சுடுகாட்டிலே காரியங்களோடு காரியமாக பணத்தை இறப்பு வீட்டாரை தருவது விண்ணத்தாரையும் வழக்கமாக கடைபிடிக்கப்படுகிறது.

பஞ்சு கொடுத்தல்

கணவனை இழந்த பெண்ணிற்கு அன்று இரவே வெள்ளாடு கொடுப்பது வழக்கமாகும். கிழக்கு புறமாக முக்காலியில் பெண்ணை அமர்த்தி உறவு பெண்கள் அப்பெண்ணை கட்டி அணைத்து அழுவார்கள் கணவனை இழந்த பெண்ணின் உடன் பிறந்த சகோதரன் உறவினை சேர்ந்தவரின் கையால் அப்பெண்ணின் கையில் வெண்ணிற பஞ்சனை தருவது வழக்கமாகும். அதனை வாங்கிக் கொண்டு கதறி அழுவாள்.

> **திருமணம் முடிந்த பிறகு பெண்கள் கணவனுக்காகவும் தன் பிள்ளைகளுக்காகவும் கணவனின் குடும்பத்திற்காகவும் தன் வாழ்நாள் முழுவதும் ஒரு குடும்பத்தை கட்டி காக்கும் குலவிளக்காக வாழும் அதே பெண் கணவனை இழக்கும் போது விதவை அமங்கலி ஆகிறாள் கைமை நோன்பு மிகவும் துன்பமானது. (சே. இராஜேஸ்வரி, ப. 1001)**

கணவனை இழந்த பெண்கள் குடும்ப சுமையை தானே ஏற்று நடத்த வேண்டும் என்றும், காதல் உணர்வுகள் இன்றி தன் துணையினை மட்டுமே மனதில் வைத்து வாழ வேண்டும் என்ற நிலையினை அன்றைய காலத்திய கொங்கு வேளாளர் பெண்கள் கொண்டிருந்தனர். கைம்மை நிலை மட்டுமில்லாது ஆண் துணையின்றி பொருளாதாரத்தில் முன்னேற வேண்டும் என்பதற்காக சில கைத்தொழில்களையும் கற்றிருந்தனர். இதனை கள ஆய்வாளரான ப.சின்னசாமி கவுண்டர் என்பவர் தமது கொங்கு வேளாளக் கவுண்டர்களின் வரலாறும், பண்பாடும் என்ற புத்தகத்தில்,

> **கைராட்டையால் நூல் நூற்று பிறர் உழைப்பில் வாழாமல் தன் உழைப்பில் தன் கணவனுக்கு அடுத்த நிலையில் குடும்பத்தை காத்து வாழ்வேன் என தன்னம்பிக்கையை பெண்ணிற்கு உணர்த்துவதற்காக பின்பற்றுகின்றனர் இதனை பருத்திப் பெண்டிர் புறம் (கொங்கு வேளாளக் கவுண்டர்களின் வரலாறும் பண்பாடும், 129: 7, ப. 257)**

என்ற களஆய்வு அறிஞரின் கருத்தானது கைம்மை பெண்களின் நிலைக் குறித்து விளக்கிக் கூறும் ஒப்பிடாக அமைந்துள்ளது. **“நெஞ்சு அமர் காதல் அழுத கண்ணீர் என்புபடு கடலை வெண்ணீறு அவிப்ப… (கொங்கு வேளாளக் கவுண்டர்களின் வரலாறும் பண்பாடும், ப. 257)** என்ற அடிகளும் கணவனை இழந்த பெண்ணின் நிலையினை உணர்த்துகின்றது இவ்வழக்கமானது கணவனை இழந்த கைமை பெண்கள் கடைபிடிக்கப்படும் உணவு கட்டுப்பாட்டினை இவ்வினத்து சேர்ந்த கைம்மை பெண்களும் கடைப்பிடித்தனர். கொங்கு வேளாளர் பெண்கள் கைமை நோன்பில் நெறி தவறாது இருந்தனர் என்பதை கள ஆய்வு செய்திகள் மூலமும், சில வரலாற்று கள ஆய்வாளர்கள் மூலமும் அறிய முடிகிறது.

தொகுப்புரை

குளிர்ந்த நீரில் நீராடி, ஆம்பல் கிழங்கு உணவையும் எள்ளு வேளை கீரை போன்ற உணவுகளையும் உண்டு சமூகத்தின் கட்டுப்பாட்டிற்குள் அடங்கி கிடந்தன. கணவனை இழந்த பிறகு தனது வாழ்வின் பழக்க வழக்கங்கள் உணவு உடை என அனைத்திலும் சுதந்திரத்தை இழந்த இவ்வினத்து பெண்கள் இன்றைய காலகட்டத்தில் இல்லை என்றாலும் அன்றைய காலகட்டத்தில் வாழ்ந்திருந்தனர் என்பதை இவர்கள் வாழ்வியல் பழக்கவழக்கங்களின் மூலம் அறிய முடிகிறது உண்டி கொடுத்தோர் உயர் கொடுத்தோரே என்ற பல பழமொழிக்கேற்ப உணவு தரும் கடவுளாக விளங்கும் இவ்வினத்தார் பிறப்பு முதல் இறப்பு வரை தங்களது இனம் சார்ந்த மற்றும் தொழில் சார்ந்த அனைத்து பழக்க வழக்கங்களையும் இன்றளவும் மென்மேலும் மேம்படுத்தி வருகின்றனர் என்பதையே இக்கால ஆய்வின் மூலம் அறிய முடிகிறது.

குறிப்புகள்

[1] அரும்பு, ம. “பச்சைமலை மலையாளி மக்களின் வாழ்வியல் சடங்குகள்.” *புதிய அவையம்,* தொகுதி 07, ஜீன் 2023, ப. 1043.

மலர் - 5, இதழ் - 2, வைகாசி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ, டி.ஓ.ஏ.ஜே குறியிடப்பட்டது

[2] இராஜேஸ்வரி, கை.ப. “தொல்காப்பியம் கூறும் தொழில்கள்.” *பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்*, தொகுதி 1, 2019, ப. 560.

[3] இராஜேஸ்வரி, சே. “நாட்டுப்புற ஒப்பாரிப் பாடல்கள் காட்டும் பெண்களின் அவல நிலை.” *புதிய அவையம்*, தொகுதி 07, ஜீன் 2023, ப. 1001.

[4] துரைசாமிப்பிள்ளை, ஔவை சு. *புறநானூறு-பகுதி 1*. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1947.

[5] சண்முகசுந்தரனார், சு. *நாட்டுப்புற இயல்*. கவ்யா பதிப்பகம், 1975.

[6] சின்னசாமி கவுண்டர், கவியருவி.தே.ப. *கொங்கு வேளாளக் கவுண்டர்களின் வரலாறும் பண்பாடும்*. ஸ்ரீசரஸ்வதி தேவி பதிப்பகம், 2000.

[7] சுப்பிரமணியன், ச.வே. *தொல்காப்பியம் முழுவதும்*. மெய்யப்பன் பதிப்பகம், 2008.

[8] தேவநேயப் பாவாணர், ஞா. *திருக்குறள் முழுவதும்*. ஸ்ரீஇந்து பப்ளிகேஷன்ஸ், 2000.

[9] நல்லாதனார். *திரிகடும்*. சுரதா பதிப்பகம், 2005.

[10] பவித்ரா, சி. “சூல் புதினம் எடுத்தியம்பும் நாட்டார் நம்பிக்கைகள்.” *தேசியக் கருத்தரங்க ஆய்வுக்கோவை*, தொகுதி 4, ஏப்ரல் 2023, ப. 189.

[11] வேங்கடசாமி, மயிலை சீனி. *கொங்க நாட்டு வரலாறு*. நியூ செஞ்சரி புக் ஹவுஸ், 2014.

[12] யசோதா, செ. “கொங்கு வேளாள பண்ணைக்குல மக்களின் நம்பிக்கைகள்.” *நவீனத் தமிழாய்வு*, பகுதி-4, மார்ச் 2021, ப. 1095.

[13] வேலுசாமி, சு. நேர்முகப் பேட்டி. 20 மார்ச் 2025.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை.
கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை.
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 5, Issue - 2, May 2026 E-ISSN: 2583-0481
MLA, DOAJ Indexed

Social Context of Clothing and Ornaments in Sangam Literature

Dr. R. Radhika, Assistant Professor of Tamil,
Dhanalakshmi Srinivasan Women's Arts and Science College, Perambalur, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0007-8692-5846
DOI: 10.5281/zenodo.20473997
Received: 10 December 2025; **Revised:** 18 February 2026; **Accepted:** 15 March 2026; **Available Online:** 31 May 2026

Abstract

Sangam literature serves as a cultural trait and a reflection of the lifestyle of the ancient Tamil society. This research paper deeply describes the social background of Tamil clothing design, the use of ornaments, and their grooming methods as revealed through Sangam poems. The paper extensively compiles the technological and evolutionary transition of human attire—moving from primitive times when humans lived in harmony with nature wearing leaves, tree barks, and animal skins, to the civilization's progress that led to the weaving and wearing of cotton, silk, and ultra-fine fabrics described as fine as 'snake's skin'. Furthermore, this paper explains the advanced grooming and lifestyle nuances of ancient Tamils, such as women spinning yarn at home under lamplight and their active participation in the weaving industry; the social status reflected through ornaments like the tiger-tooth amulet (pulipal thaali) worn by children, the warrior's anklet (veerakkazhal) worn by men, and the anklets (silambu), waist-bands (megalai), rings (paandil), and conch bangles worn by women; the signature garlands of the three great dynasties (Moovendhar), the wartime flower-wearing traditions of warriors, and the essential practice of women adorning themselves with flowers; along with grooming techniques like perfuming the hair with eaglewood smoke (akil), and applying red cotton sap (sempanchu kuzhambu) and fragrant unguents (thagarum). Through these elements, this paper establishes that clothing and ornaments were not merely for external beauty, but also stood as symbols of gender roles, life ethics, and the socio-economic civilization of the ancient Tamil society.

Keywords: Sangam Literature, Women, Clothing, Ornaments, Adornment, Leaf Garment.

References

[1] Amala Karthika, Ka. "Purananuru Kaattum Vaazhviyal Vizhumiyangal." *International Journal of Tamil Language and Literary Studies*, vol. 6, no. 2, June 2024.
[2] Iragavaiyangaar, Ira. *Pathuppattu (Moolamum Uraiyum)*. Sri Shenbaga Pathippagam, 2021.
[3] Raasamaanikkanaar, Maa. *Tamilmozhi Ilakkiya Varalaaru*. Kannammal Pathippagam, 1996.
[4] U. Ve. Saa. *Pathuppattu Moolamum Nachchinaarkkiniyar Uraiyum*. U.Ve.Saminathaiyar Nool Nilayam, 2012.
[5] Sathiya, Mu. "Chozharkala Anikalan - Or Aayvu." *Panmuga Thuraiyilana Membatta Ariviyal Aaraychi Mattum Puthaakkathirkaana Pannaattu Aayvithal*, vol. 3, no. 1, Oct. 2023, p. 524.
[6] Sadasiva Iyer, Thi. *Aingurunooru Moolamum Uraiyum*. Ulaga Tamilaaraaichi Niruvanam, 1999.
[7] Susila, Ka. "Sangath Thogai Noolkalil Udaik Kalai Sorkal." *Pranav Tamizhiyal Aayvithal*, vol. 2, no. 1, Feb. 2023, p. 389.

[8] Somasundaranar, Po. Ve. *Pathuppattu Moolamum Uraiyum*. Saiva Siddhantha Noorpathippu Kazhagam, 2008.
[9] Thakshinamoorthi, A. *Tamizhar Nagarikamum Panpaadum*. Vetri Selvi Veliyeettagam, 1973.
[10] Narayanasami Iyer, A. *Narrinai Naanooru*. Saiva Siddhantha Noorpathippu Kazhagam, 2001.
[11] Puliyur Kesigan. *Ettuthogaiyum Pathuppattum*. Sri Shenbaga Pathippagam, 2021.
[12] Madhanraj, Ira. "Sanga Ilakkiyathil Malargal." *International Journal of Tamil Language and Literary Studies*, vol. 8, no. 2, Jan. 2026, p. 443.
[13] Mayilai Seeni Vengadasami. *Thamizhar Valartha Azhagu Kalaigal*. Shanthi Noologam, 2014.
[14] Jeganathan, Ira. *Kurunthogai Ayyuk Kovai (3 Volumes)*. Sanga Ilakkiya Ayyu Maiyam, 2006.
[15] Mahalakshmi, Ki. "Sangakaala Nadaga Magalir (Aadarmagalir)." *Shanlax Pannaattuth Thamizhiyal Aayvithal*, vol. 2, no. 4, Apr. 2018, p. 187.
[16] Manikandan. "Purananuru Koorum Vaazhviyal Sindhanaigal." *Iniyavai Kattral Pannaattu Thamizhiyal Minnidhal*, vol. 2, Nov. 2022.
[17] Premalatha, Ja. "Pillai Thamizh Ilakkiyangalil Aadai Anikalangal." *Kalanjiyam Saarvadesa Tamizh Aayvithal*, vol. 3, no. 4, Nov. 2024, p. 2.

Author Contribution Statement: NIL.
Author Acknowledgement: Nil
Author Declaration: Nil

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

மலர் - 5, இதழ் - 2, வைகாசி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

சங்க இலக்கியங்களில் ஆடை மற்றும் ஆபரணங்களின் சமூகப் பின்புலம்

முனைவர் ரெ. ராதிகா, உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத் துறை,
தனலட்சுமி சீனி வாசன் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பெரம்பலூர், தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0007-8692-5846

ஆய்வுச் சுருக்கம்

பழந்தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டு அடையாளங்களாகவும், வாழ்வியல் கண்ணாடியாகவும் விளங்குபவை சங்க இலக்கியங்களாகும். சங்க இலக்கியப் பாடல்களின் வழி அறியலாகும் தமிழர்களின் ஆடை வடிவமைப்பு, ஆபரணப் பயன்பாடு மற்றும் அவர்களின் ஒப்பனை முறைகளின் சமூகப் பின்புலத்தை ஆழமாக இவ்வாய்வுக் கட்டுரை விவரிக்கிறது. ஆதிமனிதன் இயற்கையோடு இயைந்து வாழ்ந்து தழை, மரப்பட்டை மற்றும் விலங்குகளின் தோல்களை ஆடையாக உடுத்திய நிலை மாறி, நாகரிக வளர்ச்சியினால் 'பாம்பின் தோல்' போன்ற மிக மெல்லிய நூலாடைகளையும், பருத்தி மற்றும் பட்டு ஆடைகளையும் நெய்து உடுத்திய தொழில்நுட்பப் பரிணாம வளர்ச்சியை இக்கட்டுரை விரிவாகத் தொகுத்துக் கூறுகிறது. பெண்கள் வீட்டில் விளக்கொளியில் நூல் நூற்ற செய்திகள் மற்றும் நெசவுத் தொழிலில் அவர்களின் தீவிரப் பங்களிப்பு; சிறுவர்கள் அணிந்த புலிப்பல் தாலி, ஆடவர் சூடிய வீரக்கழல், மகளிர் அணிந்த சிலம்பு, மேகலை, பாண்டில், சங்கு வளையல்கள் போன்ற ஆபரணங்களின் வழி வெளிப்படும் சமூக அந்தஸ்து; மூவேந்தர்களின் அடையாள மாலைகள், மறவர்களின் போர்க்காலப் பூச்சூடல் மரபுகள் மற்றும் மகளிரின் மலர்சூடும் இன்றியமையாமை; கூந்தலுக்கு அகிற்புகையூட்டல், செம்பஞ்சுக் குழம்பு மற்றும் தண நறுந்தகரம் பூசுதல் போன்ற பழந்தமிழரின் மேம்பட்ட ஒப்பனை நுட்பங்கள் ஆகியவை இவ்வாய்வுக் கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளன. இதன் மூலம், ஆடையும் ஆபரணமும் வெறும் புற அழகிற்கானவை மட்டுமல்லாமல், பழந்தமிழ்ச் சமூகத்தின் பாலினப் பங்கீடு, வாழ்வியல் நெறி மற்றும் பொருளாதார நாகரிக உயர்வின் குறியீடுகளாகத் திகழ்ந்தன என்பதை இக்கட்டுரை நிறுவுகிறது.

குறிப்புச்சொற்கள்: சங்க இலக்கியம், மகளிர், ஆடை, ஆபரணம், ஒப்பணை, தழை ஆடை.

முன்னுரை

"உண்பது நாழி; உடுப்பவை இரண்டே" என்ற புறநானூற்று வரிகளுக்கேற்ப, மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகளான உணவு மற்றும் உடைக்குத் தமிழர் பண்பாட்டில் முக்கிய இடமுண்டு. ஆதிமனிதன் இயற்கைப் பொருட்களை ஆடையாக அணிந்த காலம் தொட்டு, நுட்பமான நெசவுத் தொழில் மூலம் 'பாம்பின் தோல்' போன்ற மெல்லிய ஆடைகளைத் தயாரித்த நாகரிக வளர்ச்சி வரை சங்க இலக்கியங்கள் சான்று பகிர்கின்றன. ஆடைகள் மட்டுமன்றி, உடலைப் பொலிவுபடுத்தும் அணிகலன்கள் மற்றும் பாதுகாப்பான தங்குமிடங்களை அமைப்பதிலும் பழந்தமிழர்கள் உலகிற்கே முன்னோடியாகத் திகழ்ந்தனர். இக்கட்டுரை, சங்க கால மக்களின் வாழ்வியலில் ஆடை, ஆபரணம் மற்றும் கட்டடக்கலை பெற்றிருந்த சமூகப் பின்புலத்தை விளக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

சங்க இலக்கியம் கூறும் ஆடைகள்

மக்களின் அடிப்படைத் தேவைகளுள் உணவிற்கு அடுத்த நிலையினைப் பெறுவது உடையாகும். தழை, மரப்பட்டை போன்றவற்றை உடுத்திய ஆதிமனிதன் தன் தேடலால் விலங்குகளின் தோலினையும் உடுத்தலானான். பின்னர் நாகரிக வளர்ச்சியால்

உந்தப்பட்டவன் நூலாடைகளை உற்பத்தி செய்யும் நிலைக்கு உயர்ந்தான். இவ்வகை மூன்றாம்படிநிலை வளர்ச்சியிலிருந்தே தொலைநோக்கு பெறப்படுகிறது. பழந்தமிழ் சமுதாயத்தைப் பொறுத்த வரையில் உடையின் தேவையை நிறைவு செய்ய இரண்டு வகையான வழிமுறைகளைச் செயல்படுத்தி வந்துள்ளமை புலனாகிறது. ஒன்று வறியவர்களுக்கு உணவோடு உடையையும் கிடைக்கச் செய்தல், மற்றொன்று உடையின் உற்பத்திக்கு அடிப்படையான தொழிலினைப் பெருக்குதல் என்பதாகும்.

தன்னை நாடி வரும் வறியவர்க்கும், பாணர்க்கும் அவர்களின் கிழிசல் ஆடைகளைக் களைந்து, புத்தாடைகளை உடுக்கச்செய்யும் பழந்தமிழ் அரசர்களின் செயல்களைப் புறநானூறு காட்டுகின்றது. அவ்வாறு வழங்கப்பட்ட ஆடைகள் பலவகை நுண்வேலைப்பாடுகளைக் கொண்டதாகவும், பல்வகைத்தொழில் நுட்பங்களின் வெளிப்பாடாகவும் விளங்கின. பாம்பின் தோல் போன்ற வடிவையுடையனவும், மூங்கிலின் உள்பக்கத்தில் உள்ள தோலைப் போன்றனவும், நெய்யப்பட்ட நூல் இழைகளின் வரிசை அறிய முடியாத, பூ வேலைப்பாட்டுடன் கூடியனவுமாகிய ஆடைகளை வறியவர்க்குக் கொடுத்து உடுக்கச் செய்த செய்தியினை,

பாம்புரி யன்ன வடிவின காம்பின்
கழைபடு சொலியி னிழையணி வாரா
ஒண்பூங் கலிங்க முடீஇ (புறநானூறு, பா. 383: 9-11)

என்ற பாடலடிகள் காட்டுகின்றன. இதைப்போல, மணி, பொன், முத்துக்களோடு பல்வேறு வகையான உடைகளை வழங்கிய செய்தியையும், புறநானூறு காட்டுகின்றன. மேலும், ஆடைகளுக்கு வண்ணம் ஏற்றும் முறையினைப் பழந்தமிழர் கற்றிருந்தனர் என்பது, நீலக் கச்சை ரோச்கை பூவா ராடை என்ற வரியாலும், கடல் அலை போன்ற ஆடைகளை உற்பத்தி செய்யும் வன்மை கொண்டிருந்தனர் என்பது தெளவாகிறது. நெசவுத் தொழிலுக்கு அடிப்படையான பருத்தியை உள்நாட்டிலேயே விளைவித்த செய்தியினைப் புறநானூறு காட்டுகிறது. பருத்தி மிகுதியாகப் பயிரிடப்பட்டதை, பருத்தி வேலிச் சீறூர் என்பதிலும் அறியமுடிகிறது.

மலை போன்ற தோள்களில், விலை மதிப்புடைய பல மணி கோர்க்கப்பட்ட பாம்பு போன்று வளைந்திருக்கும் ஆரத்தையும், பூ வேலைப்பாடுடைய கலிங்கம் என்ற ஆடையையும் மன்னன் அணிந்திருந்ததாக (புறநானூறு, பா.398) பாடல் கூறுகிறது (முனைவர் பிரேமலதா, ஐ, ப. 2)

என்று முனைவர் ஐ.பிரேமலதா அவர்கள் தனது ஆய்வுக்கட்டுரையில் பதிவு செய்துள்ளார். சங்ககாலத் தமிழர்களின் வாழ்வியலில் நெசவுத் தொழில் மிக உன்னதமான இடத்தைப் பெற்றிருந்தது. ஆடை தயாரிப்பில் அவர்கள் கையாண்ட தொழில்நுட்பங்களும், ஆடைக்கு வண்ணம் தீட்டும் கலைகளும் பழந்தமிழரின் மேம்பட்ட நாகரிகத்தை உலகிற்குப் பறைசாற்றுகின்றன. பழந்தமிழர்கள் ஆடைகளை நெய்வதோடு மட்டுமன்றி, அவற்றுக்குத் தகுந்த வண்ணம் ஏற்றும் கலைநயமிக்க முறைகளையும் நன்கு அறிந்திருந்தனர். நீல நிறக் கச்சுகளையும், பூ வேலைப்பாடுகள் நிறைந்த ஆடைகளையும் அவர்கள் ஆடை தயாரிப்பில் பயன்படுத்தியுள்ளனர். அதுமட்டுமன்றி, கடலின் அலைகளைப் போன்ற மடிப்புகளை உடைய நுட்பமான ஆடைகளை உற்பத்தி செய்யும் அசாத்திய திறமையையும் பழந்தமிழர் பெற்றிருந்தனர் என்பது வியப்பிற்குரியது.

பெண்களின் பங்கு

நெசவுத் தொழிலுக்கு மிக அடிப்படையான தேவையாக விளங்குவது பருத்தி ஆகும். பழந்தமிழர்கள் இத்தகைய பருத்தியை வேற்று நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யாமல், தங்கள் உள்நாட்டிலேயே பெருமளவில் விளைவித்தனர். சங்ககாலத்தில் பல சிற்றூர்களைச் சுற்றிப்

பருத்திச் செடிகளே வேலியாக அமைந்திருக்கும் அளவிற்குப் பருத்தி விவசாயம் மிகச் செழிப்பாக நடைபெற்றிருந்தது. பழந்தமிழர் சமூகத்தில் நெசவுத் தொழில் என்பது ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் தீவிரமாகப் பங்கேற்ற ஒரு கூட்டுத் தொழிலாக விளங்கியது. குறிப்பாக, பெண்கள் ஆடை நெய்வதற்கான நூலைத் தயாரிப்பதில் பெரும் பங்கு வகித்தனர். நெசவுத் தொழிலில் பெண்களும் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர்.

பருத்திப் பெண்டின் பனுவ லன்ன
பருத்திப் பெண்டின் சிறுதீ விளக்கத்து (புறநானுறு, பா. 125: 1)

என்ற வரி இதனைக் காட்டுகிறது. மேலும், பெண்கள் வீட்டில் விளக்கொளியில் நூல் நூற்ற செய்தி தெளிவாகிறது. இத்தகைய பல்வேறு நடவடிக்கைகள், ஆடைகளுக்கான தேவையை நிறைவு செய்ய பழந்தமிழர் மேற்கொண்ட தொலைநோக்குத் திட்டங்களை நன்கு வெளிக்காட்டுகின்றன. மகளிர் கலிங்கம் என்னும், ஒருவகை ஆடையை அணிந்தனர். அது கலிங்க நாட்டிலிருந்து வந்தது என்பது அப்பெயரால் பெறப்படும்.

காந்தார நாட்டிலிருந்து வந்த குடிவகை கந்தாரம் எனப்பெயர் பெற்றது ஒப்பு நோக்கத்தக்கதும். கோடை, குளிர் முதலிய காலங்களுக்கேற்ப, உடை மாற்றி உடுத்தினர் என்பது **'பட்டு நீக்கித் துகிரெடுத்தும்'** என்னும் அடியால் பெறப்படும். புனலாடச் செல்வோர் 'அதற்கெனத் தனி ஆடை உடுத்தினர்', அது புட்டகம், ஈரணி என்று வழங்கப்பெறும். நூல் நூற்கும் இப்பெண்கள் 'பருத்திப் பெண்டிர்' என்றே சிறப்பிக்கப்பட்டனர். இத்தகைய முறையான பருத்தி விவசாயம், பெண்களின் அயராத உழைப்பு, வண்ணமேற்றும் தொழில்நுட்பம் மற்றும் ஆடை வடிவமைப்பில் காட்டிய தனித்துவம் போன்ற பல்வேறு தொலைநோக்குச் சிந்தனைகளும் திட்டங்களுமே பழந்தமிழரின் ஆடைத் தேவையைத் தற்சார்போடு நிறைவு செய்ய உதவின என்பதில் ஐயமில்லை.

ஞாழல் ஆடை (இயற்கை ஆடைகள்)

தலைவன் தனது காதலியின் சிறப்புகளைத் தோழனிடம் விவரிக்கிறான். அவள் கைகளில் சங்கு வளையல்களையும், இடையிலே ஞாழல் மரத்தின் தழைகளால் கோர்க்கப்பட்ட ஆடைகளையும் அணிந்திருப்பதாகக் கூறுகிறான்.

கானல் ஞாழல் கவின்பெறு தழையள்
வரையர மகளிரின் அரியளென்
நிறையரு நெஞ்சம் கொண்டொளித் தோளே (ஐங்குறுநூறு, பா. 195)

கடற்கரைச் சோலையில் ஞாழல் தழையாலான ஆடை அணிந்த அவள், மலைமகளிர் போன்ற பேரழகுடன் திகழ்வதாகவும், அவளே தனது உள்ளத்தைக் கவர்ந்தவள் என்றும் தலைவன் பெருமிதம் கொள்கிறான்.

தழை ஆடை உடுத்தல்

தழை ஆடை உடுத்தும் பழக்கம் மக்களிடையே இருந்ததை **"ஐங்குறுநூறு"** கூறுகிறது. பகைத் தழை மலர்களாலும் குழையாலும் தொடுக்கப்பட்ட தழையுடை. நீல நிறம் உடைய நெய்தலே தொடுப்பின் அழகு. பிறவாமை கருதி செருந்தி, புன்னை, அரும்பு முதலியவை கலந்து கொடுக்கப்பட்டதால் பகைத் தழை என்றாள். **"புறநானூற்றுத் தாபதநிலைப் (கைம்மை) பாடல் ஒன்றில் மலரிதழ்களால் நெறித்துக் கட்டி அமைத்த ஒருவகை ஆடை "தழை" என்னும் சொல்லால் குறிக்கப்படுகிறது." (சுசீலா, கா. ப. 389)** என்று தனது ஆய்வுக்கட்டுரையில் தழை உடையைக் குறிப்பதாகும் என்று பதிவிட்டுள்ளார். பொன்மை வெண்மை பசுமை நிறம் கொண்ட பல மலர்களும் கலந்து கிடந்தாலும் இடையில் இடையே மணிபோல் கிடந்து மிளிர்தலின் நெய்தல் பகைத் தழை என்றாள். நொதுமலாளர் கொள்ளார் இவையே என்றது நீயல்லாதாரில் இப்புப்பறிப்பவர் இல்லை என்பதாம். பெறுதற்கரிய முத்தைப் பரதவர் விற்கும் தொழில் குடியில் பிறந்தவள் தலைவி ஆவாள்.

கடல்கெழு கொண்கன் காதல் மடமகள்
கெடலரும் துயரம் நல்கிப்
படலின் பாயல் வவ்வி நல்கியோளே (ஐங்குறுநூறு, பா. 374)

சங்கில் பிறக்கும் முத்துக்களைக் கொணர்ந்து பரதவர் ஏனைய நிலத்தில் வாழ்பவர்க்கு விற்கும் கடல் பொருந்திய கொண்கனின் அன்புமகள் நீக்க முடியாத துயரத்தைத் தந்து, கண் மூதலான இனிய உறக்கத்தைக் கவர்ந்து கொண்டாள் என்று தலைவன் கூறினான்.

அணிகள் அணியும் பழக்கம்

சங்க கால மக்கள் பல்வேறு வகையான அணிகலன்களைப் பயன்படுத்திய வழக்கம் புலனாகிறது. காலில் பொன்னாலான சதங்கை. இடுப்பிலே பொன்மணியிலான வடம், அதன்மேல் சிவந்த பவழ வடங்கள் அவற்றின் மேல் பூந்துகில். கையில் அழகில் தொடி, வாள், மழுப் போன்ற அணிகளை நெருங்கக்கட்டி அதன் இரண்டு புறத்திலும் காளை உருவம் தாங்கிய பவழத்தால் செய்த அணி. முத்தும் பல மணிகளும் பிறவும் கோத்த மூன்று வடங்கள் அவற்றுக்கு மேல் நீலப்பூப் போலச் செய்த மணிமாலை ஆகியவற்றைச் சிறுவர்க்கு அணிவித்து அழகு செய்தனர்.

புலிப்பல் தாலியைச் சிறார்க்கு அணிவித்தனர் எனும் செய்தியை, **“புலிப்பற் றாலிப் புன்றலைச் சிறாஅர்” (புறநானூறு, பா. 374: 9)** மறவர் கால்களில் வீரக்கழல் அணிவதும் பெண்டிர் மெல்லடியில் சிலம்பணிதலும் வழக்கம். பகையரசனின் தலையில் அணிந்த பொன் முடியினை உருக்கி வீரக்கழல் செய்து, மன்னர் காலில் அணிந்தனர், நெடுஞ்செழியன் கிண்கிணி களைந்த காலில் வீரக்கழல் அணிந்தான். தோளில் அணிந்த தொடியை நீக்கி, வில்லைப் பற்றினான், கண்ணியும் தாரும் அணிந்து ஐம்படைத்தாலியை அகற்றா நிலையில் போருக்குச் சென்றான். பால் விட்டு, உணவும் இன்றி தான் உண்ணத் தொடங்கினான் என நெடுஞ்செழியன் இளமையில் பொருத்தமையைக் காட்டும் இடைக்குன்றூர் கிழார் பாடல், இளமை அணிகலன்களை அறிவிப்பதோடு அவனது பருவ மாற்றத்தையும் புலப்படுத்துகிறது. நள்ளி என்னும் வள்ளல் வேட்டையாடச் சென்றபோது, புலவரிடம் 'காட்டு நாட்டேம்', வேறு உயர்ந்த பொருள் என்பால் இங்கில்லை எனக்கூறி, அவர்க்கு மார்பில் பூண்ட வயங்குகாழ் ஆரத்தையும் முன்கையில் அணிந்த கடகத்தையும் அளித்தான் என்ற செய்தியால், ஆரம் கடகம் என்னும் அணிகளைப் பற்றி அறிகிறோம். தொடி, மங்கல அணி, முத்துவடம், வளை, முத்தாரம் முதலிய அணிகளைப் பெண்கள் அணிந்தனர் என்பதும் அறியப்பெறும்.

மாலை அணிதல்

ஆத்தி, வேம்பு முதலிய அடையாள மாலைகளை மூவேந்தர் சூடினர்; ஆடவர், கண்ணியைத் தலையிலும், தாரை மார்பிலும் அணிந்தனர். பெண்கள் தமக்குரிய மாலையை மார்பில் அணிந்தனர். மறவர் போர்க்குச் செல்லும்போது போர் நிலைக்கேற்ற வெட்சி, கரந்தை முதலிய பூக்களைச் சூடினர். பனந்தோட்டில் வேங்கைப் பூவை வைத்து மாலையாகத் தொடுத்து மலைந்தனர். பூக்களுடன் இலைகளை விரவிட்டிய படலை மாலைகளை அணிவதும் உண்டு. பூச்சூடுதல் இருபாலர்க்கும் பொதுவான வழக்கம். மலர் அணியாத நிலை வறுமையைச் சுட்டுவதாகக் கருதப்பட்டது. பூ விற்பவர்கள் 'பூவிலைப்பெண்டு' என அழைக்கப்பட்டனர். மகளிர் பூச்சூடும் சிறப்பினை உடன்பாட்டு முகத்தானும் எதிர் மறை முகத்தானும் புறநானூறு அறிவிக்கின்றது. கோவூர்க்கிழார் சோழன் நலங்கிள்ளியின் பல்வேறு நல்லியல்புகளைச் சுட்டும் போது அவற்றுள் ஒன்றாக அவன் விறலியர்க்குப் பூவிலையாகப் பாண்டியன் தலைநகர் மதுரையையும் தருகுவன் எனக்கூறிப்பர்,

ஒண்ணுதல் விறலியர் பூவிலை பெறுகென
மாட மதுரையும் தருகுவேன் (புறநானூறு, பா. 32: 4-5)

இவ்வரிகள் சோழமன்னனின் மறச்சிறப்பை உணர்த்துவதோடு உடன்பாட்டு முகத்தான் பூவையரின் மலர்சூடும் இன்றியமையாமையையும் காட்டுகின்றன.

நலங்கிள்ளி ஆவூரை முற்றுகையிட்டபோது அவ்வூர் அல்லலில் ஆழ்ந்து அலமந்தது. யானை நீரிற் படியாதும் கவழ உணவின்றியும் வாட்டமுற்றுக்கீழே புரண்டு இடிமுழுக்கம் பரப்பி பிளிரியது; குழந்தைகள் பாலின்றி அலறின; இல்லத்தாரெல்லாம் இன்னல் எய்தி அழுது புலம்பினர் என்று அவலக்காட்சிகளைக் காட்டி, அவற்றுள் ஒன்றாக மடந்தையர் பூச்சூட இயலாதவறிய நிலையையும் சுட்டுதல் கவர்ந்து நோக்கத்தகும்.

பூவில் வறுந்தலை முடிப்பவும், நீரின்
வினைபுனை நல்லில் இணைகூ உக்கேட்பவும்,
இன்னாது அம்ம! (புறநானூறு, பா. 44: 4-8)

இப்பாடற் பகுதி பூச்சூடலின் இன்றியமையாமையை எதிர்மறை முகத்தான் வலியுறுத்தலை காணலாம். குமரிப் பருவம் கடந்த மகளிரே கூந்தலில் மலர் சூடுதல் சங்ககால வழக்கம் என்பதனைத் தமிழ்க் காதல் நூலின் வழி அறிய முடிகிறது, பண்டைத் தமிழ்க் கன்னிமலர் சூடாள். மலர்ச்சூட்டின், ஒருவனை மணந்துகொள்ள உறுதி பூண்டாள் என்பது பொருள், நள்ளிரவில் தலைவனைக் காணவந்த தலைவி, மணம் கமழ் மலர் சூடி வந்தாள். இல்லம் திரும்பிய போது கூந்தலில் வேய்ந்த விரவு மலரை உதிர்த்து அதனைச் செம்மைப்படுத்திப் பழைய தோற்றத்தில் தன் இல்லத்தார்க்குக் காட்சியளித்தாள், தனக்கேற்பவும், தன் இல்லத்தார்க்கேற்பவும் நடிக்கும் தலைவியின் திறனை தலைவன் வியந்து பாராட்டுகின்றான்.

ஒப்பனை

மகளிர் ஆடை அணிகலன்களோடு பிற ஒப்பனையால் பொலிவதைச் சங்க இலக்கியங்கள் விரித்துரைக்கும். கழன் மணியினது கனியால் கூந்தலை வகுத்து ஒழுங்குபடுத்தினர். செம்பஞ்சுக் குழம்பினைப் பூசினர். நெற்றியில் பொட்டிட்டனர், கூந்தலில் எண்ணெய் தடவி, தகரச் சாந்து பூசி, நீராடி, கூந்தலின் ஈரம் போக விரலால் உணர்த்தி, நறுமணம் மிக்க அகிற்புகையூட்டினர்.

தண்நறுந் தகரம் கமழ மண்ணி,
ஈரம் புலர விரல் உளர்ப்பு அவிழா
காழகில் அம்புகை கொளீஇ (குறிஞ்சிப்பாட்டு, பா. 107-110)

மேகத்திடை ஒளிரும் மின்னல் போலக் கூந்தலிடையே மிளிரும் பொன் அணிகளைச் சூட்டினர், மகளிர் வனமுலையில் மலர்கிள்ளி அல்லியொடு அப்பித் தோளில் தொய்யில் வரித்துச் சீறடியில் செம்பஞ்சுக் குழம்பு ஊட்டினர். மலர் வேய்தல், மணப்பொடி பூசுதல், நறுஞ்சாந்து அணிதல் ஆகியவற்றால் அவர்கள் ‘ஓசனை கமழும் வாசமேனியர்’ ஆயினர் ஆகிய செய்திகள் காணப்படுகின்றன.

சங்க காலத்தில் கலைஞர்கள் (ஆடற் மகளிருக்கு) உய்பிக்கும் வகையில் பொன் பொருள் அல்லாமல். ஊர்கள், குலங்கள், ஏரிகள், பொன்னால் செய்யப்பட்ட தேங்காய்கள் இன்னும் பிற வகை அணிகலன்களும் கொடுக்கப்பட்டுள்ளன. (மகாலட்சுமி, கி. ப. 187)

என்று தனது ஆய்வுக்கட்டுரையில் ஆடற்மகளிருக்கு அணிகலன்கள் பரிசளிக்கப்பட்டுள்ளது தெளிவாகிறது. பொன்னால் செய்யப்பட்ட ஆபரணங்கள் ஆடற்மகளிருக்கு வழங்கப்பட்ட செய்தி சிலப்பதிகாரத்திலும் காணப்படுகிறது. மாதவி தனது நாட்டியத்திற்கான பரிசாக “தலைக்கோல் அரிவை” எனும் பட்டத்துடன் 1008 கழஞ்சு பொன்னையும் பரிசாகப் பெற்றாள்.

ஐங்குறுநூற்றில் அணிகள்

ஐங்குறுநூற்றுப் பாடல்களில் அணிகள் குறித்த செய்திகள் ஏராளமாகக் காணப்படுகின்றன. அவை வளை (20), இழை, தொடி (83), காஞ்சி (176), சங்கவளையல் (196),

மணிப்பூண் (மணிகள் பதித்த நகை – 232), மேகலை (306), பாண்டில் (பொன்னால் வட்டமாகச் செய்யப்பட்டதோர், அணிவகை. இதனைச் சுற்றி மணிகள் கோத்து மேகலையோடு அணிதல் பண்டை மரபு – 310, சிலம்பு, கழல் (389) போன்ற பாடல் வரிகளில் காணப்படுகின்றன. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான ஐங்குறுநூற்றில் வளையல், தொடி, மேகலை பாண்டில், சிலம்பு, தோள்அணி மற்றும் செவ்வையணி எனப் பல வகையான அணிகள் மகளிர் அணிந்தது தெரிகிறது. **"இறையோர் எல்வளை நெகிழ்பு ஓடும்" (ஐங்குறுநூறு, பா. 25)** தாமரையில் உள்ள முட்டையை வேழத்தின் பூ துடைக்கும் என்ற இது தலைவி பால் உள்ள தலைமகனைப் பரத்தையர் விலக்குவர் என்பது கருத்து. இதில் வரும் எல்வளை ஒளியுடைய வளையல் ஆகும். இது தலைவனின் பிரிவால் கழன்று ஓடுகிறது என்பதை தெளிவுப்படுத்துகிறது.

தலைவன் மார்பு

தலைவனின் மார்பு பல மகளிர் இழைகளை நெகிழச் செய்யும். பின்வரும் பாடலில் 'இழை' என்ற அணியிடம் பெறுகிறது.

வயலைச் செங்கொடி கள்வன் அறுக்கும்
கழனி ஊரன் மார்பு பலர்க்கு
இழை நெகிழ் செல்லல் ஆகும் அன்னாய் (ஐங்குறுநூறு, பா. 25)

தோழியே, "நம் அம்மே! இல்லத்துக்கு அண்மையில் நட்டு வளர்த்த முற்றாத பசுமையான காய்களையுடைய வயலையின் சிறந்த கொடியை, நண்டு தன் கூரிய நகத்தால் அறுக்கும் வயலையுடைய ஊரன் தலைவன். அத்தகையவனன் மார்பு ஒருவருக்கே அல்லாது மகளிர் பலர்க்கு அணிகளை நெகிழச் செய்கின்ற துன்பத்தைத் தருவதாகும்" என்று தலைவியைப் பார்த்து கூறினாள். அணிகள் கழன்று விடுவதற்குக் காரணமான துன்பத்தைச் செய்வதாகும். தலைவன் மார்பு மகளிர் அணிகளை நெகிழச் செய்யும் என இயையும் துன்பம். வயலையின் செங்கொடியின் பசிய காய் வருந்த அதன் கொடியை நண்டு அறுக்கும் என்பது மகனைப் பெற்று மனையில் இருக்கும் நம் நலத்தை மகன் வருந்தச் செய்கின்றான் என்ற பொருளை விளக்கியது. வீட்டின் அயலில் வளர்ந்த வயலைக் கொடியை அலவன் அறுக்கும் என்றதால் புறத்தே பரத்தையரைக் கூடிப் பின் அவரும் வருந்த அவரது தொடர்பை அறுத்து ஒழுகுகின்றான் எனவும் உரைப்பர்.

ஒண்தொடி

மணந்து கொண்ட அண்மைக் காலத்திலேயே தலைவனுக்குப் பரத்தமை ஒழுக்கம் உண்டாகிய போது அதை அறிந்த தலைவி அவனுடன் புலவி கொண்டு சொல்வதாக அமைந்த பாடலில் ஒண்தொடி எனும் வளையல் இடம் பெறுகிறது.

மணந்தனை யருளாய் ஆயினும் பைப்பயத்
தணந்தனை யாகி, உய்ம்மோ - நும்மூர்
ஒண்தொடி முன்கை ஆயமும்
தண்டுறை ஊரன் பண்டெனப் படற்கே (ஐங்குறுநூறு, பா. 83)

தலைவி தலைவனை நோக்கி, 'மகிழ்ந, எம்மை மணந்து கொண்ட நீ எமக்கு நின் அருளை நெடிது செய்யாது போனாலும் எம் ஊரில் உள்ள தொடியணிந்த முன் கையையுடைய பரத்தையர் பலரும் தன்துறையூரனாகிய நினக்குப் பெண்டு எனக் கூறப்படும் சிறப்புப் பெறுமாறு மெல்ல மெல்ல நீங்கி ஒழுகுவாய்" என்று கூறினாள். "தொண்டை நகரில் குளிர்ந்த புதிய மலரின் மணம் வீசும் தொடியையும், அழகியதாய் அகன்ற அல்குலையும், கொய்யப்பட்ட தளிர் போன்ற மேனியையும் உடையவளே! என் பண்பையும் உறக்கத்தையும் நின் தோழி கவர்ந்து கொண்டு என்னிடம் அவை இல்லாதவை ஆக்கினாள். ஆதலால் அவ்வாறு கொள்வதற்கு சங்குகால ஆபரணங்களே "நான் செய்த பிழைதான் என்ன?" என்று தலைவன் தோழியிடம் வினவினான்.

சங்கு வளையல்களின் சிறப்பு

சங்கினால் செய்யப்பட்ட 'வளை' மற்றும் 'தொடி' ஆகிய இரண்டு வகை அணிகலன்களைப் பற்றிய குறிப்புகள் சங்கப் பாடல்களில் காணப்படுகின்றன.

கோடர் எல்வளைக் கொழும்பல் கூந்தல்
ஆய்தொடி, மடவரல் வேண்டுதி ஆயின் -
தெண்கழி சேயிறாப் படூஉம்
தண்கடற் சேர்ப்ப! வரைந்தனை கொண்மோ (ஐங்குறுநூறு, பா. 196)

தோழி தலைவனிடம் பின்வருமாறு கூறினாள். "சங்கினை அறுத்துச் செய்த வளையல்களையும், அடர்த்தியான கூந்தலையும், நுணுக்கமான வேலைப்பாடுகள் கொண்ட தொடியினையும் உடைய இவளை நீ அடைய விரும்பினால், குளிர்ந்த கடல் நிலத் தலைவனே! இவளைத் திருமணம் செய்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை". 'வளை' என்பது சங்கால் செய்யப்படுவது; ஆனால் 'தொடி' என்பது சங்கு மற்றும் யானைத் தந்தம் ஆகிய இரண்டாலும் செய்யப்படக்கூடியது என்பதை இந்தப் பாடல் விளக்குகிறது. **"வரிவளை, கோல்வளை எனப் பெயர் பெற்ற வளைகள், சூடகம் போன்ற அணிகலன்கள் கைகளை அலங்கரித்தன" (சத்தியா, மு. ப. 524)** என்று சத்தியா அவர்கள் தனது ஆய்வில் கைவளைகளின் வகைப் பற்றிக் கூறியுள்ளார். தொடியும், வளையும் கைகளை அலங்கரித்த அணிகலன்கள் என உறுதியாகிறது.

மணிகள் பதித்த அணிகலன்கள்

மணிகள் பதிக்கப்பட்ட ஆபரணங்களை அக்காலப் பெண்கள் விரும்பி அணிந்தனர்.

போதார் கூந்தல் இயலணி அழுங்க
ஏதிலாளனை நீ பிரிந்ததற்கே
அழலவிர் மணிப் பூண் அனையப்
பெயலாலானா என் கண்ணே தெய்யோ (குறுந்தொகை, பா. 232)

இதில் இடம்பெறும் 'மணிப்பூண்' என்ற சொல்லாடல், மணிகள் கோர்க்கப்பட்ட அணிகலன்களின் பயன்பாட்டை உறுதிப்படுத்துகிறது.

மேகலை அணிதல்

தலைவியைப் பிரிந்து செல்லத் துணியும் தலைவனிடம், தலைவியின் பிரிவாற்றாமையைத் தோழி எடுத்துரைக்கும் பாடலிலும் மேகலை போன்ற அணிகலன்கள் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன.

பல்காழ் அல்குல் அவ்வரி நாடக்
குழலினும் இனைகுவள் பெரிதே
விழவொலி கூந்தல் மா அயோளே (குறுந்தொகை, பா. 306)

தோழியே 'வெல்லும் போரை உடைய தலைவனான நீ அகன்ற பாலையைக் கடந்து சென்றதால் பல மணிகள் பொருந்திய மேகலை அணிந்த அல்குலிடத்து அழகிய வரிகள் வாட்டம் அடைய நினது பிரிவாற்றாமையால் மண விழாவைப் போல நல்ல மணம் கமழும் கூந்தலையும் மாமை நிறத்தையும் கொண்ட இவள் குழல் ஒலிப்பதைப் போன்று பெரிதும் அழுவாள்' என்று கூறிச் செல்வதைத் தவிர்த்தாள். இங்கு வரும் கால் மணிகள் முத்து வடமாகும். அவ்வரி அழகிய வரி. வளவிய மகளிரின் வயிற்றிலும் குறங்கிலும் பொருந்தி அழகு செய்யும் வரிகள். இன்பம் நுகரும் காலத்தில் எழில் செய்யும் இவை துன்பகாலத்தில் மேனி வாடித் தோல் சுருங்கும்போது அவ்வரி கள் மறைந்துவிடும்.

பாண்டில் அணிதல்

பிரிந்து செல்ல இருக்கும் தலைவனுக்குத் தோழி நீ எண்ணியதை முடித்தாய் ஆயினும் இவள் அழகு மீட்டற்கு அரியதாகிவிடும் எனக் கூறிச் செலவழுங்குவித்த பாடலில் பாண்டில் அணியும் வழக்கம் புலப்படுகிறது.

போலம்பசும் பாண்டில் காசுநிரை அல்குல்
இலங்குவளை மென்தோள், இழை (ஐங்குறுநூறு, பா. 310)

தோழி தலைவனை நோக்கி, "தலைவ, பொன்னாற் செய்யப்பட்ட பசுமையான பாண்டிலைச் சுற்றி மணிகள் கோத்து அணிந்த அல்குலையும் விளங்கும் வளையலையும் மென்மையான தோளையும் உடைய இவள் அந்த அணிகள் நின்ற நிலையினின்று கழன்று நீங்க, நினது பிரிவால் இவளிடத்தினின்று நீங்கிக் கெடும் சிறு நெற்றியின் அழகு பெறுவதற்கு அரிது" என்று சொன்னாள். 'பாண்டில்' என்பது பொன்னால் (தங்கத்தால்) செய்யப்பட்ட ஒரு வகை வட்டமான அணிகலன் ஆகும். இந்த அணியைச் சுற்றி மணிகளைக் கோர்த்து, மேகலை என்ற இடுப்பு அணியுடன் சேர்த்து அணிவது அக்கால வழக்கம். தங்கத்தால் செய்யப்பட்ட பசுமையான வட்டக் காசுகளைக் கொண்டிருப்பதால், இதனை 'பாண்டில் வட்டம்' என்றும் அழைப்பார்கள். தலைவியின் உடல் மெலிவதைக் கண்டு வருந்திய தலைவன் அவளைப் பிரிந்து சென்றபோது, தோழி கூறிய பாடலில் இந்த அணிகலன் பற்றிய குறிப்பு வருகிறது. உயர்ந்த மலைப்பக்கத்தில் புற்கள் நிறைந்த அடிப்பகுதியைக் கொண்ட ஓமை மரங்கள் அடர்ந்த காடு என்றும், அங்கு புலிகள் நடமாட்டம் அதிகம் இருக்கும், அத்தகைய காட்டிற்குள் தலைவன் சென்றுவிட்டான். தலைவன் பிரிந்து சென்றதால், தேரின் தட்டைப் போல அகன்ற அல்குலில் அணிந்திருந்த பொன்னாலான பாண்டில் நெகிழ்ந்து (கழன்று) விழுகிறது. தலைவியின் உடலில் இருந்த அழகிய வரிகள் வாடிப் போயின. இத்தகைய துயரமான பிரிவை உன்னால் தாங்கிக் கொள்ள முடியுமா? என்று தோழி வினவுகிறாள்.

சிலம்பு மற்றும் கழல் அணிகள்

தலைவியைத் தேடிச் சென்ற செவிலித்தாய், வழியில் செல்வோரிடம் தன் மகளைப் பற்றி விசாரித்தாள். அப்போது அவர்கள், ஒரு தலைவனுடன் தலைவி சென்றதைக் குறிப்பிட்டனர். அந்தப் பாடலில் சிலம்பு மற்றும் கழல் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. சிலம்பு என்பது தலைவியின் கால்களில் அணிந்திருந்த அணிகலன். கழல், வலிமையான தாளையும் (பாதத்தையும்), கரிய தாடியையும் உடைய தலைவன் அணிந்திருந்த வீரக்கழலாகும். தன் கண் பாவை போன்ற மகளானவள், கழல் அணிந்த காளையோடு மெல்ல நடந்து சென்றதாக அவர்கள் கூறுகின்றனர். பெண்கள் 'செவ்வையான அணி' என்ற ஆபரணத்தை அணிந்திருந்த செய்தி பின்வரும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரும்பல் கூந்தல் திருந்திழை அரிவை
திதலை மாமை தேயப்
பசலை பாயப் பிரிவு தெய்யோ (ஐங்குறுநூறு, பா. 231)

இதில் வரும் திருந்திழை என்பதற்குச் செவ்வையான அணி என்று பொருளாகும்.

ஐவகை கூந்தல் அலங்காரம்

மகளிர் கூந்தலை நீளமாக வளர்த்தனர். அதனை அவர் நெய் பூசி அழகாக வாரிப் பின்னலாக, கொண்டையாக முடிப்பர். ஐந்து விதமாகக் கூந்தலை அமைக்கும் வழக்கம் அக்காலத்தில் சிறந்திருந்தது என்ற சொல்லாட்சி இதற்குச் சான்றாகும். அசையும் இயல்பினையுடைய ஐம்பால் மயிரினையுடைய உப்பு வணிகத்தியர் என்று சிறுபாணாற்றுப்படை கூறும். முதுமகளிர் சங்கின் நிறத்தையுடைய வாரிவிடப்பட்ட தம் கூந்தலை முடித்துக் கட்டியிருப்பர்.

இருங்கடல் வான்கோடு புரைய வாருற்றுப்
பெரும்பின் னிட்ட வானரைக் கூந்தலர் (மதுரைக்காஞ்சி, வரி., 407 – 408)

சிறுபாணாற்றுப்படை வாழைப்பூவெனப் பொலிந்த ஓதியெனப்படும். இளமகளிர் பெரும்பாலும் கூந்தலைக் கீழே தொங்க விட்டனர். தோடியை அணிந்த மகளிர் சிறு புறத்தின் மேலே தொங்கவிட்டிருக்கும் பின்னல், பிடியினதுகை போன்றிருக்குமெனச்

சிறுபாணாற்றுப்படையிலிருந்து அறியலாம். சிறுபுறத்தை மறைக்கும் கூந்தலை முல்லைப் பாட்டுக் குறிக்கும். விரித்து விடப்படும் பெண்களின் கூந்தல் அறல் மணலுக்கு உவமிக்கப் பெறுவது வழக்கம். தலைமகளின் வண்டுகள் தாவும் கூந்தல் வளப்பம் பொருந்திய நீர்த்துறைக்கண் உள்ள அறல் நீண்டு படிந்தாற் போன்ற நல்ல நெறிப்பை உடையதெனத் தலைமகன் பாராட்டுவான்.

யானையந் துறைவோள் தேம்பாய் கூந்தல்
வளங்கொழு சோழ ருறத்தைப் பெருந்துறை
நுண்மண லறல்வார்ந்து அன்ன (சிறுபாணாற்றுப்படை, வரி. 261 - 264)

சில நூல்களில் விரிக்கப்பெற்ற மயிலின் இறகுக்குக் கூந்தல் உவமிக்கப்படும். மெல்லிய தோளினையும் துகில் சூழ்ந்த அல்குலினையும் அசைந்த இயல்பினையுமுடைய மகளிர் அகிற் புகை உண்ணும்படியாக விரிந்த அலகையுடைய மெல்லிய கூந்தலை நீலமணிபோலும் மயிலினுடைய விரிந்த தோகை ஒக்கும் எனச் சிறுபாணாற்றுப்படை பகரும். சிறந்த ஆரவாரிக்கும் மயிலினது மெல்லிய கூந்தலைப் பற்றிக் குறுந்தொகையும் கூறும்.

கலிமயிற் கலாவத் தன்ன விவள்
ஒலிமென் கூந்தல் (குறுந்தொகை, பா.225)

நீராடியதன் பின்னர் மகளிர் கூந்தலுக்கு அகிற்புகை ஊட்டுவர். மணம் வீசுகின்ற அகிற்புகையும் சந்தனப்புகையும் நாறும் கருமணலைப் போன்ற கரிய கூந்தல் எனக் குறுந்தொகையும், சந்தனத்தின் நறிய மணத்தை வீசும் நன்னெடுங் கூந்தல் என மதுரைக்காஞ்சியும் கூறும். அடும்பு என்று நற்றிணை கூறுகிறது. மல்லிகை முதலிய பூக்களை இவர்கள் அணிவர். தண்மையும் அழகும் மணமும் மிக்க மலர்களாலான மாலைகளை இவர் அணிவர். மகளிர் உச்சியில் விளங்கும் மெல்லிய கருமையான கொண்டைகளைச் சுற்றி அழகிய மாலைகள் கட்டப்பெறுவனவெனக் குறிஞ்சிப்பாட்டுக் கூறும்.

கலிமயிற் கலாவத் தன்ன விவள்
ஒலிமென் கூந்தல் (குறுந்தொகை, பா. 225)

நெய் பூசப்பெற்ற பாடல் மகளிரின் கூந்தலை தோக விழும் மழைத்துளிக்குப் புலவர் உவமிப்பர். கூந்தலில் உள்ள எண்ணெய்ப்பசை சிக்கு முதலியன போகும் பொருட்டு களிமண்ணைத் தேய்த்துக் கொண்டு மகளிராடும் வழக்கு அக்காலத்தில் இருந்தது. இதனைச் சிற்றூர்களில் இன்றும் காணலாம். **"கூழைக் கெருமண் கொணர்கஞ் சேறும்" (குறுந்தொகை, பா. 113)** பெண்கள் தமது கூந்தலுக்கு இட்டு பிசைவதற்குக் களிமண்ணைக் கொண்டு வரும் பொருட்டுப் பொழிலுக்குச் செல்வர் எனக் குறுந்தொகையிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

வாசனைப் பொருட்கள்

பெண்கள் தம்மை அழகுபடுத்திக் கொள்வதிலும் சிறந்து விளங்கினர். அவர் மணம் மிக்க வாசனைத் திரவியங்களையும் மற்றும் அழகு பண்ணற்குரிய பொருட்களையும் பயன்படுத்தினர். மகளிர் வழங்கிய புணுகு நாறும் நாற்றம் தெருக்களெல்லாம் மணக்கும்.

பூந்தோடி மகளிர்
மணங்கமழ் நாற்றந் தெருவுடன் கமழ (மதுரைக்காஞ்சி, பா. 446 - 447)

உடம்பின் மேற்பாகத்தில் சந்தனம் குங்குமம் முதலியவற்றைக் குழம்பாகப் பூசி, அதன் மேலே இலை பூ முதலிய சித்திரங்களை வரைவர். இச்சித்திரம் தொய்யில் எனப்படும்.

இரந்தோ ருளர்கோறேழி திருந்திழைத்தத்
தொய்யில் வனமுலை (நற்றிணை, பா. 225)

இச்சித்திரங்களுக்குப் பதிலாக வேங்கைத் தாது பரப்புவதுமுண்டு. தோற்றம் செய்து எழுந்த தலைமகளின் அழகிய முலை நிறம் பெறத் தலைமகன் அதில் தொய்யில் எழுதுவான். தொய்யில் எழுதிய மகளிரின் முலை சுணங்கு தோற்றியிருப்பதை மதுரைக்காஞ்சி கூறும்.

திண்ணிய வயிரம் பொருந்திய நறிய சந்தனத்தை அரைத்த பொலிவு பெற்ற நிறத்தைக் கொண்ட குழம்பைக் கொங்கினது குவிந்த அரும்பையொத்த இளமுலையிலே மருதப்பூவை அப்பினாற் போல அப்புவர். அப்பி, அவ்வீரம் உலர்வதற்குமுன் விரிந்த மலரையுடைய வேங்கைப் பூவினது தண்ணிய தாதையும் அதன்மேல் அப்புவர்.

அழகியல் மற்றும் ஒப்பனை

சங்க கால மகளிர் இயற்கையோடு இயைந்த அழகைப் போற்றினர். குறிப்பாக, மணம் வீசும் மலர்கள் மற்றும் சந்தனம் போன்ற இயற்கைச் சாந்துகளைக் கொண்டு உடலைப் பொலிவுபடுத்திக் கொண்டனர்.

தேங்கமழ் மருதினர் கடுப்பக் கோங்கின்
குவிமுகி ழிளமுலைக்கோட்டி விரிமலர்
வேங்கை நுண்டா தப்பிக் காண்வர (திருமுருகாற்றுப்படை, பா. 32 - 36)

பெண்கள் தங்கள் மேனியில் பொரி போன்ற அழகிய பூக்களையுடைய நன்கினது தளிர்களை அப்பி அழகுபடுத்திக் கொண்டனர். இதனைப் பின்வரும் அடி விளக்குகிறது. மேலும், அக்காலத்தில் கரும்பினை வில்லாகக் கொண்ட காமனின் உருவத்தைக் குங்குமக் குழம்பால் தோள்களில் எழுதும் பழக்கம் நிலவியது. பருத்த தோள்களில் இத்தகைய ஓவியங்கள் வரையப்பட்டதை குறுந்தொகை குறிப்பிடுகிறது.

பெண்ணின் ஏழு வகையான பருவங்களைப் பிரிப்பதைப் போல, நகை, அரும்பு, முகை, போது, மலர், அலர், வீ (தமிழர் வாழ்வில் தாவரம்) என்று மலர்களை ஏழு வகையாகப் பிரிப்பர் என்று ச.வே.சுப்ரமணியன் கூறுகிறார். (முனைவர் மதன்ராஜ், இரா, ப. 443)

என்று மதன்ராஜ் அவர்கள் தனது "சங்க இலக்கியத்தில் மலர்கள்" என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரையில் பதிவிட்டுள்ளார்.

பொன் அணிகலன்கள்

பண்டைய தமிழ்ச் சமூகத்தில் பொன், வெள்ளி, சங்கு மற்றும் முத்து ஆகியவற்றால் செய்யப்பட்ட நுணுக்கமான அணிகலன்களைப் பெண்கள் அணிந்து மகிழ்ந்தனர். விழாக் காலங்களில் ஒலிக்கும் மணிகள் கோர்க்கப்பட்ட சிலம்புகளும், சித்திர வேலைப்பாடுகள் கொண்ட இழைத்த பொன் அணிகளும் அவர்களின் செல்வச் செழிப்பைக் காட்டின.

தெள்ளி பொற்சிலம் பொலிப்ப வொள்ளெழற்
றாவற விளங்கிய வாய்ப்பொ னவிரியிழை
அணங்குவீழ் வன்ன பூந்தொடி மகளிர் (மதுரைக்காஞ்சி, பா. 443 - 446)

அரத்தினால் அறுத்துச் செய்யப்பட்ட வளையல்கள் பெண்களின் கைகளை அலங்கரித்தன. மகளிரின் முகத்திற்கு மேலும் அழகு சேர்க்கும் வகையில் காதணிகள் விளங்கின. குறிப்பாக ஆயர்மகளிர் அணிந்திருந்த அசையும் குழைகளையும் பெரும்பாணாற்றுப்படை விவரிக்கிறது.

முடிவுரை

சங்க இலக்கியங்கள் காட்டும் ஆடை மற்றும் அணிகலன்கள் வெறும் ஆடம்பரப் பொருட்கள் அல்ல; அவை அக்கால மக்களின் தொழில்நுட்ப அறிவு, பொருளாதாரச் செழிப்பு மற்றும் அழகியல் உணர்வின் வெளிப்பாடுகளாகும். பருத்தி விளைச்சல் முதல் வண்ணம் ஏற்றும் கலை வரை அவர்கள் பெற்றிருந்த தேர்ச்சி வியக்கத்தக்கது. அதேபோல், பல அடுக்கு மாடங்களைக் கொண்ட கட்டிடங்களும், முறையான நீர் மேலாண்மைத் திட்டங்களும் தமிழர்களின் பொறியியல் அறிவிற்குச் சான்றாகும். நவீன காலத்தில் வீட்டுவசதி மற்றும் கட்டுமானச் சவால்களை எதிர்கொள்ளும் நமக்கு, பழந்தமிழர்களின் இத்தகைய திட்டமிட்ட வாழ்வியல் முறையும் தொலைநோக்குச் சிந்தனையும் ஒரு சிறந்த வழிகாட்டியாக அமைகின்றன.

குறிப்புகள்

[1] அமலா கார்த்திகா, க. "புறநானூறு காட்டும் வாழ்வியல் விழுமியங்கள்." *தமிழ்மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 6, இதழ் 2, சூன் 2024.
[2] இராகவையங்கார், இரா., தொகு. *பத்துப்பாட்டு (மூலமும் உரையும்)*. ஸ்ரீ செண்பகா பதிப்பகம், 2021.
[3] இராசமாணிக்கனார், மா. *தமிழ்மொழி இலக்கிய வரலாறு*. கண்ணம்மாள் பதிப்பகம், 1996.
[4] உ.வே.சா. *பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியாருரையும்*. உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், 2012.
[5] சத்தியா, மு. "சோழர்கால அணிகலன்கள்-ஓர் ஆய்வு." *பன்முகத் துறையிலான மேம்பட்ட அறிவியல் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத்திற்கான பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 3, மலர் 1, அக்டோபர் 2023, ப. 524.
[6] சதாசிவ ஐயர், தி., தொகு. *ஐங்குறுநூறு மூலமும் உரையும்*. உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், வெளியீடு, 1999.
[7] சுசீலா, கா. "சங்கத் தொகை நூல்களில் உடைக் கலைச் சொற்கள்." *பிரணவ் தமிழியல் ஆய்விதழ்*, தொகுதி 2, இதழ் 1, பிப்ரவரி 2023, ப. 389.
[8] சோமசுந்தரனார், பொ.வே. *பத்துப்பாட்டு மூலமும் உரையும்*. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 2008.
[9] தட்சிணாமூர்த்தி, அ. *தமிழர் நாகரிகமும் பண்பாடும்*. வெற்றி செல்வி வெளியீட்டகம், 1973.
[10] நாராயணசாமி ஐயர், அ. *நற்றிணை நானூறு*. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 2001.
[11] புலியூர் கேசிகன். *எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும்*. ஸ்ரீ செண்பகா பதிப்பகம், 2021.
[12] மதன்ராஜ், இரா. "சங்க இலக்கியத்தில் மலர்கள்." *தமிழ்மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 8, இதழ் 2, ஜனவரி 2026, ப. 443.
[13] மயிலை சீனி வேங்கடசாமி. *தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்*. சாந்தி நூலகம், 2014.
[14] ஜெகநாதன், இரா. *குறுந்தொகை ஆய்வுக் கோவை (3) தொகுதிகள்*. சங்க இலக்கிய ஆய்வு மையம், 2006.
[15] மகாலட்சுமி, கி. "சங்ககால நாடக மகளிர் (ஆடற்மகளிர்)." *சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்*, மலர் 2, இதழ் 4, ஏப்ரல் 2018, ப. 187.
[16] மணிகண்டன். "புறநானூறு கூறும் வாழ்வியல் சிந்தனைகள்." *இனியவை கற்றல் பன்னாட்டு தமிழியல் மின்னிதழ்*, தொகுதி 2, நவம்பர் 2022.
[17] பிரேமலதா, ஜ. "பிள்ளைத்தமிழ் இலக்கியங்களில் ஆடை அணிகலன்கள்." *களஞ்சியம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்*, தொகுதி 3, இதழ் 4, நவம்பர் 2024, ப. 2.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை.
கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை.
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 5, Issue - 2, May 2026 E-ISSN: 2583-0481
MLA, DOAJ Indexed

Habitat and Economic Conditions of the Tribal Communities of Tamil Nadu

A. Deepika, Research Scholar of Tamil, Reg. No.: 20PHTMF008, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0003-0444-7996
Dr. C. Priyadharshini, Associate Professor of Tamil & Head, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0009-1121-5502
DOI: 10.5281/zenodo.20474064
Received: 31 December 2025; **Revised:** 14 February 2026; **Accepted:** 19 March 2026; **Available Online:** 31 May 2026

Abstract

Contemporary humanity is divided into diverse races and communities, among which indigenous tribal groups are regarded as some of the most ancient populations. For centuries, these communities have inhabited traditional ecological regions such as mountains and forests, developing cultures that remain deeply interconnected with nature. Their social life and cultural practices are closely associated with the natural environment in which they reside. Tribal communities possess distinctive systems of worship, customs, rituals, traditional medicine, and indigenous agricultural practices. Their livelihood patterns are largely forest-dependent, relying on the collection of food resources, fuel, construction materials, and medicinal herbs from woodland ecosystems. Hence, within the context of Tamil Nadu, this study explores the habitat, distribution, livelihood patterns, and economic conditions of tribal communities.

Keywords: Tribal, Nilgiris, Forest Produce, Western Ghats, Eastern Ghats.

References

[1] Ashvathi Pooja, Kau. "Inavaraviyal Nokkil Kumarivaazh Pazhankudi Kaani Ina Makkalin Varalaatru Suvadugal." *Sengaanthal*, Malar 5, Idhal 1, November 2025.
[2] Iravikumar, Ku. "Inavaraiviyal Nokkil Pazhankudigal Matrum Nadodigal." *Potramarai Aayvidhal*, Idhal 7, May 2025.
[3] Kanthaiya Pillai, Na. Si. *Thamil-Thamil Agaradhi*. Aasiriyar Noorpathippu Kazhagam, 2003.
[4] Kalaichollakka Kuzhu. *Kalaichol Peragaradhi*. Thamil Inaiya Kalvi Kazhagam, 2009.
[5] Sandhiya Nadarajan. *Madhurai Thamil Peragaradhi*. Sandhiya Pathippagam, 2001.
[6] Sa. Ve. Subramaniyan. *Silappadhigara Solladaivu*. Thamil Pathippagam, 1972.
[7] Subramaniyan, Sa. Ve. *Samuga Viyal Manida Viyal Kalaichol Vilakka Agaradhi*. Thamil Palkalaik Kazhagam, 2003.
[8] Subbulakshmi, Mu. Pe. "Inavaraviyal Nokkil Kazhudhai Paadhai." *Thamil Mozhi Matrum Ilakkiya Annaattu Aayvidhal*, Thogudhi 8, Idhal 2, January 2026.
[9] Deepa, A. "Pazhankudiyinar Panpaadu Matrum Thozhil Muraigal." *Sarvesa Thamil Aayvidhal*, Thogudhi 7, Malar 3, January 2022, doi:10.34256/irjt22361.
[10] Thurai Murugan, Se. "Tholkudiyum Thol Thamilum." *Padhivugal Minnidhal*, ISSN 1481-2991.
[11] Bhagath Singh. *Solagar Vaazhvum Panpaadum*. Adaiyalam Pathippagam, 2019.
[12] Bakthavatchala Bharathi. *Thamizhaga Tholkudigal*. Adaiyalam Pathippagam, 2017.
[13] Bakthavatchala Bharathi. *Thamizhaga Pazhankudigal*. Adaiyalam Pathippagam, 2013.

[14] Puliyur Kesigan, Thelivuraiyaasiriyar. *Thirukkural Parimelazhagar Urai Sempathippu*. Poompukar Pathippagam, 2018.
[15] Maheswaran, Sa. *Neelagiri Kurumbar Pazhankudi Oviya Marapu*. Indhiya Pazhankudi Makkal Panpaattu Maiyam, Neelagiri, 2018.
[16] Vengadasami Naattar, Naa. Mu. *Silappadhigaram Moolamum Uraiyum*. Sharadha Pathippagam, 2008.

Thagavalalargal (Witness)

[17] Rajamma. Personal interview. Masinagudi Koodalur, age 62.
[18] Madhumitha. Personal interview. Kunjappanai Kothagiri, age 18.

Author Contribution Statement: NIL.
Author Acknowledgement: Nil
Author Declaration: Nil

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.

செங்காந்தள்

அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்

மலர் - 5, இதழ் - 2, வைகாசி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481

எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

தமிழகப் பழங்குடியின மக்களின் வாழிடச் சூழலும் பொருளாதார நிலையும்

ஆ. தீபிகா, முனைவர்பட்ட ஆய்வாளர், பதிவுஎண்: 20PHTMF008, தமிழ்த்துறை,
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0003-0444-7996
முனைவர் ச. பிரியதர்ஷினி, இணைப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், தமிழ்த்துறை,
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்,தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0009-1121-5502

ஆய்வுச் சுருக்கம்

மனித குலம் இன்று பல்வேறு இனங்களாகவும் சமூகங்களாகவும் வேறுபட்டுக் காணப்படுகிறது. இதில் மிகத் தொன்மையானவர்களாகக் கருதப்படுபவர்கள் பழங்குடியின மக்கள். பல நூற்றாண்டுகளாக மலை வனம் உள்ளிட்ட இயற்கைச் சூழல் நிரம்பிய இடங்களில் தமது மரபார்ந்த வாழ்விடங்களைக் கொண்டு இயற்கையின் வழித்தோன்றல்களாக இயற்கையிலிருந்து பிரிக்க இயலாத பண்பாட்டைக் கொண்ட சமூகத்தினராய் பழங்குடியினர் திகழ்கின்றனர். பழங்குடியினர் தங்களுக்கேயுரிய வழிப்பாட்டு முறைகளையும், மரபுகளையும், சடங்குகளையும், மருத்துவ முறைகளையும் மற்றும் வேளாண் தொழில்நுட்பங்களையும் தனித்துவமாக பெற்றுள்ளனர். அவர்களின் வாழ்க்கை முறையானது வனங்களையே சார்ந்துள்ளது. காடுகளிலிருந்து உணவு, எரிபொருள், கட்டுமானப் பொருட்கள் மற்றும் மூலிகைகள் முதலானவற்றை சேகரித்து தங்கள் வாழ்வாதாரத்தை ஈட்டுகின்றனர். தமிழகச் சூழலில் பழங்குடியின மக்களின் வாழிடச் சூழல், பரப்பு, வாழ்வாதாரம் மற்றும் பொருளாதார நிலை ஆகியவை குறித்து இவ்வாய்வு அமைகின்றது.

குறிப்புச்சொற்கள்: தமிழகப் பழங்குடியினர், மக்களின் வாழிவிடம், சூழல், பொருளாதாரம்.

முன்னுரை

மனித இனத்தில் தொன்மையான சமூகங்களாய் வாழ்ந்து வருபவர்கள் பழங்குடி மக்கள் ஆவர். மனித சமுதாயத்தின் தொன்மையை ஆராயும் போது, பழங்குடியின மக்கள் தங்களுக்கெனத் தனி பண்பாடும், கலாச்சாரமும் கொண்டு தனித்தனி இனக்குழுக்களாக வாழ்கின்றனர். பழங்குடி இன மக்கள் தங்களுக்கெனத் தனித்த குணாதிசயங்கள், சமூக மதிப்புகள், கலாச்சாரக் கட்டமைப்புகள், வாழும் முறைகள் ஆகியவைகளால் ஏனைய மக்களிடமிருந்து வேறுபட்டு நிற்கின்றனர். பல்வேறு நாடுகளில் வாழும் பழங்குடி மக்களின் வாழ்வியலில் ஒத்தப் பண்புக் கூறுகள் காணப்படினும் அந்நிலப்பரப்புகளுக்குரிய தனித்துவமானப் பண்புக் கூறுகளைப் பிரித்தரிய பழங்குடியின மக்கள் மீதான ஆய்வுகள் துணை செய்கின்றன. மானிடவியல் ஆய்வுகளில் பழங்குடியின மக்கள் மீதான ஆய்வுகள் காலத்தின் தேவையாக உள்ளது. அவ்வகையில் இந்த ஆய்வு தமிழகப் பழங்குடியின மக்களின் வாழிடச் சூழல், பொருளாதார நிலை ஆகியவை குறித்து எடுத்தியம்புகின்றது.

பழங்குடி என்னும் சொல்லின் வரையறை

மனித இனம், பரிணாம வளர்ச்சியின் இறுதி நிலையை அடைந்துள்ளது. தொடர் மாற்றங்களை ஏற்று வாழும் தற்காலச் சமூகத்திலும், தங்களின் தொன்மைக் கூறுகளை

மாறாமல் அப்படியே தக்கவைத்துக் கொண்டு வாழ்பவர்களே பழங்குடி மக்கள் ஆவர். இத்தகைய தொன்மைச் சமூகங்களை அடையாளம் கண்டு ஆராய்வதும், அவற்றைப் பதிவு செய்வதும் மனிதகுல வரலாற்றின் படிமலர்ச்சியையும், கால மாற்றங்களையும் தெளிவாக அறிவதற்குத் துணைபுரிகின்றன. அவ்வகையில், 'பழங்குடி' என்னும் சொல் சொல்லாராய்ச்சியிலும் வரலாற்றுப் பதிவிலும் மிக முக்கியத்துவம் பெறுகிறது. பழங்குடி என்னும் சொல்லிற்கு **“தொன்மரபு, ஆதிகாலத்தேரிய குடி, பழமையான குடி” (மதுரைத் தமிழ்ப் பேரகராதி, ப. 112)** என்று மதுரைத் தமிழ் பேரகராதி பொருள் தருகிறது. ஒரு நிலத்தின் பூர்வகுடிகளை அல்லது வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய காலத்திலிருந்தே தங்களின் மரபு மாறாமல் வாழ்ந்து வரும் தொன்மையான பாரம்பரியம் கொண்ட மனித சமூகத்தைக் குறிக்கிறது. பழங்குடி என்னும் சொல்லிற்குத், ‘**தொன்முதலியர்’ (கலைச்சொல் பேரகராதி, ப. 215**) என்று கலைச்சொல் பேரகராதி விளக்கம் தருகிறது. மனித நாகரிகம் தோன்றுவதற்கும் முந்தைய ஆதிகாலத்து குடிகளைக் இச்சொல் குறிக்கிறது. இந்தியச் சூழலில், 'பழங்குடிகள்' என்கிற பொதுவான அடையாளச் சொல் தனித்துவமான பண்பாட்டு வாழ்க்கை முறைகளையும், பல்வேறு பெயர்களைக் கொண்ட மொழிகளையும் கொண்டு, சவாலான நிலப்பரப்புகளில் வாழும் ஒட்டுமொத்தக் குழுக்களையும் குறிப்பதாகக் கொள்ளலாம். இந்தியாவின் பன்முகத்தன்மைக்கு இவர்களது வாழ்வியலே மிக முக்கியச் சான்றாகும். பண்டைய இலக்கியமான சிலப்பதிகாரத்திலும் பழங்குடி என்னும் சொல் இடம்பெற்றுள்ளது. **“பதியெழு அறியாப் பழங்குடி கெழீஇய” (சிலம்பு., பா. 15)** என்று குறிப்பிடுகின்றது. பிழைப்பு தேடிப் புலம் பெயரும் தேவையற்ற பொருளாதாரத் தன்னிறைவும், தொன்மை மாறா மரபும் கொண்ட மூத்த குடிகள் என்று பொருள்படும். நாம் 'பழங்குடி' (Tribal) என்ற சொல்லைக் காடுகளிலும் மலைகளிலும் வாழும் மக்களைக் குறிக்கப் பயன்படுத்துகிறோம். ஆனால், சிலப்பதிகாரத்தில் இச்சொல் ஒரு நிலத்தில் பல தலைமுறைகளாகத் தொடர்ந்து வாழ்ந்து வரும் பூர்வகுடிகள் (Indigenous/Ancient inhabitants) என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

சிலப்பதிகார அகராதி பழங்குடி என்னும் சொல்லிற்குத், **“தொன்றுதொட்டு வாழ்ந்து வருகின்ற மக்கட் தொகுப்பு” (சிலப்பதிகாரச் சொல்லடைவு, ப. 115**) என்று விளக்கம் அளிக்கிறது. தங்கள் சொந்த ஊரை விட்டு அல்லது தாய்நாட்டை விட்டு வேறு இடங்களுக்குப் பெயர்ந்து செல்லாத, தொன்மையான பாரம்பரியமிக்க குடிமக்கள் என்பது இதன் பொருளாகும். பழங்குடி என்பதற்கு, **“பழமையான குடி வழிவழியாக நிலைப்பெற்று வரும் குடி” (தமிழ்-தமிழ் அகராதி, ப. 212**) என்று தமிழ் தமிழ் அகராதி குறிப்பிடுகின்றது. தங்களின் தொன்மையான கலை, கலாச்சாரம், மொழி மற்றும் சமூகக் கட்டமைப்பை மாற்றாமல் அப்படியே தக்க வைத்துக் கொண்டு வாழ்பவர்களே பழங்குடிகள் என்று அழைக்கப்படுகிறார்கள். TRIBE எனும் ஆங்கில சொல்லின் மொழிபெயர்ப்பாகப் பழங்குடி என்னும் சொல் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

> **பழங்குடி என்பர் ஒரு தனித்த கட்டுப்கோப்பான சமூகம் என்றும் அது தனித்த மொழி பண்பாட்டு வாழிடம் வாழ்க்கை முறை சமயம் போன்றவற்றை கொண்ட ஒரு குடி என்றும் கருத முடியும். (தமிழகப் பழங்குடிகள், ப. 51)**

நவீன நாகரிகத்தின் வரவுகளால் தன் அடையாளம் சிதையாமல், தனக்கேயுரிய நிலத்தில், தனித்த மொழியும், இயற்கையோடு இயைந்த பண்பாட்டு விழுமியங்களும் கொண்டு, தமக்குள் வகுத்துக் கொண்ட அறக்கட்டுப்பாடுகளோடு வாழும் இனக்குழுவின் தூய வடிவமே பழங்குடி என்று தெளியலாம். பழங்குடி என்பதற்குத், **தொன்றுதொட்டு வருகின்ற குடியின்கட் பிறந்தார் (திருக்குறள் பரிமேலழகர் உரை, ப. 102)** என்கிறார். பல தலைமுறைகளாக நற்பண்புகளுடனும் ஒழுக்கத்துடனும் வாழ்ந்து வருகின்ற பாரம்பரியமிக்க உயர்குடியில் பிறந்தவர்கள் என்று பரிமேலழகர் உரை வாயிலாக அறிய முடிகிறது. பழங்குடி என்னும் சொல் குறித்த பரவலான கருத்துக்களைத் தொகுத்து அவற்றின் பொது பண்புகளைப் பின்வருமாறு வரையறை செய்கின்றார் அறிஞர் பக்தவச்சலபாரதி.

> **பழங்குடி என்பவர் ஒரு படித்தான சமூக குழுவினர். இவர்கள் தொடர்ச்சியான பொதுவான இடத்தில் வசிக்கக்கூடியவர்கள். பொதுவான கிளைமொழியைப் பேசுபவர்கள். ஒரு படித்தான பண்பாட்டு முறையைக் கொண்டவர்கள், பொதுவான மூதாதையரையும், பஞ்சாயத்து முறையையும், சமய நம்பிக்கை முறைகளையும் பின்பற்றுபவர். (சமூகவியல் மானிடவியல் கலைச்சொல் விளக்க அகராதி, ப. 176)**

என்று பதிவு செய்கிறார். இவ்விளக்கங்களையெல்லாம் தொகுத்துப் பார்க்கும் போது பழங்குடிகள் என்போர் மைய நீரோட்டத்திற்கு உரிய வாழ்வியல் சூழலில் இருந்து விலகியிருக்கிறார்கள. அவர்கள் எளிதில் சென்றடைய முடியாத தனித்து ஒதுங்கிய மலைக்காட்டுப்பகுதிகளில் வாழ்கின்றவர்கள். இயற்கையைத் தாயாகவும் தெய்வமாகவும் நம்பி, அதன் சீற்றங்களுக்கு அஞ்சி, கண்ணுக்குத் தெரியாத ஆவிகளின் வழிநடத்துதலிலும் சடங்குகளிலும் நம்பிக்கை கொண்டு, நவீன மாற்றங்களுக்கு ஆட்படாமல் தங்களின் ஆதித் தமிழ்/பழங்குடிப் பாரம்பரியத்தை அப்படியே தொடரும் குடிகளே பழங்குடிகள் ஆவர்.

> **மந்திரம் ஆவி இயற்கை இவற்றில் நம்பிக்கையும் இயற்கையில் அச்சமும் கொண்டு பழமையான பழக்க வழக்கங்களைக் கடைபிடிக்கும் மக்களே பழங்குடிகள் ஆவர். (கௌ. அஸ்வதி பூஜா, ப. 11)**

கௌ. அஸ்வதி பூஜா அவர்களின் கூற்று இங்கு நினைவுகூரத்தக்கது. தங்களின் முன்னோர்கள் வகுத்துத் தந்த ஆதி சடங்குகள், வழிபாட்டு முறைகள், வேட்டைத் தொழில்கள், மூலிகை மருத்துவ முறைகள் மற்றும் சமூகக் கட்டுப்பாடுகளை இவர்கள் அப்படியே மாறாமல் இன்றும் பின்பற்றி வருகின்றனர். ஒவ்வொரு சமூகத்தினரும் ஒரு தனித்த கிளை மொழியை பேசுகின்றனர். தனித்த வழிபாட்டு மரபுகளைக் கொண்டிருக்கின்றனர் என்று அறியமுடிகிறது.

> **பழங்குடிகள் என்போர் குறிப்பிட்ட ஒரு நிலப்பகுதியில் நீண்ட காலமாக தங்களுக்கு என தனி கலாச்சாரம் மொழி வாழ்க்கை முறையை கொண்டும் இயற்கையின் மடியில் வாழ்கின்ற மக்களே ஆவர். (மு.பெ.சுப்புலட்சுமி, ப. 243)**

இயற்கையை அழித்து தனது தேவையைப் பூர்த்தி செய்து கொண்டு வாழும் பெரும்பான்மை மக்களோடு ஒட்டாமல் இயற்கையோடு இணைந்த ஆதி மனிதனின் வாழ்முறையைப் பேரளவில் மாற்றங்கள் இன்றி இன்றும் பின்பற்றி வாழும் இனக்குழுவினரே பழங்குடியினர்.

தமிழக பழங்குடியின் வாழிடம்

தமிழகத்தின் மூத்த குடிகளானப் பழங்குடியின மக்கள், தங்களின் தொன்மை மாறா மரபுகளோடும் தனித்துவமான பண்பாட்டு விழுமியங்களோடும் மாநிலத்தின்

மலர் - 5, இதழ் - 2, வைகாசி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

பல்லாயிரக்கணக்கான கிராமங்களில் பரந்து விரிந்து வாழ்ந்து வருகின்றனர். நவீன மாற்றங்கள் ஒருபுறம் நிகழ்ந்தாலும், தங்களின் ஆதி அடையாளங்களைச் சிதையாமல் பாதுகாத்து வரும் இம்மக்களின் வாழ்வியலையும், அவர்கள் இயற்கையோடு கொண்டுள்ள பிணைப்பையும் நிலவியல் ரீதியாக மூன்று பெரும்பிரிவுகளாகப் பகுக்க முடியும். மலையுச்சிகளை உள்ளடக்கிய மலைப்பகுதிகள், மலையும் சமவெளியும் இணையும் இடைநிலப் பகுதியான அடிவாரப்பகுதிகள் மற்றும் நகர்ப்புறங்களை ஒட்டிய சமவெளிப்பகுதிகள் ஆகியவையே அந்த மூன்று முதன்மை வாழிடங்களாகும். இத்தகைய நிலவியல் பிரிவுகளில், பெரும்பான்மையான தமிழ்நாட்டுப் பழங்குடியின மக்கள் தங்களின் முதன்மைத் தாயகமாகத் தேர்ந்தெடுத்து வாழ்ந்து வருவது மலைப்பகுதிகளையே ஆகும். நவீன உலகத்தின் நெரிசல்களிலிருந்து விலகி, தூய்மையான இயற்கை அரண்களாகத் திகழும் அடர்ந்த காடுகளும் ஓங்கிய மலைச்சிகரங்களுமே இவர்களின் புகலிடங்களாக விளங்குகின்றன. தமிழகத்தின் இயற்கை எழிலுக்கும் பல்லுயிர் பெருக்கத்திற்கும் சான்றாகத் திகழும் மேற்குத் தொடர்ச்சி மலை மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைத் தொடர்களே. இவர்களது பிரிக்க முடியாத வாழ்விடங்களாக அமைந்துள்ளன. (ராஜம்மா, வயது - 62)

தமிழ்நாட்டின் பழங்குடியின மக்கள் சமவெளிகளிலும் அடிவாரங்களிலும் பரவி வாழ்ந்தாலும், அவர்களின் ஆன்மாவும் வாழ்வியலும் இன்றும் இந்த இரு பெரும் மலைத்தொடர்களின் மடியிலேயே மிகக் கட்டுக்கோப்பாகத் துடித்துக் கொண்டிருக்கின்றன. தமிழகத்தின் காடுகளிலும் மலைகளிலும் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வரும் ஆதிக்குடிகள், தங்களின் நிலத்தோடும் மொழியோடும் கொண்டுள்ள ஆழமான பிணைப்பை வெளிப்படுத்தும் ஆகச்சிறந்த அடையாளம், அவர்கள் தங்கள் வாழிடங்களுக்குச் சூட்டியுள்ள பெயர்களாகும். தமிழ்நாட்டின் ஒவ்வொரு பழங்குடி இனத்தவரும், தாங்கள் கூடி வாழும் சிற்றூர்களுக்கும் கிராமங்களுக்கும் பிற மொழிகளின் கலப்பின்றி, தங்களின் சொந்தத் தாய்மொழிகளிலேயே பெயரிட்டு அழைக்கும் மரபினை இன்றும் மிகக் கட்டுக்கோப்பாகப் பேணி வருகின்றனர். நவீன உலகம் எத்தனையோ மாற்றங்களைச் சந்தித்தாலும், இவர்களது கிராமப் பெயர்கள் மட்டும் அவர்களின் தொன்ம வரலாற்றையும் மொழியியல் தூய்மையையும் இன்றும் சுமந்து நிற்கின்றன. (மதுமிதா, வயது - 18) இப்பழங்குடி மக்களின் கிராமப் பெயர்கள் வெறும் அடையாளக் குறியீடுகள் அல்ல; அவை அவர்கள் வாழும் நிலத்தின் இயற்கைச் சூழல், தாவரங்கள், விலங்கினங்கள் மற்றும் புவியியல் அமைப்பை அப்பட்டமாகப் படம் பிடித்துக் காட்டுபவை ஆகும்.

> **மலைவாழ் மக்கள் தங்கள் குடியிருப்பு உள்ள பகுதிகளை பலவிதமாக அழைக்கின்றனர். ஒவ்வொரு பழங்குடி சமூகப் பிரிவும் வேறு வேறு பெயர்களால் தங்கள் ஊர்களை அழைக்கின்றார்கள். இருளர் பழங்குடி மக்கள் தங்கள் ஊர்களை பதி என்று அழைக்கின்றார்கள் பல்வேறு பெயர்களை இணைத்து கூறினாலும் இறுதி சொல் பதி என்றே வருகிறது புஞ்சைப்பதி நீலாம்பதி திருப்பதி மற்றும் பல இடங்களில் முத்தூர் எனவும் பெயரிடுகின்றனர். (ஏ. தீபா, ப. 02)**

தங்களின் பேச்சு மொழியில் உள்ள தனித்துவமான சொற்களைக் கொண்டு, தாங்கள் வாழும் மலைச்சரிவு, ஓடை, காட்டின் அடர்த்தி அல்லது குறிப்பிட்ட மரங்கள் நிறைந்த பகுதி ஆகியவற்றின் அடிப்படையில் இக்கிராமப் பெயர்கள் அமைகின்றன.

- **சோளகர் - தொட்டி (அ) மொற்**
- **படகர் - ஹட்டி**
- **தொதவர்கள் - மந்து**
- **கோத்தர் - கோக்கால்**
- **இருளர் - பதி**
- **மலசர் - பொதி**
- **மலைமலசர் - பதி**
- **குரும்பர் - கொம்பை**
- **ஆலுக்குறும்பர் - சீமெ**
- **பணியர் - பாடி**
- **புலையர் - குடி**
- **காணிக்காரர் - காணிக்குடி (தமிழகப் பழங்குடிகள், ப. 48)**

பழங்குடியின மக்கள் கிராமங்கள் அனைத்தும் அவர்தம் கிளை மொழியிலேயே பெயர் பெறுகின்றன. இந்த மொழிசார்ந்த பெயரிடல் மரபு, அவர்களின் நிலத்தின் மீதான இறையாண்மையையும் ஆதி உரிமையையும் பறைசாற்றும் வரலாற்று ஆவணமாகத் திகழ்கிறது. ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் தங்களின் மொழிச் சொற்களைப் பெயராக நிலைநிறுத்துவதன் மூலம், அந்த நிலத்திற்கும் தங்களுக்குமான தொப்புள்கொடி உறவை அவர்கள் அடுத்தடுத்த தலைமுறைகளுக்குக் கடத்துகின்றனர். தமிழ்நாட்டுப் பழங்குடியினரின் கிராமப் பெயர்கள் என்பவை, எழுத்துவடிவம் பெறாத தங்களின் ஆதித் தாய்மொழிகளைத் தாய்மண்ணின் மீது அவர்கள் பொறித்து வைத்துள்ள அழியாத கல்வெட்டுகளாகும்.

கிழக்கு தொடர்ச்சி மலைகளில் வாழும் பழங்குடி இன மக்கள்

இந்தியாவின் இயற்கை அரணாகத் திகழும் கிழக்குத் தொடர்ச்சி மலைத்தொடர், பல்லுயிர் பெருக்கத்தின் உறைவிடமாக மட்டுமன்றி, ஏறத்தாழ அறுபதுக்கும் மேற்பட்ட ஆதிப் பழங்குடி இன மக்களின் தொன்மைமிகு தாயகமாகவும் விளங்கி வருகிறது. இந்த நெடிய மலைத்தொடரின் நீட்சியாக விளங்கும் தமிழகப் பகுதிகளில், தங்களின் தனித்துவமான பண்பாட்டு விழுமியங்களோடு ஏழு முதன்மையான பழங்குடி இன மக்கள் வாழ்ந்து வருகின்றனர். கிழக்குத் தொடர்ச்சி மலையின் உச்சிப் பகுதிகள், மலையடிவாரங்கள் மற்றும் அவற்றை ஒட்டிய சமவெளிப் பகுதிகள் எனத் தங்களின் வாழ்விடங்களை அமைத்துக் கொண்டுள்ள மலையாளி, கொண்டா ரெட்டி, குறிச்சான், குறுமன், சோளகர், ஊராளி மற்றும் இருளர் ஆகியோரே அந்த ஏழு தொல்குடியினராவர். இவர்களில் எண்ணிக்கையிலும் பரவலான வாழ்விடப் பின்னணியிலும் மிக முதன்மையானவர்களாக விளங்குபவர்கள் 'மலையாளி' பழங்குடியின மக்கள் ஆவர். தங்களின் பெயருக்கேற்ப, பெரும்பான்மையான மலையாளி மக்கள் இன்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளின் மடியிலேயே தங்களின் ஆதி வாழ்வியலைத் தொடர்ந்து வருகின்றனர். குறிப்பாக, தமிழகத்தின் வட மற்றும் மத்திய மாவட்டங்களில் பரவிக் கிடக்கும் ஜவ்வாது மலை, ஏலகிரி மலை, கல்வராயன் மலை, சேர்வராயன் மலை, சித்தேரிமலை, வச்சாத்தி மலை, ஜல்லுத்து மலை ஆகிய பகுதிகளில் இவர்களின் குடியிருப்புகள் அடர்த்தியாக அமைந்துள்ளன. மேலும், கஞ்சமலை, பாலமலை, கோதுமலை, பச்சைமலை, நகர மலை, கொல்லிமலை மற்றும் கடகமலை உள்ளிட்ட ஒட்டுமொத்தக்

கிழக்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளின் சமநிலப் பரப்புகளிலும் சரிவுகளிலும் இவர்களது கிராமங்கள் நிலைபெற்றுள்ளன. காடுகளுடனும் மலைகளுடனும் பிரிக்க முடியாத ஆன்மீக மற்றும் வாழ்வாதாரப் பிணைப்பைக் கொண்டுள்ள இம்மக்கள், நவீன காலத்தின் மாற்றங்களுக்கு மத்தியிலும் தங்களின் ஆதித் தமிழ் மரபையும், தனித்த சமூகக் கட்டுப்பாடுகளையும் இந்த மலைத்தொடரின் உறைவிடங்களிலேயே மிகச் செறிவாகப் பேணிப் பாதுகாத்து வருகின்றனர்.

மேற்குத் தொடர்ச்சி மலைகளில் வாழும் பழங்குடி இனங்கள்

தமிழகத்தில் வாழ்ந்து வரும் ஒட்டுமொத்த முப்பத்தேழு பழங்குடி இனங்களுள், பதினைந்து வகையான பழங்குடியினர் காடும் காடு சார்ந்த முல்லை நிலப் பின்னணியைக் கொண்ட கொங்கு நாட்டின் இரு பெரும் மலைத்தொடர்களையே தங்களின் பூர்விகத் தாயகமாகக் கொண்டுள்ளனர். மேற்குத் தொடர்ச்சி மலை மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலையின் அடர்ந்த காட்டுப்பகுதிகளில், பல நூற்றாண்டுகளாகத் தங்களின் மரபார்ந்த அடையாளங்கள் சிதையாமல் நிலைபெற்று வாழும் இத்தொல்குடிகள், மாவட்ட வாரியாகத் தமக்கான தனித்துவமான புவியியல் வாழிடங்களைப் பகிர்ந்து கொண்டுள்ளனர். இப்பகிர்வில், பல்லுயிர்ச் சூழல் நிறைந்த நீலகிரி மாவட்டம் ஆறு வகையான முதன்மைப் பழங்குடிகளின் உறைவிடமாகத் திகழ்கிறது. தொதவர், கோத்தர், குறுமர், இருளர், பணியர் மற்றும் காட்டுநாயக்கர் ஆகிய இவ்வாறு குடிகளும் நீலகிரியின் உயரமான மலைச்சரிவுகளிலும் அடர்காடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர். இதற்கு இணையாக, கொங்கு நாட்டின் மையப்பகுதியான கோயம்புத்தூர் மாவட்டத்தின் மலைப் பிரதேசங்களில் இருளர், காடர், மலசர், மகா மலசர், முதுவர் மற்றும் எரவல்லன் ஆகிய ஆறு வகை ஆதிக்குடிகள் தங்களின் வாழ்விடங்களை அமைத்துக் கொண்டுள்ளனர். மேலும், ஈரோடு மாவட்டத்தின் தாளவாடி மற்றும் சத்தியமங்கலக் காட்டுப்பகுதிகளில் சோளகர் மற்றும் ஊராளி ஆகிய இரு பழங்குடியினரும், கிருஷ்ணகிரி மாவட்டத்தின் எல்லைப் பகுதிகளில் இருளர்களின் ஒரு பிரிவினரும் காலங்காலமாக வாழ்ந்து வருகின்றனர். மறுபுறம், திண்டுக்கல் மாவட்டத்தின் பழனி மலைப் பகுதிகளில் பளியர் பழங்குடியினர் செறிந்து வாழ, கிழக்குத் தொடர்ச்சி மலையின் நீட்சியில் மலையாளிப் பழங்குடியின மக்கள் பெரும்பான்மையாகக் குடியேறியுள்ளனர். அதன்படி, சேலம் மாவட்டத்தின் கொல்லிமலை மற்றும் ஏற்காடு (சேர்வராயன்) மலைப் பகுதிகளிலும், நாமக்கல் மாவட்டத்தின் பச்சை மலைப் பகுதியிலும், தருமபுரி மாவட்டத்தின் சித்தேரி மலைப் பகுதிகளிலும் இம்மலையாளி குடிகள் தங்களின் வேளாண் மரபைத் தொடர்ந்து வருகின்றனர். இவர்களோடு, மேற்குத் தொடர்ச்சி மலையின் மிக முக்கிய அரணான ஆனைமலை மற்றும் பழனி மலைத் தொடர்களைத் தங்களின் பிரிக்க முடியாத வாழிடமாகக் கொண்டு குன்னுவர், புலையர், மலைவேடர், பளியர், பள்ளியன், மலசர், முதுவன், முடுவர் மற்றும் மன்னான் ஆகிய ஒன்பது வகையான பழங்குடியின மக்கள் இயற்கை சார்ந்து வாழ்ந்து வருகின்றனர். நவீன நாகரிகத்தின் எவ்வித ஒவ்வாமைகளும் இன்றி, காடுகளையும் மலைகளையும் தங்களின் குலதெய்வங்களாகக் கருதி வாழும் இக்குடிகள், கொங்கு நிலத்தின் ஆகச்சிறந்த வரலாற்றுப் பேரடையாளங்கள் ஆவர்.

பழங்குடி மாவட்டம்

இந்தியத் தீபகற்பத்தின் இரு பெரும் இயற்கை அரண்களான மேற்குத் தொடர்ச்சி மலையும் கிழக்குத் தொடர்ச்சி மலையும் ஒன்றோடொன்று கைகோர்த்துத்

மலர் - 5, இதழ் - 2, வைகாசி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

தழுவிக்கொள்ளும் உன்னதமான புவியியல் சந்திப்பாக, 'நீல மலை' என்று போற்றப்படும் நீலகிரி மாவட்டம் திகழ்கிறது. இந்தத் தகைசால் நிலப்பரப்பு, தன் கண்கவர் இயற்கை எழிலால் மட்டுமன்றி, மானுடவியல் மற்றும் இனக்குழு ஆய்வுகளின் அடிப்படையில் உலகப் புகழ்பெற்ற ஒரு தனித்துவமான வாழ்விடமாகவும் விளங்குகிறது. தமிழகத்தின் மிகத் தொன்மையான, தனிச்சிறப்பு மிக்க ஆதிப் பழங்குடிச் சமூகங்களின் உறைவிடமாகத் திகழ்வதே இந்த மாவட்டத்தின் வரலாற்றுப் பெருமையாகும்.

> **தமிழகத்தில் மட்டுமே 'தொதவர்', 'கோத்தர்', 'குறும்பர்', 'பணியர்', 'இருளர்,' 'காட்டுநாயக்கர்' ஆகிய ஆறு சமூகங்களும் 'தொன்மைப் பழங்குடி குழுக்கள்' இருப்பதாக வரையறுக்கப்பட்டன. இவ் ஆறு தொல் பழங்குடிக் குழுக்களும் நீலகிரி மாவட்டத்தில்தான் இன்றளவும் வசித்துவருகின்றனர். (துரைமுருகன்.செ, ப. 02)**

மத்திய அரசால் 'மிகவும் நலிவடைந்த பழங்குடியினர்' (Particularly Vulnerable Tribal Groups - PVTGs) என வகைப்படுத்தப்பட்டு, அழியும் நிலையில் உள்ளதாகக் கருதப்படும் தமிழ்நாட்டின் அனைத்துக் குறிப்பிடத்தக்க ஆறு ஆதிப் பழங்குடிக் குழுக்களும் இந்நீல மலையின் மடியிலேயே ஒன்றிணைந்து வாழ்ந்து வருகின்றனர். தொதவர், கோத்தர், குறுமர், இருளர், பணியர் மற்றும் காட்டுநாயக்கர் ஆகிய இந்த ஆறு வகைமைகளும் ஒரே புவியியல் எல்லதிக்குள், தத்தமது தனித்துவமான அடையாளங்களோடு வசிப்பது என்பது உலக அளவில் மானுடவியலாளர்களை வியப்பில் ஆழ்த்தும் ஒரு வியத்தகு நிகழ்வாகும். இதன் காரணமாகவே, நீலகிரி மாவட்டமானது சர்வதேச அளவில் 'இனக்குழுக்களின் அருங்காட்சியகம்' போல, மானுடவியல் தளத்தில் பெரும் புகழுடன் திகழ்கிறது. இங்கு வாழும் ஒவ்வொரு குடிகளும் இயற்கையோடு தமக்கேயான பிரத்தியேகப் பிணைப்பைக் கொண்டுள்ளனர். மாடுகளையே தெய்வமாகக் கருதிப் புல்வெளிகளில் வாழும் தொதவர்கள், தனித்த இசை மரபும் கைவினைத் திறனும் கொண்ட கோத்தர்கள், காடுகளின் காவலர்களாக விளங்கும் குறுமர்கள், மூலிகை அறிவில் சிறந்த இருளர்கள், வயல்வெளிகளோடும் கானகத்தோடும் இயைந்த பணியர்கள் மற்றும் தேன் சேகரிப்பதில் வல்லமை மிக்க காட்டுநாயக்கர்கள் என இந்த ஆறு தொல்குடிகளும் தங்களின் ஆதித் தாய்மொழிகளையும், வழிபாட்டு முறைகளையும், சமூகக் கட்டுப்பாடுகளையும் இன்னமும் மாறாமல் காத்து வருகின்றனர். சுருக்கமாகக் கூறின், நீலகிரியின் பல்லுயிர்ச் சூழலுக்கு இணையான ஒரு பல்லினப் பண்பாட்டுச் செழுமையை இந்த ஆறு பழங்குடி இனங்களும் தங்கள் வாழ்வியலின் மூலம் இந்நிலத்திற்குத் தந்து கொண்டிருக்கின்றனர்.

> **மாநிலத்தின் ஏனைய மாவட்டங்கள் அதிகபட்சம் 5 பழங்குடிக் குழுக்களைத் தன்னகத்தே கொண்டிருக்க, நீலகிரியில் மட்டுமே 6 பண்டைய பழங்குடிக் குழுக்கள் இனங்காணப்படுவதால் இது தமிழ்நாட்டின் பழங்குடி மாவட்டம் என மிகப் பொருத்தமாக அழைக்கப்படுகிறது. (நீலகிரி குறும்பர் பழங்குடி ஓவிய மரபு, ப. 6)**

என முனைவர் சி.மகேசுவரன் குறிப்பிடுகின்றார். தமிழ்நாட்டில் ஒரே மாவட்டத்திற்குள் பத்துக்கும் மேற்பட்ட வெவ்வேறு பழங்குடி இன மக்கள் காணப்படுவதைக் கருத்தில் கொண்டு தமிழ்நாட்டில் பழங்குடியினர் மாவட்டம் என்று நீலகிரி மாவட்டம் குறிக்கப்படுகிறது. தமிழகத்தின் மிகத் தொன்மையான ஆதிப் பழங்குடிச் சமூகங்களின் முதன்மைத் தாயகமாகத் திகழும் நீலகிரி மாவட்டம், மானுடவியல் மற்றும் பண்பாட்டுத் தளங்களில் தமிழ்நாட்டின் மிக உயரிய சிறப்பிடத்தைப் பெற்று விளங்குகிறது. மத்திய

அரசால் மிகவும் நலிவடைந்த, தனி கவனத்திற்குரிய பழங்குடியினராக (PVTGs) வகைப்படுத்தப்பட்டுள்ள தொதவர், கோத்தர், குறும்பர், பணியர், இருளர் மற்றும் காட்டுநாயக்கர் ஆகிய ஆறு முதன்மை இனக்குழுக்களும் ஒட்டுமொத்தமாக இந்நீல மலையின் மடியிலேயே ஒன்றிணைந்து வாழ்வது, இம்மாவட்டத்திற்கு உலகளாவிய அளவில் ஒரு வரலாற்றுப் பெருமையைத் தேடித்தந்துள்ளது. இருப்பினும், பரந்துபட்ட ஆய்வுகளின் அடிப்படையில் நீலகிரியின் கானகச் சூழலில் மொத்தம் பத்து வகையான தனித்துவமிக்க பழங்குடி இனக்குழுக்கள் தங்களின் மரபார்ந்த அடையாளங்களோடு வாழ்ந்து வருகின்றனர். தொதவர், கோத்தர், இருளர், பணியர் மற்றும் காட்டுநாயக்கர் ஆகியோருடன், கசவர் மற்றும் குறும்பர் இனத்தின் உட்பிரிவுகளான ஆலுக்குறும்பர், முள்ளுக்குறும்பர், பெட்டக்குறும்பர், தேனுக்குறும்பர் ஆகிய பத்துக் குடிகளும் இந்த மலைப்பகுதியின் பல்லுயிர்ச் சூழலோடு தங்களின் வாழ்வியலைப் பிணைத்துக் கொண்டுள்ளனர். காடுகளையும் மலைகளையும் தங்களின் வாழ்வாதாரமாகக் கொண்ட இந்த ஒவ்வொரு குழுவும், தமக்கெனத் தனித்த ஆதித் தாய்மொழிகளையும் மாறுபட்ட வாழ்வியல் சடங்குகளையும் கொண்டு விளங்குகின்றன. இப்பத்துத் தொல்குடிகளுள், நீல மலையின் ஆகப்பழமையான மூத்தக் குடிகளாகக் கருதப்படுபவர்கள் 'தொதவர்' (Toda) பழங்குடியின மக்கள் ஆவர். பல்லாயிரம் ஆண்டுகளாக இப்பேரண்டத்தின் நாகரிக மாற்றங்கள் எதற்கும் உட்படாமல், தங்களின் ஆதித் தன்மையையும் தனித்துவமான ஆடை, இசை மற்றும் மாடு வளர்ப்பு மரபுகளையும் மாறாமல் காத்து வரும் இவர்கள் இந்நிலத்தின் நகராக்கல்வெட்டுகளாகத் திகழ்கின்றனர். இத்தகைய தொன்மை வாய்ந்த தொதவர் பெருமக்கள், தங்களின் தனித்துவத்தை ஒருபுறம் பேணினாலும், தங்களோடு வாழும் பிற ஒன்பது பழங்குடி இன மக்களுடனும், சமவெளியிலிருந்து புலம்பெயர்ந்த ஏனைய பொதுச் சமூகத்தினருடனும் எவ்வித முரண்களுமின்றி, இணக்கமான நட்புணர்வுடன் கூடி வாழ்வது உலகிற்கே ஒரு முன்மாதிரியான வாழ்வியல் விழுமியமாகும்.

பொருளாதார நிலை

இயற்கையைத் தன் சுயநலத்திற்காகச் சுரண்டாமல், அதன் சமநிலையை எதிர்க்காமல், காட்டின் வளங்களை மிகக் கட்டுப்பாட்டுடன் பயன்படுத்தி வாழ்வதே பழங்குடிகளின் வாழ்வியல் தத்துவமாகும். இத்தகைய விழுமியங்களைக் கொண்ட தமிழ்நாட்டின் பல பழங்குடி இன மக்கள், ஆதிகாலம் தொட்டு இன்று வரை காட்டின் இயல்பு மாறாமல் 'வேட்டையாடி உணவு சேகரிக்கும்' தொன்மையான பொருளாதார முறையையே தங்களின் முதன்மை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர். காடர், பளியர், இருளர், காணிக்காரர், மலைக்குறவர், முதுவர், ஊராளி மற்றும் குறும்பர் முதலான பழங்குடிகள் இவ்வகை இயற்கையோடு இயைந்த பொருளாதார வாழ்வியலைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

> **இன்று உலக மக்கள் தொகையில் 1:4 மில்லியனுக்குள் சற்று குறைவானவர்கள் அதாவது 0.003 சதவீதம் மக்கள் வேட்டையாடி உணவு சேகரித்து வாழும் நிலையில் உள்ளனர். பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பயிரிடுதலும் கால்நடை வளர்த்தலும் முக்கியத் தொழிலாக மாறியுங்கூட இன்றும் இவ்வளவு எண்ணிக்கையினர் இந்த பொருளாதார முறையை கொண்டுள்ளனர். (தமிழகத் தொல்குடிகள், ப. 121)**

எல்லாவற்றையும் நுகர்ந்து தீர்க்கத் துடிக்கும் நவீன மனிதன், பேராசையின்றி நிறைவோடு வாழும் இத்தொல்குடிகளிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய அறப்பண்புகள் ஏராளமாக உள்ளன. பழங்குடி மக்களின் மரபார்ந்த பொருளாதார முறைகளையும், அவர்களின் வாழ்வியல் நுட்பங்களையும் ஆவணப்படுத்துவது சமகாலத்தின் மிக முக்கிய தேவையாகும். மலை அடிவாரங்களில் எளிய முறையில் வேளாண்மை செய்து வாழும் பளியர் பழங்குடி மக்களின் வாழ்வாதாரம் சுவாரசியமானது. இவர்கள் தங்கள் வாழிடங்களுக்கு அருகிலுள்ள நீர்நிலைகளில் மீன்பிடித்தல் மற்றும் காடுபடு பொருட்களைச் சேகரித்தல் ஆகியவற்றையே தங்களின் முதன்மைத் தொழில்களாகக் கொண்டுள்ளனர்.

> **தமிழில் கருங்கொடி என அழைக்கப்படும் கொடியின் இலைகளைக் கசக்கி நீரில் வீசுவர் சிறிய நேரத்தில் மீன்கள் தண்ணிரில் மேலே வந்து மிதக்கும். நயமற்றனவாக அமைக்கப்பட்ட துண்டில்கலை கொண்டு மீன்கள்ப் பிடிக்கப் பயன்படுத்துகின்றனர். (சோளகர் வாழ்வும் பண்பாடும், ப. 215)**

இயற்கைக்கு எவ்விதத் தீங்கும் விளைவிக்காமல், தங்களின் தேவைக்கானதை மட்டும் காட்டிடமிருந்து பெற்றுக் கொள்ளும் இத்தகைய தொல்மூப்பறிவும் பொருளாதார முறையும் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டியவை.தமிழகத்தின் தொல்குடிகளான காடர்கள், மலச்சர்கள் மற்றும் பணியர் பழங்குடிச் சமூகங்களின் வாழ்வாதாரக் கட்டமைப்பு, இயற்கையோடும் வனவிலங்குகளோடும் பிரிக்க முடியாதபடி பிணைந்துள்ளது. இச்சமூகங்களைச் சேர்ந்த ஆண்கள், தலைமுறை தலைமுறையாகத் தங்களுக்குள் கடத்தப்பட்டு வந்த தொல்மரபு அறிவின் துணைகொண்டு, விலங்குகள் சரணாலயங்களில் மிகச்சிறந்த யானைப் பாகன்களாகத் தங்களின் பங்களிப்பை வழங்கி வருகின்றனர். அதேவேளையில், இவர்களது சமூகப் பொருளாதாரக் கட்டமைப்பில் பெண்களின் உழைப்பு சமத்துவமான வேலைப் பகிர்வின் அடிப்படையில் ஆழமாக வேரூன்றியுள்ளது. ஆண்கள் வனவிலங்குப் பராமரிப்பில் ஈடுபட, பெண்கள் காடுகளின் உள்ளடுக்குகள் வரை சென்று காடுபடு மூலிகைகள், மருத்துவப் பட்டைகள், மரப் பிசின்கள், தூய தேன், உணவுக்கான காட்டுக்கிழங்குகள் மற்றும் பழங்களை மிக நுட்பமாகச் சேகரித்து, அவற்றை விற்பனை செய்வதன் மூலம் தங்களின் குடும்பப் பொருளாதாரத்தை நிலைநிறுத்துகின்றனர். மற்றொரு புறம், ஈரோடு உள்ளிட்ட மேற்குத் தொடர்ச்சி மலைப் பரப்பில் வாழும் சோளகர் பழங்குடியினர், காட்டின் பல்லுயிர்ச் சூழலைச் சிதைக்காமல் வாழ்வாதாரம் ஈட்டும் தனித்துவமான பொருளாதார மாதிரியைக் கொண்டுள்ளனர். காடுகளிலிருந்து நெல்லிக்காய், சீமார் புல், கல்பாசி, சீயக்காய் மற்றும் காட்டு எலுமிச்சை போன்ற காடுபடு பொருட்களைச் சேகரிப்பதில் இவர்கள் பேராற்றல் மிக்கவர்கள். குறிப்பாக, சோளகர்களின் காடறிவிலும் மரபார்ந்த உணவுச் சேகரிப்பிலும் தேன் அறுவடை என்பது மிக முதன்மையான இடத்தைப் பெறுகிறது; காடுகளின் சூழமைவுக்கு ஏற்ப, தங்களின் அரிய பட்டறிவின் மூலம் அவர்கள் கண்டறிந்து சேகரிக்கும் தேன் வகைகள் நான்கு ஆகும்.

- **பெருந்தேன்**
- **அடுக்குத்தேன்**
- **கொம்புத்தேன்**
- **கொசுத்தேன் (சோளகர் வாழ்வும் பண்பாடும், ப. 53)**

இத்தகைய ஆண்-பெண் வேலைப் பகிர்வும், காட்டைப் பாதுகாத்து அதனிடமிருந்து தங்களுக்குத் தேவையானதை மட்டும் பெற்றுக்கொள்ளும் தொல்மூப்பறிவும் சமகால உலகம் பயில வேண்டிய உன்னத வாழ்வியல் நெறிகளாகும்.

தேனெடுப்பதை பிரதான தொழிலாக கொண்டவர்கள். ஜேனுக் குறும்பர்கள். தொதவர்கள் கால்நடைகளை வளர்க்கின்றனர். குறிப்பாக எருமைகளை வளர்க்கின்றனர். பால் மற்றும் பால் சார்ந்த பொருட்களை உற்பத்தி செய்து தங்கள் பொருளாதாரத்தை ஈடுபடுகின்றனர். கோத்தர்கள் பல தொழில்கள் செய்யும் கைவினைஞர்களாக உள்ளனர்.

நீலகிரி மலையின் தொல்குடிகளான கோத்தர் பழங்குடியினர், பன்முகத் தொழிற்துறைகளில் ஆளுமை மிக்க கைவினைஞர்களாகத் திகழ்கின்றனர். இவர்கள் தங்களின் அரிய தொல்மரபு அறிவின் துணைகொண்டு, களிமண்ணைக் கொண்டு மண்பானைகள் செய்யும் குயவர்களாகவும், பொன் மற்றும் வெள்ளியை உருக்கி நுட்பமான ஆபரணங்களை வடிவமைக்கும் தட்டர்களாகவும், இரும்பு வேலைகளில் தேர்ந்த கம்மாளர்களாகவும் விளங்குகின்றனர். கொள்ளுத் தொழில் (கொல்லர்), தச்சுத் தொழில், நெசவுத் கலை மற்றும் தனித்துவமான மரபார்ந்த இசைக்கலை எனப் பன்முகத் திறன்களைத் தங்களுக்குள் கடத்திவந்துள்ள இச்சமூகத்தினர், ஒரு முழுமையான சுயசார்புப் பொருளாதார மாதிரியைத் தங்களின் வாழ்விடங்களில் நிலைநிறுத்தியுள்ளனர். இருப்பினும், நவீனப் பொருளாதார மாற்றங்களுக்கு ஏற்ப தற்போதைய சூழலில் பழங்குடி மக்களின் வாழ்வாதார முறைகள் பெரும் உருமாற்றத்தைச் சந்தித்து வருகின்றன.

> **பழங்குடியினர்கள் பெரும்பாலும் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் தான் இன்றளவும் வாழ்கின்றனர். இந்திய அரசு ஏராளமான நலத்திட்டங்களையும், உதவிகளையும் வழங்கி வருவதால் ஓரளவிற்கு கல்வியறிவு பெற்றுள்ளனர். இருப்பினும், அனைத்து சலுகைகளும் முழுமையாக பெற வேண்டும். மேலும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், மானிட செயற்பாட்டாளர்கள், மனித உரிமை கழகத்தினர் உதவிக்கரம் நீட்ட வேண்டும்.(இரவிக்குமார்.கு, ப. 2)**

இன்றளவும் பெரும்பாலான பழங்குடியின மக்கள் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையிலேயே வாழ்கின்றனர். இந்திய அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் உதவிகளின் காரணமாக அவர்கள் ஓரளவிற்கு கல்வியறிவு பெற்றுள்ள போதிலும், அரசின் அனைத்துச் சலுகைகளும் அவர்களுக்கு முழுமையாகச் சென்றடைய வேண்டியது இன்னமும் அவசியமாக உள்ளது. எனவே, அவர்களின் ஒட்டுமொத்த மேம்பாட்டிற்கு அரசின் திட்டங்களோடு இணைந்து, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், மானுடவியலாளர்கள் மற்றும் மனித உரிமை அமைப்புகளும் தங்களின் ஆதரவையும் உதவிக்கரத்தையும் நீட்ட வேண்டும். பெரும்பாலான பழங்குடியின மக்கள் தங்களின் பாரம்பரிய வாழ்விடங்களுக்கு அருகாமையில் பரவியுள்ள காபித் தோட்டங்கள், தேயிலைத் தோட்டங்கள், விவசாய வயல்கள் மற்றும் வனவிலங்குச் சரணாலயங்கள் ஆகியவற்றில் வாரக்கூலிகளாகவும் மாதக்கூலிகளாகவும் தங்களைப் பணிகளில் ஈடுபடுத்திக் கொள்கின்றனர். இன்றைய காலகட்டத்தில், பல பழங்குடியினர் தங்களின் மரபார்ந்த வேளாண்மையையும், காடுசார் பொருட்களின் சேகரிப்பையும் கைவிடாமல், அவற்றுடன் இந்தத் தோட்டக் கூலித்தொழிலையும் இணைத்துக் கொண்டு ஒரு கூட்டுப் பொருளாதார

(Mixed Economy) வாழ்வாதார முறையின் மூலம் தங்களின் வாழ்வியலைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

முடிவுரை

தமிழகத்துப் பழங்குடிகளின் வாழிடச் சூழலும் அவர்களின் மரபார்ந்த பொருளாதார முறைகளும், மனித குலம் இயற்கையோடு எவ்வாறு இணக்கமாக வாழ வேண்டும் என்பதைக் கற்பிக்கும் உன்னதமான வாழ்வியல் பாடங்களாகும். பளியர்களின் கருங்கொடி மூலிகை வழி மீன்பிடி நுட்பம், சோளகர்களின் நாற்பெரும் தேன் அறுவடை, கோத்தர்களின் சுயசார்பு மிக்க பன்முகக் கைவினைத் திறன்கள், மற்றும் காடர்கள், மலச்சர்கள், பணியர்களின் வனவிலங்கு மேலாண்மை அறிவு ஆகிய யாவும் வெறும் பிழைப்புக்கான வழிகள் மட்டுமல்ல; அவை காட்டின் பல்லுயிர்ச் சூழலைச் சிதைக்காமல் பாதுகாக்கும் தொல்மூப்பறிவின் எச்சங்கள். குறிப்பாக, இச்சமூகங்களில் நிலவும் ஆண்-பெண் வேலைப் பகிர்வின் சமநிலை, நவீன உலகம் இன்னும் எட்ட முயலும் பாலினச் சமத்துவத்திற்கு மிகச்சிறந்த சான்றாகும். இருப்பினும், சமகாலப் பொருளாதார நகர்வுகளும் காடுகள் மீதான நவீன ஆதிக்கமும் இவர்களது பாரம்பரிய கூட்டுப் பொருளாதாரக் கட்டமைப்பில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. தங்களின் பூர்வகுடித் தொழில்களோடு, அருகமைந்த தேயிலை-காபித் தோட்டங்களிலும் சரணாலயங்களிலும் கூலித்தொழிலாளர்களாக மாறும் இவர்களின் இன்றைய நிலை, மரபுக்கும் நவீனத்துவத்திற்கும் இடைப்பட்ட ஒரு கூட்டு வாழ்வாதாரப் போராட்டத்தையே காட்டுகிறது. எனவே, மாறிவரும் சூழலில் இப்பழங்குடி மக்களின் தனித்துவமான வாழ்விடங்களைப் பாதுகாப்பதோடு, தலைமுறை தலைமுறையாக அவர்கள் பேணி வரும் மரபார்ந்த பொருளாதார நுட்பங்களையும் சூழலியல் அறிவையும் ஆவணப்படுத்திப் பாதுகாப்பது சமகாலத்தின் மிக அவசரமான, அவசியமான காலத்தின் தேவையாகும்.

குறிப்புகள்

[1] இரவிகுமார், கு. “இனவரைவியல் நோக்கில் பழங்குடிகள் மற்றும் நாடோடிகள்.” *பொற்றாமரை ஆய்விதழ்*, இதழ் 7, மே 2025.
[2] கந்தையா பிள்ளை, ந. சி. *தமிழ்-தமிழ் அகராதி*. ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், 2003.
[3] கலைச்சொல்லாக்கக் குழு. *கலைச்சொல் பேரகராதி*. தமிழ் இணையக் கல்விக்கழகம், 2009.
[4] சந்தியா நடராஜன். *மதுரைத் தமிழ்ப் பேரகராதி*. சந்தியா பதிப்பகம், 2001.
[5] ச. வே. சுப்பிரமணியன். *சிலப்பதிகாரச் சொல்லடைவு*. தமிழ்ப் பதிப்பகம், 1972.
[6] சுப்பிரமணியன், ச. வே. *சமூகவியல் மானிடவியல் கலைச்சொல் விளக்க அகராதி*. தமிழ்ப் பல்கலைக்கழகம், 2003.
[7] சுப்புலட்சுமி, மு. பெ. “இனவரவியல் நோக்கில் கழுதை பாதை.” *தமிழ் மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 8, இதழ் 2, ஜனவரி 2026.
[8] தீபா, ஏ. “பழங்குடியினர் பண்பாடு மற்றும் தொழில் முறைகள்.” *சர்வதேச தமிழ் ஆய்விதழ்*, தொகுதி 7, மலர் 3, ஜனவரி 2022, doi:10.34256/irjt22361.
[9] துரைமுருகன், செ. “தொல்குடியும் தொல் தமிழும்.” *பதிவுகள் மின்னிதழ்*, ISSN 1481-2991.
[10] பகத் சிங். *சோளகர் வாழ்வும் பண்பாடும்*. அடையாளம் பதிப்பகம், 2019.
[11] பக்தவச்சல பாரதி. *தமிழகத் தொல்குடிகள்*. அடையாளம் பதிப்பகம், 2017.
[12] பக்தவச்சல பாரதி. *தமிழகப் பழங்குடிகள்*. அடையாளம் பதிப்பகம், 2013.

மலர் - 5, இதழ் - 2, வைகாசி 2057
இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

[13] புலியூர்க் கேசிகன், தெளிவுரையாசிரியர். *திருக்குறள் பரிமேலழகர் உரை செம்பதிப்பு.* பூம்புகார் பதிப்பகம், 2018.

[14] மகேஸ்வரன், ச. *நீலகிரி குறும்பர் பழங்குடி ஓவிய மரபு.* இந்தியப் பழங்குடி மக்கள் பண்பாட்டு மையம், 2018.

[15] வேங்கடசாமி நாட்டார், நா. மு. *சிலப்பதிகாரம் மூலமும் உரையும்.* சாரதா பதிப்பகம், 2008.

தகவலாளர்கள்

[16] ராஜம்மா. தனிப்பட்ட நேர்காணல். மசினகுடி கூடலூர், வயது 62.

[17] மதுமிதா. . தனிப்பட்ட நேர்காணல். குஞ்சப்பனை கோத்தகிரி, வயது 18.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை.

கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை.

கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 5, Issue - 2, May 2026

E-ISSN: 2583-0481
MLA, DOAJ Indexed

Antiquity and lmportance of Tamirabarani in Tamil Literature

Dr. R. Vishnupriya, Assistant Professor In.Tamil, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi, Coimbatore District, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-6929-8162
DOI: 10.5281/zenodo.20474152
Received: 28 December 2025; **Revised:** 22 February 2026; **Accepted:** 13 March 2026; **Available Online:** 31 May 2026

Abstract

Water is the basis for the happy life and rejuvenation of man in this world. This world cannot live without water. In this way, sea water, river water, and waterfall water all mix in man's life and acquire different values. River water is very useful for man to maintain his health. It is said that the culture and civilization of the people developed on the banks of rivers.Tirunelveli district is the lifeblood of the South, a place that showcases the culture and civilization of the Tamil literature. All the rivers flowing in this district originate in the Western Ghats and flow into the Bay of Bengal. The only river that has the distinction of originating in Tamil Nadu and flowing into the sea in Tamil Nadu is the Thamirabarani. Tirunelveli district is the lifeblood of the South, a place that celebrates the culture and civilization of the Tamil literature. All the rivers flowing in this district originate in the Western Ghats and merge into the Bay of Bengal. The only river that has the distinction of originating in Tamil Nadu and merging into the sea in Tamil Nadu is the Thamirabarani. In Tamil literature, such a Thamirabarani river is called the Porunai River. Hence, this article aims to study the antiquity and speciality of this river.

Keywords: Tamil Literature, Tamirabarani, Antiquity, Rivers, Dams.

References

[1] Arulraj, Na., Etd. *Thamizhaga Varalarrum Thamizhar Panpaadum*. Paavai Printers, 2010.
[2] Ilangkumaran, Iraa., Etd. *Madhurai Meenatchiyammai Kuram*. Thirunelveli Thennindhiya Saiva Siddhantha Noorpathippukkazhagam, 1977.
[3] Ilangomani, Sa. "Thirunelveliyin Thotramum Adhan Parimaanamum." *Keetru*, November 2021.
[4] Raasamanickanar, Maa. *Thamizhaga Varalarrum Panpaadum*. Sharadha Pathippagam, 2011.
[5] Radhakrishnan, Ke. Es. *Nimira Vaikkum Nellai, Podhigai, Porunai*. Parisal Arakkattalai, 2005.
[6] Ramasubramaniyam, Va. Tha., Etd. *Kambaramayanam*. Thirumagal Nilaiyam, 2005.
[7] Eswaran, Paa. "Kavignar Vairamuthu Neer Kavithaiyil Suttruzhul Sindhanaigal." *Kalanjiyam Sarvadesa Tamil Aayvidhal*, Idhal 4, February 2026.
[8] Karthikeyan, Maa. "Suzhaliyal Nokkil Sangath Thamizarin Neer Melanmai." *Arima Nokku*, January 2025.
[9] Sethupillai, Raa. Pi. *Thamizhagam Oorum Perum*. Palaniyappa Brothers, 1946.
[10] Thuraisamippillai, Tha. *Amudha Thamil Thantha Ouvaiyar*. Uma Pathippagam, 2003.
[11] Bakthavachalam Venugopal, thoku. *Bharathiyar Kavithaigal*. Leo Book Publishers, 2004.
[12] Balasubramaniyan, Ku. Ve., Etd. *Purananooru*. New Century Book House, 2004.

[13] Puliyurkesigan, thoku. *Mukkoodarpallu*. Paari Nilaiyam, 1960.
[14] Periyasami, Ko. "Suzhaliyal Nokkil Purananooru." *Puthuppunal*, Malar 14, Idhal 6, June 2023.
[15] Muruganantham, Na. "Thamizhnadu Netru - Indru - Naalai." *Tamizhthurai*, Pondicherry Palkalaikazhagam, 1997.
[16] Rajappan, thoku. *Tamizh Naattu Varalaru*. Ethir Veliyeedu, 2015.
[17] Regina. "Ettuthogai Noorkalil Neer Kurittha Suttruzhul Vizhippunarvo." *Sarvadesa Thamil Aayvidhal*, Thogudhi 2, Idhal 1, 2020.
[18] Varadharasanar, Mu., thoku. *Thirukkural*. Thennindhiya Saiva Siddhantha Noorpathippukkazhagam, 1959.
[19] Vengadasami, Mayilai Seeni., pathippaasiriyar. *Manonmaneeyam*. Gowra Pathippagam, 2009.
[20] Jayaseelan Ko. "Valluvar Kanda Ulagam." *Arima Nokku*, July 2019, Raja Pathippagam.

Author Contribution Statement: NIL.
Author Acknowledgement: Nil
Author Declaration: Nil
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.

மலர் - 5, இதழ் - 2, வைகாசி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

தமிழ் இலக்கியங்களில் தாமிரபரணியின் தொன்மையும் சிறப்பும்

முனைவர் இரா. விஷ்ணுப்பிரியா, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி, கோவை மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-6929-8162
DOI:

ஆய்வுச்சுருக்கம்

உலக வாழ்வில் மனிதனின் மகிழ்ச்சியான வாழ்விற்கும், புத்துணர்ச்சிக்கும் நீர் அடிப்படையாக அமைகின்றது. இவ்வுலகமும், நீர் இன்றி வாழ இயலாது. அவ்வகையில் கடல்நீரும், ஆற்றுநீரும், அருவி நீரும் மனிதனின் வாழ்வில் கலந்து வெவ்வேறு சூழ்நிலைகளில் மதிப்பைப் பெறுகின்றன. மனிதன் உடல்நலம் பேண ஆற்றுநீர் பயன்படுகின்றது. ஆற்றங்கரையிலேயே மக்களின் பண்பாடும், நாகரிகமும் வளர்ந்தன என்று கூறுவர். தமிழர்களின் பண்பாட்டையும், நாகரிகத்தையும் பறைசாற்றும் இடங்களில் தென்னாட்டின் உயிர்நாடியாக விளங்குவது திருநெல்வேலி மாவட்டமே ஆகும். அம்மாவட்டத்தில் பாயும் ஆறுகள் அனைத்தும் மேற்கு தொடர்ச்சி மலையில் உருவாகி வங்கக்கடலில் கலக்கின்றன. தமிழ்நாட்டிலேயே உருவாகி, தமிழ்நாட்டிலேயே கடலில் கலக்கின்ற பெருமை பெற்ற ஒரே நதி தாமிரபரணியே ஆகும். தமிழ் இலக்கியங்களில் அத்தகைய தாமிரபரணி ஆறு, பொருநை நதி என்றே அழைக்கப்படுகின்றது. இவ்வாற்றின் தொன்மையினையும், சிறப்பினையும் ஆய்ந்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

குறிப்புச்சொற்கள்: தமிழ் இலக்கியங்கள், தாமிரபரணி, தொன்மை, ஆறுகள், அணைகள்.

முன்னுரை

மனித நாகரிகத்தின் முதல் பிறப்பிடமாக ஆறு அமைகின்றது. ஆறு ஓடிய வழிகள் மூலமே மனிதன் பல இடங்களுக்குக் குடி பெயர்ந்தான். ஆறு என்றால் 'வழி' என்று பொருள். தண்ணீர் செல்லும் வழி என்பதால் ஆறு எனப் பெயர் வந்ததாகக் கூறுவர். பத்துப்பாட்டில் அமைந்துள்ள ஆற்றுப்படை இலக்கியம் வழிப்படுத்துவதாகவே அமைகின்றன. ஆறு என்பது இயற்கையாகச் செல்லும் நன்னீரைக் கொண்ட ஒரு பெரிய நீரோட்டம் ஆகும். தாவரங்கள் அற்ற நிலையில் கூட ஆக்சிஜன் மிகுந்து காணப்படுகின்றது. மலைகளில் தொடங்கி ஏதாவது ஆற்றிலோ, ஏரியிலோ, கடலிலோ இணைகின்றன. ஆற்றின் நீரோட்டம் புவி ஈர்ப்புவிசையின் காரணமாக ஏற்படுகின்றது. சில ஆறுகள் இன்னொரு நீர் நிலையை அடையும் முன்பே நிலத்துக்குள் உறிஞ்சப்படுவதோ அல்லது வறண்டு விடுவதோ உண்டு. ஆனால் என்றும் வற்றாது செல்லும் ஒரு நதியாக தாமிரபரணி விளங்குகின்றது. அந்நதியின் பெருமையினையும், தனித்துவத்தையும் ஆய்ந்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

தென்பாண்டி நாடு

பழங்காலத்தில் தமிழ்நாடு சேரநாடு, சோழநாடு, பாண்டிநாடு என்னும் முப்பிரிவுகளைக் கொண்டிருந்தது. இவற்றுள் பாண்டிநாடு என்று சொல்லப்பெற்ற பகுதி,

இன்றைய மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்கள் அடங்கிய வட்டாரம் எனலாம். இந்தப் பாண்டியநாடே பழம்பெரும் நாடாகப்போற்றப்பட்டுள்ளது. இங்கு தான் தமிழ்மொழி பிறந்து வளர்ந்து சிறப்புற்றது என்பர். அதங்கோட்டாசான், தொல்காப்பியர், பனம்பாரனார், மாறோக்கத்து நப்பசலையார், காக்கைப்பாடினியார், நத்தத்தனார் நம்மாழ்வார், பெரியாழ்வார், குமரகுருபரர், திரிகூடராசப்பக் கவிராயர், கவிராசப் பண்டிதர், எனத் தமிழ் வளர்த்த எண்ணற்ற புலவர்கள் வாழ்ந்த இடமும் இதுவே ஆகும். இதனைத் தென்பாண்டி நாடு, தென்தமிழ்நாடு, பொருநை நாடு எனப் பலவாறு புகழ்ந்துள்ளனர். இப்பாண்டியநாடு இரு பகுதிகளாகக் கருதப்பட்டது. ஒன்று வைகையாறு பாயும் மதுரை மாவட்டம் இதை நாம் வடபாண்டிநாடு என்று கூறுவதில்லை. ஆனால், தண்பொருநை ஆறு பாயும் தென்பகுதியை மட்டும் தென்பாண்டிநாடு என்று குறிப்பிடுகின்றோம். மாணிக்கவாசகர் தம் திருவாசகத்தில் என்றும் "அருள் புரிவான் நாடு தென்பாண்டிநாடே தெளி" என்றும், "தில்லையுள் கூத்தனே! தென் பாண்டி நாட்டானே" என்றும், "குயிலே! தென் பாண்டி நாடனைக் கூறுவாய்" என்றும் தென்பாண்டி நாட்டையே சிறப்பித்துக் குறிப்பிட்டுள்ளார். இப்பாண்டிய நாட்டின் தென்பகுதியாகிய திருநெல்வேலி மாவட்டமே தென்பாண்டிநாடு என்று வழங்கப்பட்டது. இதனையே புலவர்கள் பொருநைநாடு என்று புகழ்ந்தனர்.

> **ஆப்கானியர் மதுரையை வென்றாலும், ராமநாதபுரம், தஞ்சாவூர் (ம) திருநெல்வேலியின் பகுதிகளைப் பாண்டியர் தொடர்ந்து வைத்திருந்தனர். விஜயநகர ராயர்கள் தெற்கு நோக்கி தம் அதிகாரத்தை விரிவுபடுத்தும் வரையும், பதினாறாம் நூற்றாண்டு இறுதிவரையில் அரசியல் களத்திலிருந்து மறைந்து போகும் வரையம்.பாண்டியர் கிருநெல்வேலியின் சில பகுதிகளில் வரம்புக்குட்பட்ட செல்வாக்குச் செலுத்தினர் (தமிழ் நாட்டு வரலாறு, ப. 168)**

என கே.ராஜப்பன் அவர்கள் பாண்டியர்களின் ஆட்சிக்குட்பட்டு திருநெல்வேலி இருந்ததைக் குறிப்பிடுகின்றார். அந்நகரைச் சுற்றிலும் நெல் வயல்கள் வேலி போல அமைந்திருந்ததால் திருநெல்வேலி எனப்பெயர் பெற்றது. முற்காலத்தில் திருநெல்வேலிக்கு மூங்கில் காடு என்னும் பொருள் கொண்ட 'வேணுவனம்' என்னும் பெயரும் இருந்துள்ளது. காடுகள் திருத்தப்பட்டு கழனியான பிறகு நெல்லையம்பலம், சாலிவாடி, சாலிநகர், நெல்வேலி, என அப்பகுதிக்கு பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்பர்.

திருநெல்வேலியின் கைலாசபுரத்தில் அமைந்துள்ள தைப்பூச மண்டபமும், திருப்புடை மருதூரில் உள்ள தைப்பூச மண்டபமும் புனிதமானதாகக் கருதப்படுகின்றன. திருநெல்வேலி மாவட்டப் பொருளாதாரத்தில் முதன்மையான பங்கு வகிப்பது உழவுத்தொழில். தாமிரபரணி ஆற்றின் மூலம் இங்கு உழவுத்தொழில் நடைபெறுகின்றது. இங்குக் குளத்துப் பாசனமும் கிணற்றுப் பாசனமும் கூடப் பயன்பாட்டில் உள்ளன. இருபருவங்களில் நெல் பயிரிடப்படுகின்றது. மானாவாரிப் பயிர்களாகச் சிறுதானியங்கள், எண்ணெய் வித்துகள், காய்கனிகள், பருத்தி, பயறு வகைகள் பயிரிடப்படுகின்றன. **"தென்பாண்டி நாட்டுக்குப் பொருநையாறு உயிர்நாடியாகும்" (தமிழக வரலாறும் பண்பாடும், ப. 474)** என டாக்டர் மா இராசமாணிக்கனாரும் குறிப்பிடுகின்றார்.

மலர் - 5, இதழ் - 2, வைகாசி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்
காடும் உடையது அரண் (குறள் - 742)

என வள்ளுவரும் நீரின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கின்றார்.

உலக உயிர் அனைத்திற்கும் உயிர் வாழ்வத்ற்கான மூல ஆதாரமாக விளங்குவது நீர் ஆகும். உலகில் தோன்றிய முதல் உயிர் நீரிலிருந்து தோன்றியதாக அறிவியல் கூறுகின்றது. மக்களின் நல்வாழ்விற்கும், நல்வளத்திற்கும் சுற்றுப்புறச் சூழல் தூய்மைக்கும் அடிப்படையாகத் திகழ்வது நீராகும். மனிதனுக்குத் தேவையான உணவு உற்பத்தியின் உயிர்ப் பொருளாகத் திகழ்வதும் நீராகும். (கோ. ஜெயசீலன், ப. 86)

என முனைவர் மா.கார்த்திகேயன் அவர்கள், சூழலியல் நோக்கில் சங்கத் தமிழரின் நீர் மேலாண்மை என்ற கட்டுரையில் நீரின் பெருமையை எடுத்துரைக்கின்றார். அதன் சிறப்பை ஔவையாரும்,

வரப்புயர நீருயரும் நீருயர நெல்லுயரும்
நெல்லுயரக் குடியுரும் குடியுயரக் கோலுயரும்
கோலுயரக் கோனு யர்வாள் (அமுதத் தமிழ் தந்த ஔவையார், ப. 244)

என்று கூறுகின்றார். நில வளத்தின் அடிப்படையில் மக்களின் வாழ்வும், மக்களின் அடிப்படையில் அரசனின் உயர்வும் அமைவதற்கு நீர் முக்கிய காரணமாக இருப்பதை அறியமுடிகின்றது

பொதிகை மலையும் இயற்கை அமைப்பும்

குறிஞ்சி, முல்லை, மருதம்,நெய்தல், பாலை என்ற ஐவகை நில அமைப்பின் சிறப்பையும் இம்மாவட்டம் பெற்றுள்ளது. திருநெல்வேலியில் சிறப்புமிக்க பழமையான மலையாக பொதிகைமலை விளங்குகின்றது. இங்குள்ள பொதிகை மலை மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியாக அம்பை வட்டத்தில் பாபநாசம் அருகில் பரவிக் கிடக்கின்றது. இதன் ஒரு பகுதி கேரளநாட்டையும், மற்றொரு பகுதி திருநெல்வேலி மாவட்டத்தையும் தழுவிக்கிடப்பதாயினும் அதன் முழுப்பயனும் இம்மாவட்டத்திற்கே உரியதாக அமைகின்றது. திருக்குறுங்குடிக்கருகில் இம்மலை 1828.8 மீ. உயர்ந்து நிற்கின்றது. செம்மண் மலை என்றும், செம்மண் பொத்தை என்றும் இம்மலை அழைக்கப்படுகின்றது. இம்மலையில் அகத்தியர் வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. இம்மலையின் சில பகுதிகளில் காப்பி, தேயிலை, மிளகு, ஏலக்காய், சாதிக்காய், தேக்கு போன்றவை பயிரிடப்படுகிறது. குற்றாலமலை, கவிரமலை, திருமலை, கழுகுமலை, தோரணமலை, மொட்டைமலை, கோட்டைமலை, குளிராட்டிமலை, பஞ்சந்தாங்கிமலை போன்ற மலைகளும் இம்மாவட்டத்தில் உள்ளன. இங்கு உள்ள பொதிகை மலை உருவத்தில் சிறியதாயினும், தமிழர்கள் அதனை இமயமலைக்கு ஒப்பாகப் பெருமைப்படுத்தியுள்ளனர் என்பதை அறிய முடிகின்றது.

முத்தீ விளக்கின் துஞ்சும்
பொற்கோட்டு இமயமும் பொதியமும் போன்றே (புறம்., பா. 2: 23-24)

மலர் - 5, இதழ் - 2, வைகாசி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

என இமயமலையோடு பொதிகைமலையை வைத்துப் போற்றும் பண்பைக் காணமுடிகின்றது. சந்தனமும், தென்றலும் வீசுகின்ற இம்மலையைப் பட்டினப்பாலை குடமலை என்று புகழ்கின்றது. குமரகுருபரர் இதனை,

திங்கள்முடி சூடும்மலை தென்றல் விளையாடும்மலை
தங்கு புயல் குழுமலை தமிழ்முனிவன் வாழுமலை
அங்கயற்கண் அம்மை திருஅருள்சுரந்து பொழிவதெனப்
பொங்கருவி தூங்குமலை பொதியமலை என்மலையே (மதுரை மீனாட்சியம்மை குறம், பா. 12)

என்றும்,

சிங்கமும்வெங் களிறுமுடன் விளையாடும் ஒருபால்
சினப்புலியும் மடப்பிணையும் திளைத்திடும் அங்(கு) ஒருபால்
வெங்கரடி மரையினொடும் விளையாடும் ஒருபால்
விடஅரவும் மடமயிலும் விருந்தயரும் ஒருபால்"
... தென்பொதிய மலை காண்மற்(று) எங்கள் மலை அம்மே (மதுரை மீனாட்சியம்மை குறம், பா. 14)

என்றும் குறத்தி பொதிகைமலையின் வளத்தைப் பாடுவதாகக் குமரகுருபரர் பாடுகின்றார். இம்மலை பகைவனையும் நண்பனாய் மாற்றிவிடும் எனப் புகழ்கின்றார். பாண்டிய மன்னனைத் "தென்னம் பொருப்பன்" (புறம்., பா. 215: 6) எனப் புறம் பேசுகின்றது. தென்திசையில் உள்ள அழகிய பொதிகை மலைக்கு உரியவர் பாண்டியர் எனலாம்.

இயற்கை வளங்கள் எப்போதும் வைப்புநிதி போல் கருதப்பட்டு அதில் வரும் விளைவுகள் வட்டியைப் போல் எடுத்துப் பயண்படுத்த வேண்டும் வைப்பு நிதி தலைமுறை தலைமுறையாகப் பாதுகாப்புடன் பின்வரும் எதிர்காலச் சந்ததிகளுக்கு அளிக்கப்பட வேண்டும். (தமிழ்நாடு நேற்று - இன்று - நாளை, ப. 381)

என்று குறிப்பிடுவது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

தாமிரபரணியின் பெயர்க்காரணமும் தோற்றமும்

தாமிரம் என்றால் செம்பு. அதாவது தாமிரம் கலந்த பரணி நதி தாமிரபரணி நதியாயிற்று. பொதுவாக மனித உடலுக்குத் தாமிரசத்து என்பது நோய் தீர்க்கும் அரிய மருந்தாகக் கருதப்படுகின்றது.அவ்வகையில் ஆற்றின் கரையில் தாமிரசத்து நிறைந்து காணப்படுகிறது. ஆகவே தாமிரபரணியில் குளித்தால் பலநோய்கள் தீர்ந்துவிடும் அற்புதம் நடக்கின்றது என்பர். வால்மீகி இராமாயணத்திலும், வியாசர்பாரதத்திலும், காளிதாசரின் இரகுவம்சத்திலும், தாமிரபரணி பற்றி "தாம்பிரபரணி" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பெயர் எல்லாம் மருவி தான் இப்போது தாமிரபரணி என்று அழைக்கப்படுகிறது. தாமிரபரணி ஆறு பாபநாசத்தில் இருந்து புல்வெளிகள் வழியாக கிழக்கு நோக்கிப் பாய்கிறது. கோதையாற்றின் கிளை நதிகளான கோதை மற்றும் மதுமலை ஆகிய இரண்டு ஓடைகள் சங்கமிக்கும் இடமே இந்த ஆற்றின் மூலாதாரமாகும். தாமிரபரணியின் நீர் செந்நிறத் தோற்றத்தில் காட்சியளிக்கும். அதற்கு அந்த ஆறுகளில் கரைந்து நிற்கும் செம்மண் துகள்களே காரணம் ஆகும். தாமிரபரணி பொருநை நாட்டிலேயே பிறந்து பொருநை நாட்டில் 2815 கிலோ மீட்டர் பரப்பை வளமாக்கி பொருநை நாட்டு

கடலிலேயே புன்னைக்காயலில் கலக்கிறது. எனவே இதனைத் தமிழ்நாட்டில் நைல் என்பர். பொருநையின் நீளம் 121 கி.மீ. தாமிரச்சத்து நிறைந்ததாலும் தன் பொருநை என்ற சொல்லின் திரிபாலும் இப்பெயர் பெற்றது என்பர். பொருநையுடன் கலக்கும் முதல் ஆறு மணிமுத்தாறு ஆகும்.

வற்றாத ஜீவநதிகளில் ஒன்றான தாமிரபரணியாற்றின் பிறப்பிடம், மேற்குத் தொடர்ச்சி மலையான முண்டந்துறை காட்டுப்பகுதியில் உள்ள பூங்குளம் என்ற இடம் ஆகும். கடல் அடர்ந்த காட்டுப் பகுதியான முண்டந்துறையில் பல ஆயிரம் ஆண்டுகளாக படிந்து இருக்கும் செடி, கொடிகளின் எச்சங்களும், மண்ணும் பஞ்சு மெத்தை போன்ற அமைப்பைப் பெற்று இருப்பதால், தென் மேற்கு பருவமழை மற்றும் வடகிழக்கு பருவமழை காலங்களில் அங்கு பெய்யும் மழை நீர் முழுவதையும் அந்த இடம் அப்படியே உள்வாங்கிக் கொண்டு, மழை அல்லாத காலங்களில் சிறுகச் சிறுக வெளிவிடும் போது அது, தாமிரபரணி ஆறாக உருவாகி, ஆண்டு முழுவதும் வற்றாமல் ஓடி வருகிறது. தாமிரபரணி நதி ஆனது திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களின் வழியே பாய்ந்து இறுதியில் வங்கக் கடலில் கலக்கிறது. தாமிரபரணி நதி வைகாசி மாதம் விசாக நட்சத்திரத்தில் உற்பத்தி ஆனதாகக் கூறப்படுகிறது. இலங்கைத்தீவிற்கு 'தாப்ரபன்னெ' என்றும் 'தாம்பபன்னி' என்றும் பெயர்கள் இருந்திருக்கிறது. மலைத்தோட்டங்களில் வேலை செய்யவேண்டி வந்து குடியேறிய மக்கள் இந்நதிக்கு தீவுப்பெயரால் 'தாம்பபன்னி' என்று அழைத்தார்கள். அதுவே இப்பொழுது தாமிரபரணி என்று அழைக்கப்படுகிறது. என இந்த நதியைப் பற்றி பல சுவாரஸ்யமானகதைகள் உண்டு. ஆண்டு முழுவதும் வற்றாமல் பாயும் இந்த ஆற்றின் நீர் திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களின் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்து வருகிறது. பாரதியார்,

காவிரி தென்பெண்ணை பாலாறு தமிழ்
கண்டதோர் வையை பொருனை நதி என
மேவியயாறு பல வோடத் திரு
மேனி செழித்த தமிழ்நாடு (பாரதியார் கவிதைகள், ப. 152)

எனத் தாமிபரணியைப் பொருநை நதியாகப் பெயரிட்டு அழைக்கின்றார். இராமாயணத்தில் சீதையைத் தேட சுக்கிரீவன் வானரப்படைகளைத் தெற்கு நோக்கி அனுப்புகின்றான். அப்போது இராமன் அனுமனை நோக்கி நீ எந்த வேலைக்கு அனுப்பப்படுகிறாய் என்பதை நன்கு உணர்வாயாக. நீ செல்லும் வழியில் பொருநை ஆறு தோன்றும். அப்பொதிகைமலைப் பக்கம் செல்லாதே. அங்கே போனால் அகத்தியர் நடத்தும் தமிழ்ச்சங்கம் உள்ளது. அதனைக் கண்டால் மனதைப் பறி கொடுக்க நேரிடும். ஆதலின் அம்மலைக்கு இடப்பக்கமாகப் பொருநை என்னும் ஆறு பாயும் இடத்தைக் கடந்து மகேந்திர மலைப்பக்கமாகச் செல்லுவாயாக என்று உரைக்கின்ற போது இங்கு கம்பரின் தமிழ்ப்பற்று வெளிப்படுகின்றது. இதனை,

தென்தமிழ்நாட்டு அகன் பொதியில் திருமுனிவன்
தமிழ்ச்சங்கம் சேர்கிற்பீரேல்
என்றும் அவன் உறைவிடம் ஆம் ஆதலால்
அம்மலையை இடத்திட்டு ஏகிப்
பொன்திணிந்த புனல் பெருகும் பொருநை எனும்

மலர் - 5, இதழ் - 2, வைகாசி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

திருநதியின் பொழிய நாகக்
கன்ற வளர் தடஞ்சாரல் மகேந்திரமா
நெடுவரையும் கடலும் காண்பீர் (கம்ப. கிட்கிந்தா. நாடவிட்டபடலம், 31)

என்ற வரிகள் விளக்குகின்றன.



படம் 1: பொருநை நதி தோற்றம் மற்றும் முடிபு

தாயாக வீரமுழக்கம் இடல்

நீர் இன்றி அமையாயது இவ்வுலகு… தாயையும் தண்ணீரையும் பழிக்கக்கூடாது… என்பார்கள். தாய்மைக்கு ஈடு இணை எதுவுமில்லை; நீரும் அத்தகையதே. அறத்தை வழியுறுத்துவதும், வீரத்தை விதைப்பதும் ஒரு தாயின் கடமை. அத்தாயினைப்போல் தாமிரபரணி ஆறு விளங்குகின்றது. என் நீரைக் குடித்து வளருங்கள். ஒப்பில்லா வீரர்களாகி சுதந்திரத்தின் முத்திரையைப் பதியவையுங்கள். அயலான் ஒருவன் என்னைத் தீண்டுவானாகில் உங்கள் உயிரைக் கொடுத்தேனும் என்னைக் காப்பாற்றுங்கள் என வாழ்த்தி வீரமுழக்கம் இடுவதை,

அலை யெறிந்தீதோ ஆர்த்தனள் கேண்மின்!
முரைவசுரந் தூட்டிய முதுநதிமாதா! தாம்பிர பன்னிக்கு ஜே ! ஜே!
… பொதியா மலையிற் புறப்பட்டிங்குதன்
படியே உலாவுமிச் சிறுகால் (மனோன்மணீயம். அங்கம், 4, ப. 190)

என பெ.சுந்தரம்பிள்ளை தமது நூலில் பதிவிடுகின்றார். புறநானூறும் பொருநை என்றே அழைக்கின்றது.

வரிமணற் புனை பாவைக்குக்
குலவுச்சினைப் பூக்கொய்து

மலர் - 5, இதழ் - 2, வைகாசி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

தண்பொருநைப் புனல்பாயும்... (புறநானூறு, பா. 11: 3-5)

என எடுத்தியம்புகின்றது.

> **சங்க இலக்கியத்தில் எட்டுத்தொகையில் நீர் மேலாண்மை பற்றி மக்கள் தெளிவான அறிவு பெற்றிருந்தனர் என்பதை அறியமுடிகிறது இயற்கை முறையில் இயற்கையைச் சார்ந்தே வாழ்ந்தனர். மக்கள்தொகை குறைவாக இருந்ததோடு தொழிற்சாலைகளும் அதிகமில்லாததால் மாசுபாடு குறைவாக இருந்ததால், மக்கள் ஆரோக்கியத்துடனும் மகிழ்வுடன், இயற்கையைத் தகுந்த முறையில் பயன்படுத்தி மனநிறைவுடன் வாழ்ந்தனர். இப்பகுதியில் சங்ககால மக்கள் ஐவகை நிலங்களில் நீரினை மழை, அருவி, சுனை, காட்டாறு, ஆறு, பொய்கை, குளம், கிணறு போன்ற நிலைகளில் நீரைச் சேமித்து வைத்து வாழ்ந்துள்ளனர். (எட்டுத்தொகை நூல்களில் நீர் குறித்த சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, ப. 13)**

என ரெஜினா அவர்கள் அக்கால மக்களின் நீர் சேமிப்பு முறையினை எடுத்துரைக்கின்றார். இன்று குடிநீரைக் கூடப் புட்டியில் அடைத்து விற்கும் நிலை ஏற்பட்டுள்ளதைப் பார்க்க முடிகின்றது.

வைணவ, சைவ ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டு

தமிழர்கள் கட்டிடக்கலையில் சிறப்புற்று இருந்தார்கள் என்பதற்குப் பல சான்றுகள் உண்டு. அதற்கு உதாரணமாக தாமிரபரணி நதியில் கட்டப்பட்ட படித்துறைகளையும், மண்டபங்களையும் எடுத்துக்காட்டலாம். தாமிரபரணி ஓடும் கரையெல்லாம் நூற்றுக்கணக்கான மண்டபங்கள் சிறியதும், பெரியதுமாக காட்சியளிக்கின்றன. திருநெல்வேலியைப் பற்றி தெரிந்து கொள்வதற்கு சில புத்தகங்கள் உள்ளன.

> **இம்மண்ணின் வரலாற்றை ஸ்டூவர்ட் (1876), கால்டுவெல் (1881), பேட் (1917) ஆகியோர் எழுதிய வரலாற்று நூல்கள் மட்டுமல்லாமல், எட்டயபுரம் குருகுகதாச பிள்ளை(1936) எழுதிய '*திருநெல்வேலிச் சீமை சரித்திரம்*', கணபதியா பிள்ளையின் Ettayapuram past and present, அண்ணாமலைப் பல்கலைக் கழக முன்னாள் பேராசிரியர் ச. கணபதி ராமனின் 'பொருநை நாடு', சோலெயின் 'திருநெல்வேலி மாவட்டம்' போன்ற பல வரலாற்று நூல்கள் வெளிவந்துள்ளன. (நிமிர வைக்கும் நெல்லை, ப. 32)**

என்று என்கே.எஸ்.இராதாகிருஷ்ணன் கூறுகின்றார் .இதனைச. இளங்கோமணி, திருநெல்வேலியின் தோற்றமும் அதன் பரிமாணமும் என்ற தமது கட்டுரையில் பதிவிடுகின்றார். இவை மட்டுமின்றி அப்பணசாமி, முத்தாலங்குறிச்சி காமராஜ் ஆகியோர்களும் திருநெல்வேலி பற்றி எழுதியுள்ளனர். பூலோக வைகுண்டம் எனப்படும் ஸ்ரீரங்கம் எந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறதோ, அதே முக்கியத்துவத்துடன், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள ஸ்ரீவைகுண்டம், ஆழ்வார்திருநகரி, தென் திருப்பேரை, தொலைவில்லிமங்களம், திருக்குளந்தை, திருப்புளியங்குடி, திருக்கோளூர், வரகுணமங்கை. அரவிந்தலோசன் ஆகிய தலங்கள் நவதிருப்பதி என்று அழைக்கப்படுகின்றன. நவ கைலாயக் கோவில்களும், நவதிருப்பதி கோவில்களும் தாமிரபரணி கரை ஓரமாகத்தான் அமைந்திருக்கின்றன. வைணவ, சைவ ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக தாமிரபரணி விளங்குகிறது என்று

மலர் - 5, இதழ் - 2, வைகாசி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

சொன்னால், அது மிகையாகாது. திருநெல்வேலியிலுள்ள நெல்லையப்பர் கோவிலானது தமிழகத்திலேயே மிகப்பெரிய சிவாலயம் ஆகும். இது, பாண்டிய மன்னர்களால் கி.பி.700ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. நெல்லையப்பர் கோவிலில் சுவாமிக்கு தனி ராஜகோபுரமும், அம்பாளுக்கு தனி ராஜகோபுரமும் உண்டு. பொதுவாக கோவில்களில் சுவாமி, அம்பாள் இருவருக்கும் ஒரே ஆகமப்படிதான் பூஜை நடக்கும். ஆனால், இங்கு காந்திமதி அம்பாள் தனிக்கோவிலில் இருப்பதால் காரண ஆகமப்படியும், நெல்லையப்பருக்கு காமிக ஆகமப்படியும் ஆறு கால பூஜை நடக்கிறது. நெல்லையப்பரும் காந்திமதியும், தாமிரபரணிக்கு நீராடச் செல்லும் வைபவமும் உண்டு. ஐந்து சபைகளில், நெல்லை தாமிர சபை. தாமிர சபை பக்கத்தில் தாமிரபரணி தேவிக்கு சிலையும் உள்ளது. மகாத்மியம் 'இந்தப் புண்ணிய நதி, வைகாசி விசாக நாளில் உற்பத்தியானது' எனக் கூறுகின்றது.

துணை ஆறுகளும் அணைக்கட்டுகளும்

தாமிரபரணி ஆற்றின் துணை ஆறுகளாக காரையாறு, சேர்வலாறு, மணி முத்தாறு, கடனா நதி, பச்சையாறு, சிற்றாறு மற்றும் இராம நதி முதலியன அமைகின்றன. தாமிரபரணி ஆற்றில் உள்ள முக்கியமான அணைக்கட்டுகளாக காரையார் அணை (மேலணை), பாபநாசம் அணை (கீழணை) சேர்வலாறு அணை, மணிமுத்தாறு அணை, கோடைமேலழகியான் அணை (தலையணை), நதியுண்ணி அணைக்கட்டு, கன்னடியன் அணைக்கட்டு, அரியநாயகிபுரம் அணைக்கட்டு, பழவூர் அணைக்கட்டு, சுத்தமல்லி அணைக்கட்டு, மருதூர் அணைக்கட்டு, திருவைகுண்டம் அணைக்கட்டு போன்ற அணைக்கட்டுகளில் இருந்து கால்வாய்கள் மூலம் தண்ணீரானது பாசனத்திற்குப் பிரித்து அனுப்பப்படுகிறது. இந்தத் தண்ணீர் தான் திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தைத் தமிழகத்தின் இரண்டாவது நெற்களஞ்சியமாக மாற்றுகிறது.

> **சுற்றுச்சூழலில் முக்கியமான காரணியாக அமைவது நீர். அதாவது குளம், குட்டை ஏரிகள், ஆறுகள், கடல்கள் என அனைத்தினுடைய தன்மையும், தரமும் காக்கப்பட வேண்டும். மாந்தன் பயன்பாட்டிற்கு மிகக் குறைந்த அதாவது ஒரு விழுக்காடு தண்ணீர் உலகில் உள்ளது. அதைப் பேண வேண்டியது மிகவும் இன்றியமையாதது. (சூழலியல் நோக்கில் புறநானூறு, ப. 298)**

என கோ. பெரியசாமி அவர்கள் நீரின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கின்றார்.

ஆற்று வெள்ளம்

பொருநை நதி எனப்படும் தாமிரபரணியில் பெருகிய வெள்ளம் கடலை எதிர்த்துச் சென்று அதன் வயிற்றை கிழித்துக் கொண்டு உள்ளே புகுந்து ஒலியெழக் கடலில் கலந்து கிழக்கே சூர்ய உதயத்திற்கும், மேற்கே பொதிகை மலைக்கும் சமமாகப் பெருக்கெடுத்து ஓடும். அந்நீரின் வேகத்தால் அச்சம் கொண்டு துதிக்கை மூக்கன் என்னும் மீன், பண்ணைச் சாலைமீன், எண்ணெய் மீன், பசலிமீன், கசலி மீன், பழம்பாசி மீன், மகரமீன், சள்ளை மீன் , மத்திமீன், உல்லம் மீன், பொத்திமீன், மடந்தைமீன், கடந்தை மீன், சம்பான் மீன், நொறுக்கி மீன், பஞ்சலை மீன், கருங்கண்ணி மீன் ஆகிய மீன்கள் பெருகி வரும் நீரின் வேகத்தால் மணலுக்குள் புதைந்தும், கரையில் ஒதுக்கியும், கடலை நோக்கிப்

பாய்கின்ற அழகரான திருமாலின் கருணை வெள்ளமாய் நிற்கின்ற தாமிரபரணியின் புதுமையை,

உதைத்து விசை கொண்டெதிர்த்துக் கடலின்
உதரங் கீறி யதிரும் நீர்
... பொருநை யாறு பெருகி வாற
புதுமை பாரும் பள்ளீரே (முக்கூடற்பள்ளு, பா. 50)

என்ற பாடல் எடுத்துரைக்கின்றது. பலவகையான மீன்களின் பெயர்களைப் பற்றிய குறிப்பையும் அறிந்து கொள்ள முடிகின்றது. **"உலகில் உயிர்கள் வாழக் காரணமாக விளங்குவது நீர். ஒழுக்கம் நிலை பெற்றிருக்கவும் தண்ணீரே காரணம் அடுத்த உலகப் போர் தண்ணீருக்காக இருக்கலாம்." (வள்ளுவர் கண்ட உலகம், ப. 124)** என்ற செய்தியை நோக்கும்போது தண்ணீரின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ள முடிகின்றது. கடவுளுக்கு கடவுளாக விளங்கும் தண்ணீரின் நிலையை,

தண்ணீருக்கு நிறமில்லை என்கிறது அறிவியல், வானத்திற்கு நிறத்தைத் தருகிறது தண்ணீர். நீருக்கு வடிவம் இல்லை. மண்ணிற்கு வடிவத்தைத் தருகிறது. கடவுள் இருக்கிறாரா? இல்லையா? என்ற சந்தேகத்திற்கு இன்று வரையிலும் முடிவில்லை. கடவுள் தூணிலும் இருப்பார், துரும்பிலும் இருப்பார் என்பது மக்களின் நம்பிக்கையாக இருந்து வருகிறது. அந்தத் தூணிற்குள்ளும் துரும்பிற்குள்ளும் நுளைந்து தங்குவதால் தண்ணீர் கடவுளின் கடவுளாகக் காட்சிதருகிறது. (பா. ஈஸ்வரன், ப. 868)

முனைவர் பா.ஈஸ்வரன் தண்ணீரின் சிறப்பை மொழிகின்றார்.

தாமிரபரணி ஆற்றங்கரைப் போர்

பண்டைத் தமிழர் ஆற்று நீர் பாயும் நிலப் பரப்பைப் பண்படுத்திப் பயிர் செய்து மருத நிலமாக்கினார்கள். ஒரு தாய் தன் பிள்ளையை வளர்ப்பது போல் மருத நிலத்தை நீரூட்டி வளர்ப்பது நதியென்று அதனைக் கொண்டாடினார்கள். காவிரியாற்றைப் பொன்னியாறென்று புகழ்ந்தார்கள். வைகையாற்றைப் "பொய்யாக் குலக்கொடி "என்று போற்றினார்கள். சுருங்கச் சொல்லின் நதியே நாட்டின் உயிர் என்பது தமிழர் கொள்கை. ஆற்றங் கரைகளிலே சிறந்த ஊர்கள் அமைந்தன. 'ஆறில்லா ஊருக்கு அழகில்லை' என்ற பழமொழியும் எழுந்தது. முற்காலத்தில் சிறந்து விளங்கிய நகரங்களும், துறைமுகங்களும் ஆற்றையடுத்தே உண்டாயின.

உறையூர் என்பது சோழநாட்டின் பழைய தலைநகரம். அது காவிரிக் கரையில் அமைந்திருந்தது. பட்டினம் என்னும் சிறப்புப் பெயர் பெற்ற சோழநாட்டுத் துறைமுகம் காவிரியாறு கடலில் புகுமிடத்தில் வீற்றிருந்தது. அக் காரணத்தால் புகார் என்றும், காவிரிப்பூம்பட்டினம் என்றும் அந் நகரம் பெயர் பெறுவ தாயிற்று. அவ்வாறே பாண்டி நாட்டுப் பெரு நதியாகிய வைகையின் கரையில் மதுரை என்னும் திருநகரம் அமைந்தது. பாண்டியர்க்குரிய மற்றொரு சிறந்த நதியாகிய பொருநையாறு கடலோடு கலக்குமிடத்தில் கொற்கை என்னும் துறைமுகம் சிறந்து விளங்கிற்று. (தமிழகம் ஊரும் பேரும், ப. 15)

என ரா. பி.சேதுப்பிள்ளை கூறுவது ஆற்றின் பெருமையை உணர்த்துகின்றது. ஒரு சமயம் திருவிதாங்கூர் மன்னர் தனக்கு செலுத்த வேண்டிய திறையை கட்ட மறுக்கவே, பேரரசர் அச்சுதராயர் படையெடுத்து வந்து திருவரங்கத்தில் முகாமிட்டிருக்க அச்செய்தியைக் கேள்விப்பட்ட விசுவநாதர் பேரரசுப் படைக்குத் துணையாகத் தம்முடைய படையையும் அனுப்பி வைத்தார். 1532இல் தாமிரபரணி ஆற்றின் கரையில் நடைபெற்ற போரில், திருவிதாங்கூர் மன்னனையும், அவனுக்குத் துணையாக வந்த கிளர்ச்சியாளன் சாளுவ வீரநரசிம்மனையும் பேரரசுப்படைகள் தோற்கடித்தன. திருவிதாங்கூர் மன்னன் திறை செலுத்த ஒப்புக்கொண்டதால் மன்னிக்கப்பட்டான். இவ்விடம் தாமிரபரணி பாயும் இடம் ஆகும்.

> **பேரரசர் தனக்கு உதவியதற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் தென்காசிப் பாண்டியன், தன் மகளை அவருக்கு மணமுடித்துக் கொடுத்தான். விசுவநாதர் திருநெல்வேலி நகரத்தை விரிவாக்கி, அதன் பாதுகாப்பைப் பலப்படுத்தினார். (தமிழக வரலாறும் பண்பாடும், ப. 224)**

என்பதை முனைவர் ந.அறிவுராஜ் குறிப்பிடுகின்றார். பண்டைத் தமிழர்கள் ஆறுகள் கூடுந் துறைகளைப் புனிதமான இடங்களாகக் கருதிப் கொண்டாடினார்கள். அவற்றைக் கூடல் என்று அழைத்தார்கள். தொண்டை நாட்டில் பாலாறும், சேயாறும், கம்பையாறும் சேருகின்ற இடத்தில் அமைந்த ஊர் திருமுக்கூடல் என்று கூடல் பெயர் பெற்றது. அது போல நெல்லை நாட்டில் தாமிரபரணியும், சித்திரா நதியும், கோதண்டராம நதி என்னும் கயத்தாறும் ஒன்றுசேர்கின்ற இடம் முக்கூடல் என முற்காலத்தில் சிறந்திருக்கிறது.

முடிவுரை

தமிழகத்தின் சிறப்புப்பெற்ற ஆறுகளில் தனிச்சிறப்பாகவும், தனித்த அடையாளமாகவும் தாமிரபரணி ஆறு விளங்குகின்றது. தமிழ் வளர்த்த பொதிகைமலைச் சாரலை உடையதாய் வீறு பெறுகின்றது. வரலாற்றுச் சிறப்பு மிக்க பல தடயங்கள் கிடைக்கின்ற பொக்கிஷ பூமியாக உள்ளது. தனது தடம் மாறாது நீண்டு பயணிக்கின்ற பெருமை இப்பொருநை நதிக்கு மட்டுமே உண்டு என்பதை இக்கட்டுரை தெளிவுபட விளக்கி நிற்கின்றது.

குறிப்புகள்

[1] அருள்ராஜ், ந., தொகு. *தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும்.* பாவை பிரிண்டர்ஸ், 2010.
[2] இளங்குமரன், இரா., தொகு. *மதுரைமீனாட்சியம்மை குறம்.* திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், 1977.
[3] இளங்கோமணி, ச. "திருநெல்வேலியின் தோற்றமும் அதன் பரிமாணமும்." *கீற்று*, நவம்பர் 2021.
[4] இராசமாணிக்கனார், மா. *தமிழக வரலாறும் பண்பாடும்.* சாரதா பதிப்பகம், 2011.
[5] இராதாகிருஷ்ணன், கே.எஸ். *நிமிர வைக்கும் நெல்லை, பொதிகை, பொருநை.* பரிசல் அறக்கட்டளை, 2005.
[6] இராமசுப்ரமணியம், வ.த., தொகு. *கம்பராமாயணம்.* திருமகள் நிலையம், 2005.
[7] ஈஸ்வரன், பா. "கவிஞர் வைரமுத்து நீர் கவிதையில் சுற்றுச்சூழல் சிந்தனைகள்." *களஞ்சியம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்*, இதழ் 4, பிப்ரவரி 2026.

மலர் - 5, இதழ் - 2, வைகாசி 2057
இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

[8] கார்த்திகேயன், மா. “சூழலியல் நோக்கில் சங்கத் தமிழரின் நீர் மேலாண்மை.” *அரிமா நோக்கு*, ஜனவரி 2025.
[9] சேதுப்பிள்ளை, ரா.பி. *தமிழகம் ஊரும் பேரும்*. பழனியப்பா பிரதர்ஸ், 1946.
[10] துரைசாமிப்பிள்ளை, த. *அமுதத் தமிழ் தந்த ஔவையார்*. உமா பதிப்பகம், 2003.
[11] பக்தவச்சலம் வேணுகோபால், தொகு. *பாரதியார் கவிதைகள்*. லியோபுக் பப்ளிஷர்ஸ், 2004.
[12] பாலசுப்பிரமணியன், கு.வெ., தொகு. *புறநானூறு*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2004.
[13] புலியூர்கேசிகன், தொகு. *முக்கூடற்பள்ளு*. பாரி நிலையம், 1960.
[14] பெரியசாமி, கோ. “சூழலியல் நோக்கில் புறநானூறு.” *புதுப்புனல்*, மலர் 14, இதழ் 6, சூன் 2023.
[15] முருகானந்தம், ந. “தமிழ்நாடு நேற்று –இன்று- நாளை.” *தமிழ்த்துறை*, பாண்டிச்சேரி பல்கலைக்கழகம், 1997.
[16] ராஜப்பன், தொகு. *தமிழ் நாட்டு வரலாறு*. எதிர்வெளியீடு, 2015.
[17] ரெஜினா. “எட்டுத்தொகை நூல்களில் நீர் குறித்த சுற்றுச்சூழல் விழிப்புணர்வு.” *சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்*, தொகுதி 2, இதழ் 1, 2020.
[18] வரதராசனார், மு., தொகு. *திருக்குறள்*. தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், 1959.
[19] வேங்கடசாமி, மயிலை சீனி, பதிப்பாசிரியர். *மனோன்மணீயம்*. கௌரா பதிப்பகம், 2009.
[20] ஜெயசீலன் கோ. “வள்ளுவர் கண்ட உலகம்.” *அரிமா நோக்கு*, ஜுலை 2019, இராஜா பதிப்பகம்.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை.
கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை.
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.